கலைக்கதிர்

சிறப்பிதழ் ... சனவரி

COURTESY

G. Ramaswamy & Co.

Ganga Textiles

COIMBATORE 641 037

INSTITUTIONS RUN BY

P S G & SONS, CHARITIES

* P S G Elementary School,
  Peelamedu and Vedapatti
* Sarvajana Higher Secondary School
* P S G College of Arts and Science
* P S G Polytechnic
* P S G College of Technology
* Kalaikathir
* Gandhi Rural Centre
* P S G Maternity and
  Child Health Centre, Vedapatti
* P S G Industrial Institute
* P S G Metallurgy and Foundry Division

G. VARADARAJ
Managing Trustee

தந்தி : குமரன்

தொலைபேசி : மில்ஸ் : 89-323
89-203
ஆபீஸ் : 22933

தி குமரன் மில்ஸ் லிட்.

பீளமேடு - அஞ்சல்

கோயமுத்தூர் - 641 004

மில்ஸ் : நரசிம்மநாயக்கன்பாளையம்

இயங்கும் கதிர்கள் : 27,000

நாங்கள் தயாரிப்பவை :

40s 60s 70s 80s

90s 100s

ஸ்டேபிள் பைபர் : **20s**

மேற்படி நூல்கள் கோன்களிலும் கிடைக்கும்

quality that stands always high

Can Supply Plain & Alloy Steel Castings to any International Specification and Single Casting Weighing up to 7 tonnes, with Radio Graphic Quality.





SRI RAMAKRISHNA STEEL INDUSTRIES LIMITE

KARAMADAI-641104 COIMBATORE D: TAMILNADU

Phone : 54 Karamadai 311 Mettupalayam,

89388, 89389 Coimbatore

L.G. Balakrishnan & Bros. Ltd.

ROLON — Automotive & Industrial Chains

Elgi Equipments Limited.

ELGI — Air Compressors and Garage Equipments

Cyclon Products Private Limited.

CYCLON — Bicycle Chains & Heavy Duty Chains

Super Rubber Works & Elgi Rubber Products Limited.

LGB — Reclaimed Rubber

Festo Elgi Private Limited.

Festo ELGI — Wood Working Machinery, DC Motors, Railway Equipments and Textile Machinery.

IA HOUSE, TRICHY ROAD, COIMBATORE-641 018.

கலைக்கதிர்

மலர் 33 * ஜனவரி 1981 * இதழ் 1

நிருவாக ஆசிரியர்
ஜி. வரதராஜ்

கௌரவ ஆசிரியர்
ஜி. ஆர். தாமோதரன்

வாழ்த்துகிறோம்	2
பண்டைத் தமிழரின் பண்பட்ட உள்ளம்	3
உலக நாடுகளில் தமிழர் பண்பாடு	5
ஐந்தாவது உலகத் தமிழ் மாநாடு	13
கூவநூல் - ஓர் அறிமுகம்	17
உள்ளிருள் நீக்கும் ஒளி	25
நம்மாழ்வார் காட்டிய நல்ல நெறி	29
கலைக்கதிர் வளர்த்த தமிழாய்வு	33
கோவை மாவட்டத்தில் சிறு தொழில் அபிவிருத்தி	45
செவிக் குறையும் அதனை மீட்கும் வழிகளும்	49
செவிப்புலனின் சிறப்பு	57
ஊனமுற்றோருடன் எனது தொடர்பும் அனுபவமும்	61
முடநீக்கு புனர் வாழ்வு நிலையமும் அதன் சேவையும்	67
பார்வையற்றோர்க்குக் கற்பிக்கும் முறை	71
அசாதாரணக் குழந்தைகளும் வகைகளும்	75
வியப்பான விழியை இழப்பது விதியினாலா? ஆய்வுரை	81
வினா ? விடை !	85
சில முத்துக்கள்	87
செய்திகள்	88

விலை ரூ. 1-50

பூ சா கோ அறநிலையத்திற்காக கலைக்கதிர் அச்சகத்தில் அச்சிட்டு நிருவாக அறங்காவலர் திரு. ஜி. வரதராஜ் அவர்களை ஆசிரியராகக் கொண்டு கோவை பூளைமேடு பிஎஸ்ஜி அண்டு சன்ஸ் அறநிலையத்தின் கல்வி நிறுவனத்தாரால் வெளியிடப்படுகிறது

கலைக்கதிர் இதழில் வெளிவரு[ம்] கட்டுரை, கதை முதலியவற்றி[ன்] கருத்துகட்கு அவற்றை எழுதி[ய] ஆசிரியர்களே பொறுப்புடை[ய]வர்கள்

வாழ்த்துகின்றோம்

"தமிழுக்கு அமுதென்று பேர்" எனப் பாரதிதாசனும் "யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்" எனப் பாரதியாரும் தமிழின் பெருமையைப் போற்றிப் புகழ்ந்திருந்தாலும் தமிழ் மக்கள் அனைவரும் அதன் சிறப்பை உள்ளவாறு உணர்ந்து உயர வேண்டும், வளர்ந்துவரும் விஞ்ஞான உலகிற்கு ஏற்ற முறையில் ஈடு கொடுக்கவும், வணிகத் துறையில் வல்லமை பெற்று விளங்கவும் வழிவகைகள் காண வேண்டும் என்ற நோக்கத்தோடும், அறிவிற் சிறந்த பேராசிரியர்கள், மொழி வல்லுநர்கள், ஆராய்ச்சியாளர்கள் எல்லாரும் ஒன்று கூடி தமிழ் மொழியும் தமிழ் நாடும் உயரவல்ல கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ள வகை செய்யும் நோக்கத்தோடும். உலகம் முழுமையிலும் உள்ள தமிழ் பேசுகின்ற, தமிழ் அறிந்த, தமிழ் உணர்வு பெற்ற அறிஞர்களை ஒன்று திரட்டி நல்லுறவை வளர்த்து மொழி வளங்கூட்டும் நோக்கத்துடனும் மாடமலி மறுகினைப் பெற்ற கூடல்மா நகரில் 1981 ஜனவரித் திங்கள் 4-ஆம் நாள் முதல் 10-ஆம் நாள் வரை நடைபெறவுள்ள 5-ஆவது உலகத் தமிழ் மாநாடு எல்லா வகைகளிலும் எழிலும் இனிமையும் பயனும் மிக்க வகையில் அமைய எங்கள் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதோடு மாநாட்டில் பங்குபெறும் எல்லார்க்கும் **மாநாடு நற்பயனளிப்பதாகவென வாழ்த்துகின்றோம்.**

அறிஞர்கள் தங்களைச் சூழ உள்ளவர்களின் நிலைமைகளை மறவாது அறிவுப் பணியை ஆற்றுகின்ற — உலக மக்கள் போர், பகை அச்சம் ஆகியன இன்றி வாழ்கின்ற — 'செல்வத்துப் பயனே ஈதல் துய்ப்போம் எனினே தப்புந பலவே' என்பதனை எல்லாரும் உணருகின்ற — பிறர்க்காகவோ, தண்டனைக்காகவோ அன்றி எல்லாரும் தத்தம் கடமை உணர்ந்து பணி புரிகின்ற — உலக மக்கள் அனைவரும் ஒருவர்க்கொருவர் ஒத்தும் உதவியும் வாழ்கின்ற நல்லாண்டாக 1981 ஆம் ஆண்டு திகழுமாகவெனப் பரம் பொருளைப் பணிந்து அனைவர்க்கும் எங்கள் **புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.**

1981 ஆம் ஆண்டினைச் சர்வதேச ஊனமுற்றோர் நல்வாழ்வு ஆண்டாகக் கொண்டு ஊனமுற்றோரும் உலகில் வாழ உரிமையுடையார் என்ற உணர்வை மக்கள் மனத்தில் வேரூன்றச் செய்யும் முயற்சிகள் பலவற்றில் கருத்துப் பரவச் செய்யும் முயற்சி மிகமிக இன்றியமையா முயற்சி ஆகும். இந்த அடிப்படையில், ஊனம் ஏன் ஏற்படுகிறது? ஊனம் யாரால் ஏற்படுகின்றது? ஊனத்திற்கு ஈடு செய்வது எவ்வாறு? என்பன போன்ற பல வினாக்கட்கு விடைதரும் சில சிறப்புக் கட்டுரைகள் இந்தச் சிறப்பு இதழில் வெளியாகின்றன. **கட்டுரையாளர்க்கு நன்றி. எல்லார்க்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்.**

வாழ்க வையகம்! வாழ்க வளமொடு!

ஜி. வரதராஜ்
ஆசிரியர், கலைக்கதிர்

பண்டைத் தமிழரின் பண்பட்ட உள்ளம்

மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு. செ. அரங்கநாயகம்

தமிழருள் பலரும், தமிழர் அல்லாதார் சிலரும் தத்தம் இயல்பிற்கு ஏற்ப தமிழ் மொழியின் மேம்பாட்டிற்காக அரும்பணியாற்றி வருகின்றனர். அத்தகையோரின் பணிகளைப் போற்றவும், தமிழ் மொழியின் வளத்தை அறியவும் மேலும் வளமடையச் செய்யவும் துணை செய்யும் வகையில், ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு நடைபெறுகிறது. இது போழ்து, நம் முன்னோரின் உயர்ந்த உளப்பாங்கையும், பண்பாட்டையும் நாம் நினைத்துப் பார்க்காமலிருக்க இயலாது.

சங்க இலக்கியச் சிறப்பு இயல்புகளுள், நம் கருத்தைக் கவரும் சிறந்த பண்பு, 'ஒன்றே உலகம்' என்ற உயரிய மனப்பான்மையாகும். அமெரிக்க அரசியல் அறிஞர், வெண்டல் வில்கி என்பவர் "வருங்காலத்தில் நம் சிந்தனை உலகளாவிய நிலையில் பரந்திருக்க வேண்டும்" (In future our thinking must be world-wide) என 'ஒரே உலகம்' (One World) என்ற நூலில் குறிப்பிடுகிறார். இதை அறிஞர் உலகம் போற்றிப் பாராட்டுகிறது. இருபதாம் நூற்றாண்டில் வெளியிடப்பட்டுள்ள இக்கருத்தினைக் காலவரையறை சொல்ல இயலாத காலத்தில் வாழ்ந்த தமிழர் நன்குணர்ந்திருந்தனர்.

"யாதும் ஊரே ; யாவரும் கேளிர்"

"பெரிதே உலகம்; பேணுநர் பலரே"

"எத்திசைச் செலினும்
அத்திசைச் சோறே".

என்ற புறநானூற்று வரிசைகளையும்,

"யாதானும் நாடாமா
லூராமா லென்னொருவன்
சாந்துணையும் கல்லாத வாறு"

என்ற குறள் வரிகளையும் நினைத்துப் பார்க்கும்பொழுது அன்றைய தமிழரின் பண்பட்ட உளப்பாங்கை உணர்ந்து கொள்ள முடிகிறது.

தமிழருடைய நீதி நூல் தொகுதிகளும், நீதிமொழிகளும், நீதிக் கருத்துகளும், நம் முன்னோரின் வாழ்க்கை அமைப்பு முறையையும், மனப்பாங்கினையும், வெளியிடுகின்றன.

"நாடா கொன்றோ,
காடா கொன்றோ
அவலா கொன்றோ
மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை, வாழிய நிலனே"

என்ற புறநானூற்றுப் பாடல் உலகத்து இயற்கையின் நீதியைக் கூறும் அழகைப் பார்த்து மகிழ முடிகிறது.

நிறையும், நீதியும் நம் மக்களிடத்து நிறைந்து நிலவுவதற்குக் கல்வி அறிவே அடிப்படைக் காரணம் என்பதை நம் முன்னோர் நன்கறிந்து வாழ்ந்தனர்.

ஒல்காப் புலமைத் தொல்காப்பியர்,

"கல்வி தறுகண் இசைமை
கொடையெனச்
சொல்லப்பட்ட பெருமிதம்
நான்கே"—

என-நான்கு பெருமிதங்களில் கல்விக்கே முதலிடம் கொடுத்தலை அறிய முடிகிறது.

"உற்றுழி உதவியும்
உறுபொருள் கொடுத்தும்
பிற்றை நிலை முனியாது
கற்றல் நன்றே"

என்ற புறநானூற்றுக் கருத்தினையும்,

"கேடில் விழுச் செல்வம்
கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை"

என்ற திருக்குறள் கருத்தினையும் எண்ணிப் பார்க்கும்போது, தமிழர் வழிவழியாய்க் கல்விக்குக் கொடுத்தச் சிறப்பு புலனாகிறது.

எனவே, தமிழ் நாட்டில் உண்மையான கல்வியும், உண்மையான குறிக்கோள்களும், உண்மையான கோட்பாடுகளும் நிலைபெற்று விளங்கினால்தான் தமிழர் பிறர் போற்றும்படி வாழ இயலும். இந்த உண்மையை நன்குணர்ந்து, நாம் செயல்படுவோமானால், தமிழ் மேலும் வளம் பெறவும், தமிழர் சிறப்படையவும் வழிகோலும். □

வினா ? ? ? ←——→ விடை ! ! !

திரு. கோபிநாத், டி. எப். டி. என்., போடிநாயக்கனூர்

வினா சில ஆண்டுகளுக்கு முன் அரேபிய கடற்கரையில் ஜோடியாக நடந்து சென்ற 'mermaid' என்ற இனம் (பாதி மீன் உருவும், பாதி மனித உருவும் கொண்டது) பற்றிய விளக்கம் தேவை. அவ்வாறு நடந்து சென்ற ஜோடிகளுள் ஒன்று மீனவர்களால் சுடப்பட்டது. மற்றது தப்பித்து கடலில் சென்றுவிட்ட செய்தியின் அடிப்படையில் இதனை வினவுகிறேன்.

டாக்டர் இரா. சந்தானம், தூத்துக்குடி

விடை 'கடல் கன்னி' அல்லது 'கடல் பசு' என்னும் குட்டி போட்டு பால் கொடுக்கும் விலங்கினம் விலங்கியலில் மனித இனம் சேர்க்கப் பட்டுள்ள 'mammalia' என்னும் பிரிவில் சார்ந்துள்ளது. மீன்கள் துடுப்புகளின் உதவியால் நீந்துவது போன்று இவை தன்னோடு கூடிய முன்னங்கால் போன்ற உறுப்புக்களால் நீந்துகின்றன. நண்பர் குறிப்பிட்டுள்ள பாதி மனித உருவத்தையும் பாதி மீன் உருவத்தையும் கொண்டுள்ள விலங்கினம் அறிவியல் அடிப்படையில் சாத்தியமல்ல. இரண்டு விலங்கினங்கள் ஒன்றோடொன்று முன்னங் கால்களால் கட்டிப் பிடித்துக் கொண்டு இருக்கும்போது பார்ப்பதற்கு மனித இனத்தை ஒத்துள்ளதுபோல் தோன்றியிருக்கலாம். □

உலக நாடுகளில் தமிழர் பண்பாடு

துணைவேந்தர், டாக்டர் ஜி. ஆர். தாமோதரன்

தமிழர்கள் மிகப் பழங்காலத்திலிருந்தே உயர்ந்த பண்பாடு எய்தி இருந்தனர். 'பண்படு' என்ற சொல்லிலிருந்து 'பண்பாடு' என்பது வந்தது. 'பண்படு' என்பது 'பக்குவப்படு' அல்லது 'செப்பமாகு' என்று பொருள்படும். 'பண்பாடு' என்ற தமிழ்ச்சொல்லும் 'கல்சர்' (culture) என்ற ஆங்கிலச் சொல்லும் பண்படுதல் அல்லது செப்பமாதல் என்ற ஒரே பொருளைத் தருதல் குறிப்பிடத்தக்கது. பொதுவாகப் பண்பாடு என்பது உடல், உள்ளம், உணர்ச்சி ஆகியவற்றின் வளர்ச்சியைக் குறிப்பதாகும்.

அண்மைக் காலத்தில் தமிழ் பற்றிய ஆய்வுகளில் மீண்டும் நாட்டம் ஏற்பட்டிருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும். தமிழர்கள் உலகத்திற்கு வழங்கியுள்ள நற்கருத்துக்கள், பண்பாடு ஆகியவைகளைப் பற்றி உலக அறிஞர்கள் உணரத் தொடங்கியுள்ளனர். இதன் விளைவாகக் கடந்த பத்து ஆண்டுகளில் கோலாலம்பூர், பாரீஸ், யாழ்ப்பாணம் முதலிய வெளிநாடுகளில் உலகத்தமிழ் மாநாடுகளும், கருத்தரங்குகளும் நடைபெற்றுள்ளன. இப்போது மதுரையில் மிகச் சிறந்த முறையில் நடைபெறும் உலகத் தமிழ் மாநாடு—கருத்தரங்கு தமிழரின் பழம் பண்பாட்டின் தன்மைகளையும் மரபுகளையும் உலகம் உணர்தற்கு வழிவகுக்கும் என்று உறுதியாக நம்பலாம்.

மொகஞ்சதாரோ, அரப்பா ஆகிய இடங்களில் நடைபெற்ற நில அகழ்வாய்வுகளும் ஜான்மார்ஷல் என்பவர் செய்த ஆராய்ச்சிகளும் இந்தியாவின் வடமேற்குப் பகுதியில் ஆரியர்கள் வருகைக்கு முன்பேயே நகர் நாகரிகம் ஒன்று இருந்துள்ளது என்பதைத் தெளிவு படுத்தியுள்ளன. இதனைப் பழம் திராவிடப் பண்பாடு எனலாம். இன்றும் பலுச்சிஸ்தானத்தில் திராவிட மொழி ஒன்று பேசப்படுவதை இதற்குச் சான்றாகக் கூறலாம். இப்பழைய திராவிடப் பண்பாடு நிலவிய காலம் கி. மு. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதாகும். ஆரியர்கள் இந்தியாவிற்கு வந்த பிறகு அவர்கள் உள்நாட்டு மக்களை வென்று அவர்களோடு கலக்கலாயினர். இதன் விளைவாகத் தமிழ்ச் சொற்கள் வேதங்களில் இடம் பெற்றிருத்தல் வேண்டும்.

கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் தோன்றிய சிலப்பதிகாரம், குமரி முனைக்குத் தெற்கே பரந்து பட்டிருந்த நிலப்பகுதி கடலில் மூழ்கியது என்பதைக் குறிப்பிடுகிறது. சங்கப் பாடல்களும் குமரிக்கோடு, பஃறுளியாறு என்பனவற்றைக் குறிப்பிடுகின்றன. குமரிக்கோடும் பஃறுளியாறும் கடலில் மூழ்கிய லெமூரியாக் கண்டத்தின் எஞ்சிய பகுதிகளாகும். சோவியத் அறிவியல் அறிஞர்களும் ஐரோப்பிய ஆய்வாளர்களும் லெமூரியாக் கண்டத்தைப் பற்றி ஆராய்ச்சி நிகழ்த்தியுள்ளனர். லெமூரியா என்பது பழந்தமிழ் இலக்கியங்கள் கூறும் தமிழ்நாட்டைக் குறிக்கும். உலகத்தின் மிகப் பழைய மொழிகளுள் தமிழ்மொழி ஒன்று. இது நெடுங்கால இலக்கிய மரபுடையது. இவ்விலக்கிய மரபு இடையீடின்றித் தொடர்ந்து வருவதாகும். உலகத்தின் பல பகுதிகளில் தமிழ்

மக்கள் குடியேறியுள்ளனர். பல நாடுகளில் தமிழ்ப் பண்பாட்டின் பல்வேறு கூறுகள் (aspects) காணப்படுகின்றன. அக்கூறுகள் அந்நாட்டு மக்களின் பாராட்டுக்குரியனவாய் விளங்குகின்றன.

இந்தியாவின் பல்வேறு மொழி பேசும் இனத்தாரிடையே தமிழ்ப் பண்பாடு ஊடுருவி உள்ளதை அவர்களின் அன்றாட வாழ்க்கையிலும் இந்தியாவின் சமுதாய மொழியியல் வரலாற்றிலும் காணலாம். பொதுவாகப் பண்பாட்டுக் கூறுகளைப் பின் வருமாறு வகைப்படுத்தலாம்: 1) விழாக்கள் 2) சமயமும் தத்துவமும் 3) இசை, நாடகம், நாட்டுப்புறக் கலை (folk - lore) 4) இலக்கியம் 5) மொழி 6) கட்டிடக்கலை 7) வாணிபம் 8) ஏனைய கூறுகள். உலகில் எங்கணும் தமிழ்ப் பண்பாடு பரவியுள்ளது என்பதை விளக்கச் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

விழாக்கள்

பர்மா, ஃபிஜி (Figi), கயானா கவுடலோப் (Guadeloupe), மலேயா, மரீஷியஸ் (Mauritius), தென்னாப்பிரிக்கா, தென்வியட்நாம், இலங்கை, தாய்லாந்து, டிரினிடாட் (Trinidad), இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய நாடுகளில் ஆயிரக்கணக்கான தமிழர்கள் வாழ்கின்றனர். இந்நாடுகளிலுள்ள தமிழர்கள், தமிழ்நாட்டில் கொண்டாடுவது போலவே குடும்ப விழாக்களையும், சமய விழாக்களையும் கொண்டாடுகிறார்கள். இந்நாடுகளில் பல தமிழ்க்கோயில்கள் உள்ளன. மரீஷியஸ், கவுடலோப், தாய்லாந்து ஆகிய நாடுகளில் மாரியம்மன் கோயில்கள் புகழ்பெற்று விளங்குகின்றன. மலேயா, இலங்கை, இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளில் முருகன் கோயில்கள் காணப்படுகின்றன. தமிழர்கள் குடியேறியுள்ள நாடுகளிலெல்லாம் அவர்தம் பண்பாட்டிற்குரிய கோயில்களைக் கட்டுகின்றனர். 'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்பது தமிழில் வழங்கும் மூதுரை. இதற்கேற்ப வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் தாங்கள் வழிபடும் கடவுளுக்குரிய கோயில்களைக் கட்டித் தமிழ்ப் பண்பாட்டை வளர்த்து வருகிறார்கள்.

சமயமும் தத்துவமும்

பிற்காலச் சோழர் ஆட்சிக் காலத்தில் சைவ சமயம் இந்தோனேசியாவில் பரவியிருந்தது என்பதற்கு இந்தோனேஷியாவைச் சார்ந்த சுமத்திரா என்ற தீவில் தொல்பொருள் ஆராய்ச்சி வாயிலாகக் கண்டுபிடிக்கப்பட்ட உண்மைகள் தக்க சான்றுகளாக விளங்குகின்றன. புத்தவர்மன் என்ற பல்லவ மன்னனால் சீனாவில் போதிக்கப்பட்ட புத்த சமயத்திற்கு 'சென் புத்த சமயம்' (Zen Buddhism) என்ற பெயர் வழங்கியது. இந்தப் புத்த சமயம் பின்பு ஜப்பான் நாட்டிலும் மற்ற நாடுகளிலும் பரவியது. மாணிக்கவாசகர் பாடிய திருவெம்பாவையும், ஆண்டாள் பாடிய திருப்பாவையும் இன்னும் தாய்லாந்தில் சமயப்பாடல்களாகப் பாடப்படுகின்றன. இலங்கை, மலேயா, சிங்கப்பூர், கவுடலோப், டிரினிடாட், மரீஷியஸ், தென்னாப்பிரிக்கா, இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய நாடுகளில் தமிழ்ப் பண்பாட்டின் தத்துவக் கூறுகளும் சமயக் கூறுகளும் ஏதோ ஒரு வகையில் காணப்படுகின்றன. அண்மைக் காலத்தில் சில அமெரிக்கர்கள் சைவசமயத்தை மேற்கொண்டதாக அறிகிறோம்.

இசை, நாடகம், நாட்டுப்புறக்கலை

மலேயா, சிங்கப்பூர், இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளிலுள்ள தமிழர்கள் தமிழ் நாட்டிலிருந்து இசைக்கலைஞர்களையும், நடனக் கலைஞர்களையும் வரவழைத்து அந் நாடுகளில் கலை நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்கிறார்கள், இக்கலை நிகழ்ச்சிகளை அந்நாடுகளிலுள்ள மக்களும் கண்டு பாராட்டுகின்றனர். இங்கிலாந்து, அமெரிக்கா, தென்னாப்பிரிக்கா முதலிய நாடுகளில் இசை வகுப்புக்களும், நடன வகுப்புக்களும் தமிழர்களால் நடத்தப் படுகின்றன. அண்மைக்காலம் வரை தென்னாப்பிரிக்காவிலுள்ள தமிழர்கள் தெருக்கூத்து நடத்தி வந்தார்கள் என்பதையும் அறிகிறோம். கோவலன் கதை, பாரத ராமாயணக் கதைகள் ஆகியவைகள் தெருக்கூத்துக்களாக அங்கு நடிக்கப்பட்டன.

இலக்கியம்

இலங்கையில் தமிழிலக்கியங்கள் மிக்க கவனத்துடன் ஆழ்ந்து கற்கப் படுகின்றன. தென்னாப்பிரிக்கா, பிஜி போன்ற நாடுகளில் மரபுவழித் தமிழிலக்கியம் கற்பிக்கப்படுகிறது. தாய்லாந்தில் சைவபக்திப் பாடலாகிய திருவெம்பாவையும், வைணவ பக்திப் பாடலாகிய திருப்பாவையும் மந்திரங்களாக ஓதப்படுகின்றன. தமிழ் நாட்டவர் நன்கறிந்த பாரதக் கதையும், இராமாயணக்கதையும் இந்தோனேஷியாவில் வழங்குகின்றன. அவைகள் பல்லவர் ஆட்சிக் காலத்திலும் சோழர் ஆட்சிக் காலத்திலும் கீழை நாடுகளுக்குச் சென்றிருத்தல் வேண்டும். டாக்டர் ஜி. யு. போப் போன்ற வெளிநாட்டுப் பேரறிஞர்கள் தமிழிலக்கியங்களில் மிக்க ஈடுபாடு கொண்டு திருக்குறள், நாலடியார் போன்ற தமிழ் நூல்களைத் தத்தம் தாய்மொழியில் மொழி பெயர்த்து அம்மக்களுக்கு அறிமுகப் படுத்தினர்.

மொழி

திராவிட மொழி உலகில் வழங்கும் வேறுபல மொழிகளோடு அடிப் படையில் தொடர்புடையது என்று பல மொழியியல் அறிஞர்கள் கருதுகின்றனர். ஆஸ்ட்ரியாவின் (Austria) மக்யார் (Magyar) மொழியும் இக்கால ஈராக்கில் வழங்கும் பழங்கால சுமேரிய மொழியும் செனகல் (Senegal) நாட்டில் வழங்கும் ஊர்ஃப் (Woorf) மொழியும் ஜப்பானில் வழங்கும் பழைய ஜப்பானிய மொழியும் ஸ்பெயின் நாட்டின் பாஸ்க் மொழிகளும், (Basque languages) துருக்கி நாட்டில் வழங்கும் துருக்கி மொழியும் (Turkish language) கொரியாவில் வழங்கும் கொரிய மொழியும், பின்லாந்தின் பின்னிஷ் மொழியும் மொழியியலறிஞர்களால் ஆராயப்பெறும் சில மொழிகள் ஆகும். இம்மொழிகளை ஆராயும் அறிஞர்கள், அவை திராவிடக் குடும்ப மொழிகளோடு மிக்கத் தொடர்பு கொண்டுள்ளன என்ற உண்மையை ஆராய்ந்து தெளிந்துள்ளனர். இம்மொழிகள் அனைத்தும் ஒரே மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவை என எதிர்கால ஆராய்ச்சிகளால் நிறுவப்படலாம். பாகிஸ்தானில் வழங்கும் பிராஹுயி மொழி (Brahui) திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது என்பது இப்போது நன்கு நிறுவப் பட்டுள்ளது. கிறித்துவயுகத் தொடக்கத்திற்கு முன்பிருந்தே தமிழர் சமுதாயம் உலகிலுள்ள மற்ற மொழியின் சமுதாயங்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தது. இதன் விளைவாகத்

தமிழ்ச்சொற்கள் கிரேக்க மொழி, ரோமன் மொழி, ஆங்கிலம், மலேய மொழி, சிங்கள மொழி முதலிய பல உலக மொழிகளில் இடம் பெற்றுள்ளன. சான்றாக, 'அரிசி' என்னும் தமிழ்ச்சொல் கிரேக்க மொழியில் 'ஒரிசி' என வழங்குகிறது. 'கட்டு மரம்' என்ற சொல் ஆங்கிலத்தில் 'கட்டமரான்' என்று ஒலிக்கப்பெறுகிறது. 'மலர்' என்ற தமிழ்ச்சொல் மலேயா மொழியில் 'மலர்' என்றே காணப்படுகிறது. இன்னும் சில சான்றுகளைக் கீழே காண்போம் :

தமிழ்	கிரேக்க மொழி
இஞ்சி வேர்	ஜிஞ்சி பேர்
கருவாப்பட்டை	கார்ப்பியன்

தமிழ்	எகிப்திய மொழி
தோகை	துகின்
கவி	கபின்

தமிழ்	மலேயா மொழி
செருப்பு	செர்பு
கறி	கறி

தமிழ்	பிலிப்பைன் மொழி
விலங்கு	பிலங்கு
கப்பல்	கபல்

கட்டிடக்கலை

இந்தோனேசியா, இத்தியோப்பியா போன்ற நாடுகளில் தமிழ்க் கட்டிடக் கலையின் செல்வாக்குக் காணப்படுகிறது. இந்தோனேசியாவைச் சேர்ந்த சுமத்திரா, சாவகம் ஆகிய இடங்களிலுள்ள சில சிதைந்த கோயில்களின் எஞ்சிய பகுதிகளில் தமிழ்க் கட்டிடக்கலைப் பண்பு அமைந்துள்ளது. சிவன் உருவமும் நந்தி உருவமும் சுமத்திராவில் காணப்படுகின்றன. சாவகத்திலுள்ள பழையகோயில்களைப் பீமன் கோயில் என்றும் அருச்சுனன் கோயில் என்றும் வழங்குகின்றனர். இத்தியோப்பியாவைச் சேர்ந்த கோண்டார் (Gondar) என்ற இடத்திலுள்ள அரண்மனையும் வலிபெல்லா (Vali-bella) என்ற இடத்திலுள்ள கோயில்களும் தமிழ்நாட்டில் காணும் அரண்மனை போலவும் கோயில்கள் போலவும் உள்ளன

வாணிபம்

பழங்காலத்தில் தமிழர்கள் கிரேக்கம், ரோம், எகிப்து, ஈரான், ஈராக், சீனா ஆகிய நாடுகளுடனும் இன்னும் வேறுபல நாடுகளுடனும் வாணிபம் செய்தனர் என்பது வரலாற்று அறிஞர்களால் இப்போது உறுதியாக நிறுவப்பட்டுள்ளது. அவர்கள் ஏற்றுமதி செய்த முக்கியப் பொருள்கள் முத்து, சந்தனம், மிளகு, யானைத் தந்தம் முதலியவை ஆகும். தமிழ் வணிகர்கள் கீழை நாடுகளுடன் வாணிபம் செய்தனர் என்பதைப் பர்மாவில் காணும் தமிழ்க் கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன.

ஏனைய பண்பாட்டுக் கூறுகள்

பழங்காலச் சுமேதிய மன்னர்களின் தலைநகரத்தின் பெயர் 'உர்' (Ur) என்று வழங்கப்படுகிறது. இச்சொல் தமிழ்ச் சொல் 'ஊர்' என்பதோடு மிகவும் ஒத்துள்ளதைக் காணலாம். பழங்காலச் சுமேரியாவில் பயன்படுத்தப்பட்ட மரம் தென்னிந்தியாவின் தேக்கு மரமே என்பது தொல்பொருள் ஆய்விலிருந்து நிறுவப்பட்டுள்ளது. தமிழில் 'ஏறு தழுவுதல்' என்று கூறப்படுகின்ற வீர விளையாட்டு கிரேக்க நாட்டிலும் இருந்தது என்பது அந்நாட்டின் தொல்பொருள் ஆராய்ச்சிகளிலிருந்து தெளிவாகிறது. இவ்வீர விளையாட்டு இக்காலத்தில் 'மஞ்சு விரட்டு' என்று கூறப்படுகிறது.

இலங்கை, மலேயா, சிங்கப்பூர் இங்கிலாந்து ஆகிய நாடுகளிலும் இன்னும் வேறு சில இடங்களிலும் தமிழில் இதழ்கள் வெளியிடப்படுகின்றன. தென்னாப்பிரிக்கா, ஃபிஜி, மரீஷியஸ் ஆகிய நாடுகளில் சென்ற நூற்றாண்டில் தமிழில் இதழ்கள் வெளியிடப்பட்டன என்பதை அறிகிறோம். தமிழ்த் திரைப்படங்கள் பல நாடுகளில் திரையிடப்படுகின்றன. இத் தமிழ்ப் படங்களை அந் நாடுகளிலுள்ள தமிழ் மக்களேயன்றி ஏனைய மக்களும் கண்டு சுவைக்கின்றனர். இலங்கை, மலேயா, சிங்கப்பூர், இங்கிலாந்து, அமெரிக்கா, சீனா, சோவியத் நாடு ஆகியவற்றில் தமிழ் நிகழ்ச்சிகள் வானொலியில் ஒலிபரப்பப்படுகின்றன.

தமிழ்ப் பண்பாடு தமிழர்களால் மட்டுமன்றித் தமிழ்ப் புலமை வாய்ந்த வெளிநாட்டு அறிஞர்களாலும் உலகில் பரப்பப்படுகிறது. பல வெளிநாட்டுச் சமயப் போதகர்களும் அறிஞர்களும் 16-ஆம் நூற்றாண்டிலிருந்து தமிழ் நாட்டிற்கு வந்து தமிழைக் கற்கலாயினர். அங்ஙனம் கற்கும்போது தமிழ்மொழி, அதன் இலக்கியங்கள் ஆகியவற்றின் வளமும் இனிமையும் அவர்கள் உள்ளத்தைக் கவர்ந்தன. அவர்கள் சில இலக்கியங்களைத் தத்தம் தாய் மொழிகளில் மொழி பெயர்த்தனர். அதோடு அகராதிகளையும் தொகுத்தனர். அவைகளுள் பல வெளிநாடுகளிலும் தமிழ்ப்பண்பாடு பரவ வாயில்களாக அமைந்தன.

கி. பி. 1708 ஆம் ஆண்டில் ஜெர்மனி நாட்டைச் சேர்ந்த சமய போதகர் சீகன் பால்கு (Ziegenbalg) என்பவர் 'நீதி வெண்பா', 'கொன்றை வேந்தன்' 'உலகநீதி' ஆகிய தமிழ் நூல்களைத் தம் மொழியில் மொழி பெயர்த்தார். ஜூலியன் வின்ஸான் (Julien Vinson–1849—1926) பாரீஸ் நகரத்தில் தமிழ் வகுப்பைத் தொடங்கி வைத்தார். இவ்வகுப்பில் முறையாகத் தமிழ் கற்பிக்கப்பட்டது. அவர் தமிழிலக்கியங்கள் சிலவற்றைப் பிரெஞ்சு மொழியில் மொழி பெயர்த்தார். அவற்றோடு வேறுபல தமிழ் நூல்களையும் திராவிட மொழிகளிலுள்ள நூல்களையும் மொழி பெயர்த்தார்.

தமிழிலக்கியங்களை டாக்டர். ஜி. யு. போப் மிகவும் புகழ்ந்துரைத்தார். தமிழ்க் கருத்துக்களை ஆங்கில மாணவர்கட்கு அவர் மிகவும் ஆர்வத்தோடு அறிவுறுத்தினார். "நாம் ஒருவருக்கொருவர் நன்மை புரிந்து கொள்பவராக விளங்க வேண்டுமானால் ஒருவரையொருவர் நன்கு புரிந்துகொள்ள வேண்டும்" என்று தம்முடைய நாலடியார் மொழி பெயர்ப்பு நூலின் முன்னுரையில் கூறியுள்ளார். அவர்தம் புனித உணர்வே அவருடைய இத்தகைய புலமை சான்ற முயற்சிகளுக்குக் காரணமாகும். தமிழ்ப் பக்திப் பாடல்களிலும் போப் அவர்களுக்கு மிக்க ஈடுபாடு இருந்தது. அவர் திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து உதவினார். இம்மொழி பெயர்ப்புப் பதிப்பில் திருவாசகப் பாடல்கள், அவற்றின் மொழி பெயர்ப்பு விளக்கக் குறிப்புக்கள் முதலியவை இடம் பெற்றுள்ளன. இவற்றோடு இந்நூலுக்கு மிக விரிவான முன்னுரையும் சைவ சித்தாந்தத்தின் தெளிவான விளக்கமும் தந்துள்ளார்.

வெளிநாட்டவரிடையே திருவள்ளுவரின் திருக்குறள் பெற்ற பெரு மதிப்பைப் போல வேறு எந்தத் தமிழ் நூலும் பெறவில்லை. இந்திய

இலக்கியங்களில் திருக்குறள் போன்ற ஒரு சில நூல்களே ஐரோப்பிய மொழிகளில் மொழி பெயர்க்கப் பட்டுள்ளன.

கால்டுவெல்லின் ஒப்பிலக்கணம் திராவிட மொழிகளின் தனித் தன்மையை உணர்த்தும் ஒப்பற்ற நூலாகும். அது 1856–ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இந்நூலில் பல்வேறு திராவிட மொழிகள் இந்திய-ஐரோப்பிய மொழிகள் ஆகிய வற்றின் தோற்றங்களை மறுக்க இயலா விளக்கங்களோடு நிறுவி யுள்ளார். ‘தமிழ்மொழி தன்னிடம் கலந்துள்ள வடமொழிச் சொற் களைத் தயக்கமின்றி நீக்கி விடலாம். இவ்வாறு வடமொழிச் சொற்களை நீக்கி விடின் தமிழ்மொழி மேலும் தூய்மையும் மேன்மையுமான நடையை எய்தும்’ என்று கால்டுவெல் கூறுகிறார்.

செக்கோஸ்லோவேக்கியாவில் சில தமிழ் நூல்கள் ‘செக்’ (Czech) மொழி யிலும் ஸ்லோவக் (Slovak) மொழி யிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. இதுவரை ‘செக்’ மொழியில் மொழி பெயர்க்கப்பட்ட தமிழ் நூல்களுள் சங்கப் பாடல்களின் தொகுப்பும், சிலப்பதிகாரமும் மிகவும் முக்கிய மானவையாகும். இம்மொழி பெயர்ப்புக்கள் 1965–ஆம் ஆண்டில் வெளியிடப் பெற்றன.

நிக்கித்தின் (Nikitin)என்ற ரஷ்யப் பயணி (1466—1472) யின் குறிப்புக் களிலிருந்து, முதல் முறையாக ரஷ்ய மொழியில் மேற்கொண்ட ‘பணம்’ (panam) அல்லது ஃபணம் (fanam) என்ற சொல் காணப்படு கிறது. ‘பணம்’ என்பது பழங்காலப் பொற்காசினைக் குறிக்கும். இக் குறிப்புக்களில் ‘சாண்டல்’ (sandal) என்ற சொல்லும் உள்ளது. இச் சொல் சந்தனம், சுந்தம் என்ற தமிழ்ச் சொற்களிலிருந்து வந்த தாகும். எம். எஸ். ஆண்டிர்னோவ் (M. S. Andronov) என்பவர் சோவியத் நாட்டைச் சேர்ந்த மற்றொரு திராவிட மொழி அறிஞரும் தமிழறிஞரும் ஆவர். அவர் 1952 ஆம் ஆண்டிலிருந்து தமிழாராய்ச்சியிலும் திராவிட மொழியாராய்ச்சியிலும் ஈடுபட்டு வருகிறார். அவருடைய நூல்கள் சோவியத் ஒன்றியத்தில் மட்டுமன்றி இந்தியாவிலும் மற்ற நாடுகளிலுள்ள திராவிட மொழி அறிஞர்களிடையேயும் நன்கு பயிலப் பட்டு வருகின்றன. லெனின்கிராடு பல்கலைக் கழகத்தில் கீழைநாட்டுக் கலை இயல்துறை (otiental faculty) யைச் சேர்ந்த எஸ். ஜி. ருடின் (S. G. Ruddin) என்பவரும் ஆண்டிரினோ வைப் போலத் தாமே தமிழ் நூல் களைக் கற்கத் தொடங்கினார். பின்பு பேராசிரியர் ஆதிலட்சுமியிடம் பல்கலைக் கழகத்தில் தமிழும் தெலுங்கும் கற்றார். தமிழியல் துறை வெளி நாட்டிலுள்ள சில பல்கலைக் கழகங்களில் நிறுவப்பெற்றுள்ளது. அத்துறைகள் அந்நாடுகளில் தமிழ்ப் பண்பாட்டைப் பரப்புவதற்கு ஆற்றல் வாய்ந்த வாயில்களாக உள்ளன.

வெளிநாடுகளில் வாழும் தமிழர்களின் கடமை

வங்காளக் குடாக் கடல் இராசராச சோழனுக்கும் இராசேந்திர சோழ னுக்கும் வெளிநாடுகளின் மீது படை எடுப்பதற்கு ‘சோழர் ஏரி’ யாக இருந்தது. சமீப நூற்றாண்டுகளி லும்கூடத் தமிழர்கள் தென்னிந்தியா வுக்கு மேற்கேயும் கிழக்கேயும் உள்ள தீவுகளில் குடியேறினர். உலகத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட நாடுகளில் தமிழ் அரசியல் மொழியாக உள்ளது. வெளிநாடுகளில் வசிக்கும் தமிழர்கள்

அங்குள்ள பொருளைச் சுரண்டுவதற்காகச் செல்லவில்லை. அவர்கள் தம் உடலுழைப்பினால் அந்நாடுகளின் பொருளாதாரம் பெருகி அவைகள் செழிப்படைய அவர்கள் உதவி வருகிறார்கள். இக்காலத்தில் மிக விரைந்து பயணம் செய்வதற்கும் போக்குவரத்துக்கும் ஏற்ற வசதிகள் உள்ளன. இவற்றின் உதவியால் அவர்கள் மேன்மேலும் தமிழகத்தோடு தொடர்பு கொண்டு தாம் வசிக்கும் வெளிநாடுகளில் தமிழ்ப் பண்பாட்டினை வளர்த்து நிலைபெறச் செய்யலாம். தமிழர்கள் வாழும் வெளிநாடுகளில் தமிழ் நாட்டுக்கே உரிய கோயில்களும், தமிழ்க் குடியிருப்புக்களும், அவர்களுக்குப் பொதுவான சடங்குகளும், மாரியம்மன் திருவிழா போன்ற விழாக்களும், நெருப்பில் நடக்கும் பக்திச் சடங்கும், பொங்கல், தீபாவளிப் பண்டிகைகளைக் கொண்டாடுதலும், தாலிகட்டுதல் போன்ற திருமண வழக்கங்களும், குடும்பப் பெயர்களும், அவர்களிடையே வளர்ச்சி அடைந்த நாட்டுப்புறப் பாடல்களும் நிலவி வருகின்றன. இவைகள் அந்நாட்டினரைத் தமிழ் நாட்டோடு தொடர்பு படுத்துவனவாய் உள்ளன.

இதுவரை நம் கடந்த காலச் சிறப்புக்களைக் கண்டோம். தமிழர்களுடைய பெருமையைப் போதுமான அளவு விளக்கச் சொற்கள் இல்லை. இத்தகைய தமிழரின் பெருமை நமக்குப் பணிவையும் நமக்குள்ள பெரும் பொறுப்பையும் உணர்த்துகிறது. கடந்த நெடுங்காலமாகப் பண்பாட்டில் சிறந்து விளங்கிய நாம் இப்போது உலகில் உயர்நிலையில் இருத்தல் வேண்டும். ஆனால் நாம் அவ்வுயர்நிலையில் இல்லை.

கட்டுரை ஆசிரியர்களுக்கு ஒரு வேண்டுகோள்

கலைக்கதிருக்கு எழுதும் கட்டுரைகளில் தமிழக அரசு அறிமுகப்படுத்தியுள்ள சீர்திருத்த எழுத்துக்களைப் பயன்படுத்த வேண்டுகிறோம்.

அளவைகளில் மெட்ரிக் முறை அளவுகளைப் பயன்படுத்த வேண்டுகிறோம்.

கலைக்கதிர்

நாம் இக்கால அறிவியலில் முன்னேற்றம் அடையாதது ஒருவேளை இதற்குக் காரணமாக இருக்கலாம். பழங்காலத்தில் நாம் ஓரளவு அறிவியல் அறிவு உடையவர்களாக இருந்தோம். ஆனால் அவ்வறிவு வேறு பலவற்றால் மங்கிப் போயிற்று. தமிழ்நாடு முற்காலத்தை விடப் பெருமை எய்த வேண்டும் என்பதில் நாம் மிகவும் நாட்டமுடையவராய் இருத்தல் வேண்டும் ஆகையால் அறிவியல் வளர்ச்சிக்கும், தொழில்நுட்பவியல் வளர்ச்சிக்கும் நாம் பாடுபடுவோமாக!

அறிவியலின் எல்லாத் துறைகளிலும் நாம் புலமை மிக்கு விளங்க வேண்டும் நாம் சி. வி. இராமன், இராமானுஜம், சாராபாய், போஸ், ராய், பட்நகர் போன்ற தலைசிறந்த அறிவியல் அறிஞர்களைப் பெற்றிருந்தோம். அவர்களில் ஒரு சிலரே தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள். உலகப் புகழ் வாய்ந்த அறிவியல் அறிஞர்கள் ஒரு சிலரை நாம் இப்போது பெற்றிருக்கிறோம். மேன்மேலும் இத்தகைய அறிவியல் அறிஞர்கள் பெருகுவதற்கு ஏற்ற சூழ்நிலையை உண்டாக்க வேண்டும். மேலும்

நமக்குள் அறிவியல் மனப்பான்மையையும், அணுகுமுறையையும் வளர்த்து நம்முடைய எல்லா மூடப்பழக்க வழக்கங்களையும் கைவிட வேண்டும். தெளிவான எண்ணத்தை நம்மை வழிப்படுத்தும் நெறியாகவும், தமிழ்நாட்டை நம்மைப் போற்றி வளர்க்கும் தாயாகவும் கொண்டு இவ்வுலகில் நாம் மீண்டும் முன்னினும் உயர்நிலையை எய்த வேண்டும் நம் போன்ற பழம்பண்பாட்டினையுடைய சீனா, ஜப்பான் நாடுகள் எங்ஙனம் பழம்பெருமையைக் கொண்டு ஊக்க மூட்டும் எதிர்காலத்தை உருவாக்க முடியும் என்பதை உலகுக்குச் செயல் முறையில் காட்டியுள்ளன. நாமும் பழம்பெரும் பண்பாட்டை அடிப்படையாகக் கொண்டு சீரிய எதிர்காலத்தை உருவாக்குவோமாக!

ஒரு நாட்டை நன்முறையில் உருவாக்குவதில் பண்பாடு ஒரு பெரும் இடத்தைப் பெறுகிறது. பண்பாடு தலைமுறைக்குத் தலைமுறை தொடர்ந்து வருவதாகும். அது அழிவதில்லை; ஆனால் காலத்திற்கேற்றபடி மாறி அமைகிறது.

கீழ்வரும் பெருமைமிக்க உணர்வினை நாம் எப்போதும் பெற வேண்டும்.

“நம் பண்பாடு நாம் கற்றுக் கொண்ட ஏதோ ஒன்று அன்று; அது நம் பிறவியிலேயே அமைந்ததாகும். நாம் அதைப் பிறவியிலேயே பெற்றவர்கள் மட்டும் அல்லர். நம் பண்பாட்டின் மதிப்புக்களின் பாதுகாவலரும் அவற்றை நடைமுறையில் செயல்படுத்துபவரும் ஆவோம்”. □

With the best compliments from

M/s. SRINIVASA SAW MILLS

&

M/s. FATHIMA FIRE WOOD & TIMBER DEPOT

METTUPALAYAM ROAD, COIMBATORE

ஐந்தாவது உலகத் தமிழ் மாநாடு

திரு. ப. முருகன், எம். ஏ.

ஏன் வேண்டும்?

பிறமொழிகள் இதுபோன்று மாநாடு கொண்டாடுகின்றனவா? தமிழ்மாநாடு என்றாலே போதுமே; எதற்கு உலகத்தமிழ் மாநாடு எனக் கூறப்படுகின்றது! என்பன போன்ற ஐய வினாக்கள் பலர் உள்ளத்து எழுதல் இயற்கையே.

ஒரு காலத்து இந்தியநாடு எங்கணும், ஏன் இந்திய நாட்டின் எல்லை கடந்தும் தமிழ்மொழி பரவி யிருந்தது. ஆனால் தன்னை மறந்த ஒப்புரவுத் தன்மையைப் பலர் பயன் படுத்தித் தமிழின் வளப்பத்தினை, வளர்ச்சியினை வஞ்சகமாக பாகு படுத்தியும், உடனிருந்தே குறைகள் ஏற்படுத்தியும் குறையச் செய்த மைக்குச் சமூக, மொழி வரலாறுகள் சான்று பகரும். மேலும் தமிழ்மொழி பல்லாயிரம் ஆண்டுகளாக அதனைப் பேசுகின்ற மக்களால் உணரப்படும் இளமைச் செவ்வி வாய்ந்த மொழியாக வாழ்ந்து வருகின்றது; பிறமொழிகள் சில போன்று வழக்கொழியாமல், சூழ்ச்சிகட்கிடையேயும் தன் தனித் தன்மையைக் காத்துவருகின்றது. தமிழ் மக்களிடம் மொழிப்பற்றும், தேசியப்பற்றும், இணைந்து என்றும் விளங்கும் இயல்புகள். என்றாலும், அவ்வப்போது தொய்வுகள் ஏற் படுவதும் அவற்றை மற்றவர்கள் வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள் வதும் நடைமுறையில் காணப்படும் நிலைமைகள். எனவே, தமிழின் தனித்தன்மை, மாறாத நல்லியல்பு கள், நிலைபேறுடையனவாக இருக்கவும் அதேநேரத்தில் வளர்ந்து வரும் விஞ்ஞான உலகத்தோடு இணைந்து நின்று வளரவும், தமிழ் பேசுவோர் அனைவரிடமும் தமிழ்ப் பற்றினையும், விழிப்புணர்ச்சியினை யும் ஏற்படுத்தவும் இத்தகைய மாநாடுகள் இன்றியமையாதவைகளா கின்றன.

"திரைகடல் ஓடியும் திரவியம் தேடு" என்ற பழமொழிக்கேற்ப வணிகம் செய்யவும், பண்பாடு பரப்பவும், ஆட்சி ஆளவும் தமிழ்ப் பெருமக்கள் உலகில் பலபகுதிகட்குச் சென்றமைக்கு வரலாற்றுச் சான்று களும் புதைபொருட் சான்றுகளும், வாழ்க்கைமுறைச் சான்றுகளும், மொழிபெயர்ப்புச் சான்றுகளும் நிரம்ப உள்ளன. அவ்வாறு சென்றவர் களுள் பலர் கடாரம், இந்தோ னேசியா, மலேசியா, தென் ஆப்பிரிக்கா, மரீஷியஸ், ஐரோப்பிய நாடுகள் போன்ற நாடுகள் பலவற் றில் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக வாழ்ந்து வருகின்றனர். அவர்கட்கும் தாய்த்திரு நாட்டிற்கும் உள்ள தொடர்பினை மீண்டும் வற்புறுத்தி உலக அளவில் நல்லுறவை வளர்த்து அவர்களின் தமிழ்மொழிப் பற்றினை வளர்க்கும் புத்துணர்வு சிறக்க இத்தகு மாநாடு நல்லதொரு கருவி யாகும். அங்கெல்லாம் வாழும் தமிழர்கள், தமிழகம் வந்து தமிழகத் தின் நிலைமைகளை உணர்ந்து ஒத்தும் உதவியும் வாழ இது ஒரு நல்ல வழியாகும். இங்குள்ளோர்க்கும் பிற இடங்களில் வாழ்வோர்க்கும் இடையே ஒத்த நல்லுணர்வு ஏற்பட

இக்கட்டுரை ஆசிரியர் மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் பதிவாளராகப் பணியாற்று கிறார்.

இத்தகு மாநாடு நல்லதொரு பாலமாகும். எனவேதான், உலகத் தமிழ் மாநாடாக இது நடத்தப்படுகின்றது.

இரண்டாவதாக, உலகின் பல்வேறு நாடுகளில் உள்ள பிறமொழியாளர்களில் பலர் ஆர்வத்தின் காரணமாகத் தமிழ் கற்று வருகின்றனர். இவ்வாறு நடத்தப்பெறும் மாநாடுகளில் அவர்களும் பங்கு பெற்று தமிழ்மொழி பற்றிய சிறப்புக்களை உணர்வதற்கும் அவர்கள் கற்றறிந்த சிறப்புக்களை வெளியிடுவதற்கும் இது நல்ல வாய்ப்பாய் அமைந்து உலகத்தின் எல்லாப் பகுதிகட்கும் தமிழ்மொழி பரவ வகை செய்யும்.

மூன்றாவதாக, தமிழ்மொழி எவ்வளவு சிறப்புடையதாயினும், நாமே, அவற்றை அறிந்து உணர்ந்து கூறினும் உலக அரங்கிலும் சரி, தமிழ் மக்களிடமும் சரி நாம் கூறும் கூற்றுக்கள் சிறப்பாக இருக்கா. எனவே, பிறநாட்டவர் அவற்றை அறிந்து உணர்ந்து கூறும்போது, தமிழின் சிறப்புக்கள் ஏற்றுக் கொள்ளத் தக்கனவாக அமையவும் கருத்துவளம் பெருகவும் இம் மாநாடு வழிவகுக்கும். பிற பகுதிகளிலிருந்து வரும் அறிஞர்கள் வாயிலாகத் தமிழின் பெருமையும் சிறப்பும் பரவ இது வழிவகுக்கும்.

இத்தகு காரணங்களாலும், நோக்கங்களாலும் நடைபெறும் உலகத் தமிழ் மாநாடு இதற்கு முன்பு நான்கு நடைபெற்றுள்ளன. முதல் உலகத் தமிழ் மாநாடு கோலாலம்பூரிலும், இரண்டாவது சென்னையிலும், மூன்றாவது மாநாடு பாரீசிலும், நான்காவது மாநாடு யாழ்ப்பாணத்திலும் சிறப்பும் பயனும் மிக்க வழிகளில் நடைபெற்றன. 1981 சனவரியில் மதுரையில் நடைபெறும் மாநாடு ஐந்தாவது உலகத்தமிழ் மாநாடு ஆகும்.

சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்ததும், வள்ளுவன் குறள் அரங்கேறியதும், பாண்டித்துரைத் தேவரால் நான்காவது தமிழ்ச் சங்கம் தொடங்கப் பெற்றதுமான பல சிறப்புக்களைப் பெற்றுள்ள தமிழ் வளர்க்கும் மதுரைப் பெரும்பதியில் ஐந்தாவது உலகத்தமிழ் மாநாடு நடைபெறுவது மிகப்பொருத்தமாகும்.

இரண்டாவது உலகத்தமிழ் மாநாட்டினைப் பேரறிஞர் அண்ணா அவர்கள் தாமே முன் நின்று சிறப்புற நடத்தினார். ஐந்தாவது மாநாட்டினை அவர்வழிவந்த முதல்வர், பொன்மனச்செம்மல் மாண்புமிகு முதல்வர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் அவர்கள் எல்லார் மனத்திலும் தமிழ் உணர்வு பொங்கி நலம் கூட்டும் வகையில் சிறப்போடு நடக்க அல்லும் பகலும் தம் சிந்தனையை ஈடுபடுத்திச் செயலாக்கி வருகின்றார். அவருக்கு அரும்பெரும் துணையாக நின்று தமிழக அமைச்சர்கள் அனைவரும் மாநாட்டின் சிறப்புக்குப் பாடுபட்டு வருகின்றனர். எல்லார் மனத்திலும் மாநாடு எழிலும் ஏற்றமும் கொண்டு இலங்குவதோடு பயனும், பண்பும் மிக்கவகையில் அமையவேண்டும் என்ற எண்ணம் நிறைந்துள்ளது. சீரும். சிறப்பும் பயனும். பண்பும் மிக்க வகையில் 1981 சனவரி 4–ஆம் நாள் முதல் 10ஆம் நாள் வரை 5ஆவது உலகத்தமிழ் மாநாடு, தமிழ் வளர்த்த மதுரையில் உலகத்தமிழர்கள் ஒன்றுபடும் விழாவாக நடைபெறுகின்றது.

இரண்டாவது உலகத்தமிழ் மாநாட்டில் பொதுநிலைக் கருத்தரங்கு பூம்புகார் என்னும் பெயரில் உருவாகி நிகழ்ச்சிகள் நடைபெற்றனபோன்று ஐந்தாவது

உலகத்தமிழ் மாநாட்டிலும் மதுரையில் உள்ள பந்தயத்திடலில் (race course) நடைபெறும். இங்கே பட்டிமன்றம், கவியரங்கம், வழக்காடு மன்றம் போன்ற தமிழோடு தொடர்புடைய மொழி வளர்ச்சிக்கான பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறும். இந்நிகழ்ச்சிகள் கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பையளிக்கவும் நடுநிலைநின்று தமிழின் பெருமையை ஆயவும் துணைபுரிவனவாகவும் இருக்கும். எல்லாப் பிரிவினரும் பங்குபெற்று இன்பம் காணும் இப்பொதுநிலைக்கருத்தரங்குகள் 30,000 மக்கள் உட்காரக்கூடிய பெரிய பந்தலில் நடைபெற உள்ளன. தமிழில் ஆய்ந்து தோய்ந்து கற்ற ஆராய்ச்சி வல்லுநர்களின் ஆய்வு மனத்தை உயர்த்தும் வகையிலும் தமிழறிஞர்கள் தமிழ்பற்றிய தங்கள் சிந்தனைகளை மேலும் வளர்க்கும் வகையிலும் சிறப்புநிலைக் கருத்தரங்குக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இச்சிறப்புநிலைக் கருத்தரங்குகள் மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் நடைபெறும். காலை 11 மணி முதல் மாலை 4 மணி வரை மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தின் பத்துப் பெரிய அரங்குகளில் மாநாட்டின் பேராளர்கள் பிரிந்து நின்று அறிஞர்கள் பலரின் ஆராய்ச்சிக் கட்டுரைகளைப் படிக்கக் கேட்பர்; அவைப்பற்றிக் கருத்துப் பரிமாற்றம் செய்வர்; இறுதியில் மதிப்பீட்டுக் கோவையாக்குவர். அவை 3000 பேர் ஒருங்கிருந்து கேட்கும் வசதி பெற்ற பெரும் பந்தலில் அறிஞர்களின் ஆராய்ச்சிக் கட்டுரைகள் மீது செய்யப்பெற்ற கருத்துப் பரிமாற்றங்களும் மதிப்பீடும் காலை 9 மணி முதல் 11 மணி வரை பல அறிஞர்களால் தொகுத்து உரைக்கப்பெறும்.

இவ் உலகத்தமிழ் மாநாட்டில் படிக்கப்படுவதற்கென உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்து அறிஞர்கள் பலர் எழுதிய 250 ஆராய்ச்சிக் கட்டுரைகள் வந்துள்ளன. இவை 5ஆம் தேதி முதல் 9ஆம் தேதி வரையுள்ள 5 நாட்களில் நாள் ஒன்றுக்கு 50 கட்டுரைகளாகப் பேராளர்கள் முன்பு படிக்கப் பெற்று விவாதிக்கப்பெறும். இவைகளின் சுருக்கங்களைப் பொது மக்களும் கேட்டுச் சிந்திக்கும் வண்ணம் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பொதுவாக, தமிழ் மொழி, இலக்கியம், தமிழின் நிலை இவைபற்றிப் படிக்கப்பெறும். இவ் ஆராய்ச்சிக் கட்டுரைகள் தமிழறிந்த எல்லா நிலையினர்களும் கேட்டுப் பங்கு பெற்றுப் பயன் அடையுமாறு நிகழ்ச்சிகள் அமைக்கப்பட்டு உள்ளன. இவைகளைக் கேட்கும் தமிழ் உலகம் – தாம் யார்? தம் நிலை அன்றும் இன்றும் எப்படி? இடர்ப்பாடுகள் ஏன்? முன்னேறி உயர வழிகள் யாவை? என எண்ணத் தூண்டும் வகையில் அமைக்கப் பெற்றுள்ளன.

உலகத் தமிழ்ப் பெருவிழா நடைபெறும் கூடலில் கூடப்போகும் நூறாயிரக்கணக்கான மக்கள் மகிழ்வும் இன்பமும் பயனும் பெறும் வகையில் ஆலவாய் அண்ணல் கோலம் செய்யும் பெருநகரில் உள்ள பெரிய பெரிய அரங்குகளில் – லட்சுமி சுந்தரம் அரங்கு, தமிழிசை மன்றம், மதுரைக்கல்லூரி மன்றம், சங்கரதாஸ் சுவாமிகள் நாடக மன்றம் போன்ற பல மன்றங்களில் மாலை வேளைகளில் இசைப்பேரறிஞர்கள், நாடகக் குழுவினர், நடனக் குழுவினர் பலர் தங்களின் கலைத் திறன் காட்டுவர். இவர்தம் கலைத் திறன் வாயிலாகத் தமிழின்

பெருமையையும் தமிழனின் பெருமையையும் சாதாரண மக்களும் உணர்ந்து தெளிவடைவர். இவைகளைக் காட்சிப் பொருளாகக் காட்டும் வண்ணம் தமுக்கம் பெருவெளியில் கண்காட்சி ஒன்றும் நடைபெறும். இக்கண்காட்சியின் வாயிலாக தமிழ் கலை, இலக்கியம், பண்பாடுகள் தெளிவுற்று ஓங்கும்.

இவ்வாறு மதுரைப் பெருநகரின் எல்லா இடங்களிலும் தமிழின் சிறப்பு, தொன்மை, உயர்வு ஆகியவற்றைக் காண பல்வேறு நிகழ்ச்சிகட்கு ஏற்பாடு செய்யப்பட்டு கற்றவர், கல்லாதவர், ஆராய்ச்சி வல்லுநர் போன்ற எல்லா வகையினரும் கண்டும், கேட்டும், சொல்லியும் பயன் பெறும் வகையில் அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறு பல்வேறு இடத்துப் பல்வேறு நிகழ்ச்சிகள் ஏற்படுத்தப்பட்டிருப்பதால் நெரிசல் குறைவதும் ஏமாற்றம் தவிர்க்கப்படுவதும் ஏற்பட்டு எல்லாரும் மகிழ வாய்ப்பு ஏற்படும்.

இவைகளைத் தவிர பழம்பெருமை பலவற்றைப் பெற்றுள்ள மதுரைப் பெருநகரில் உள்ள திருமலை நாயக்கர் மகாலும், அங்கயற்கண்ணியின் ஆலயமும், அழகர் கோயிலும், திருப்பரங்குன்றமும், தெப்பக்குளமும் அணி செய்யப் பெற்றுக் காண்பாரைக் கவரும் வண்ணம் பல செயல்கள் செய்யப் பெற்றுள்ளன.

பொதுவாக, எல்லா வகையிலும் சிறப்புற அமைந்து பயன் மிக்க பலவற்றை உருவாக்க வல்ல மாநாடு இந்த ஐந்தாவது உலகத்தமிழ் மாநாடு என்றால் அது மிகையாகாது. வாழ்க வையகம். யாதும் ஊரே! யாவரும் கேளிர்! □

With the best compliments from:

M/s. Vijayakumar & Company

7/120, Avanashi Road, Coimbatore-18

Authorised Dealers for:

▷ **DUNLOP** : *INDUSTRIAL V-BELTS, INDUSTRIAL HOSES AND TRANSMISSION BELTINGS*

▷ **FENNER** : *INDUSTRIAL V-BELTS AND FAN-BELTS*

▷ **STOCKISTS**: *"MUNRO" BRAND VARIABLE SPEED BELTS*
"BRAMMER" LINK V-BELTS
"G. W." BRAND LEATHER BELTINGS

கூவநூல் - ஓர் அறிமுகம்

டாக்டர் ச. வே. சுப்பிரமணியன்

தமிழர் தொன்மை வாய்ந்தோர் என்ற பெருமையுடன் தொன்று தொட்டே பல கலைகளிலும் வல்லுநராய் விளங்கினர், விளங்குகின்றனர். என்ற புகழினையும் கொண்டுள்ளனர். இசை நாட்டியம், நாடகம், சிற்பம் போன்ற அழகுக் கலைகளிலும், நுண் கலைகளிலும் சிந்தனை செலுத்திய அதே பொழுதில் மருத்துவம், வானியல், கட்டிடக்கலை, நெசவுக்கலை முதலானவற்றிலும் மிகுந்த தேர்ச்சி பெற்றுள்ளனர். அவர்தம் அறிவுத் திறனை வெளிப்படுத்தும் கருவிகளில் ஒன்றாகக் **கூவ சாத்திரமும்** அமைகின்றது. இதனுள் ஓரளவு மரபு பற்றிய நம்பிக்கைகள் இடம் பெறினும் பெருமளவு அறிவியல் கண்ணோட்டமும் சோதிடமும் முக்கியத்துவம் பெற்றுள்ளமையைக் கிடைக்கும் கூவ நூல்கள் உணர்த்துகின்றன.

பழந்தமிழர், வழிப்போக்கர்களுக்கும், கால் நடைகளுக்கும் உதவும் பொருட்டு வழித்தடங்களில் கூவம் தோண்டி வைத்திருந்தமையைச் சங்கப் பாக்கள் சுட்டுகின்றன. (நற்றிணை 240; புறநானூறு 306) கிணறு வெட்டுவதற்கு வல்வாய்க் கணிச்சியையும், நீர் இறைப்பதற்குக் கொடுவாய்ப் பத்தலையும் பயன் படுத்தியமையை அகநானூறு (22,155) காட்டும். 'உண்ணு நீர் கூவல் குறைவின்றிக் தொட்டானும்........ சாவா உடம்பெய்தினார்' (14) எனும் திரிகடுகத்தின் கூற்று பொதுக் கிணறு அமைப்பதனைச் சிறந்த அறமாகக் கொண்டமையைப் புலப்படுத்துகிறது. கூவ நூல் வல்லாரை, உல்லியர் என்று திவாகரமும், சல்லியர் என்று கயாதர நிகண்டும் உரைத்திருப்பதன் மூலம் பல கூவநூல்கள் அக்காலத்தில் சிறப்புற்றிருந்தமையை உணரலாம்.

கூவம், என்று கிணற்றினைக் குறிக்கப் பயன்படும் சொல் சங்க காலத்தில் கூவல் என்றே பயின்று வரக் காண்கின்றோம். எனவே கூவல் என்பது பிற்காலத்தில் கூவம் என்றாயிற்று எனலாம். கூவல் எனில் பள்ளம் என்ற பொருளும் உண்டு. சங்கப் பாக்களில் கூவல் பற்றிய செய்திகள் வரும் இடங்களை நோக்குகையில் அது இன்று நாம் காணும் கிணறுகள் போன்று ஆழமின்றி இருத்தல் புலப்படுகிறது. 'அவர் நாட்டு உவலக் கூவல் கீழ் மான் உண்டு எஞ்சிய கலுழி நீரே' எனும் ஐங்குறு நூற்றின் (203) கூற்று ஆழமற்ற பள்ளங்களையே எண்ணச் செய்கிறது. எனவே, சங்க மக்கள் நீர் தரும் கிணற்றினைக் காரணப் பெயராகக் 'கூவல்' என அமைத்ததாகக் கொள்ளலாம். கூவம் என்ற சொல்லை, கூ + அம் என்று பிரித்து கூ என்பது பூமியையும், அம் என்பது நீரையும் உணர்த்தி, பூமியில் உள்ள நீரான ஊற்று நீர் என்று பொருள் கொள்ளலாம். வடமொழியில் கிணற்றைக் குறிக்கும் கூபம் என்ற சொல்லே தமிழில் கூவம் என்று வழங்குகிறது என்ற கருத்தும் உண்டு. கூபம் என்றும் தமிழில் வழங்கக் காண்கிறோம்.

இக் கட்டுரை ஆசிரியர் சென்னையில் உள்ள உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் இயக்குநராக உள்ளார்.

ஒவ்வொரு நிலத்தில் நில அமைப்புக்கு ஏற்ப நீர் கிடைக்கும் விவரம், அந்நீரின் தன்மை, நிலத்தில் வளரும் மரம், செடி, கொடிகள் கொண்டு நீர் உள்ள இடத்தை ஆராய்தல், நீர் கிடைக்கும் இடங்களில் உள்ள புற்றுகளின், ஊற்றுகளின் இயல்பினைக் காட்டல், நிலத்தில் உள்ள நீருக்கும், ராசி, கோள் இவற்றிற்கும் உள்ள தொடர்பு, தொடுகுறி ஆகியன கூவல் சாத்திரத்தின் முதன்மைக் கூறுகளாக அமைகின்றன.

பண்டைத் தமிழர் மரபான, ஐவகை நிலப்பாகுபாட்டினைக் கூவ நூல்கள் தம் நிலப்பகுப்பிற்கும் ஏற்றுக் கொண்டுள்ளன. ஒரு நிலத்தில் உள்ள மண்ணின் தன்மை கொண்டு அது குறிஞ்சி, முல்லை, எனப் பகுத்துணர்த்தப்படுகிறது. பாறைகள் நிரம்பிய இடம் குறிஞ்சி, பெரு மணலாயுள்ள இடம் நெய்தல், இளம் பார் (பாறை) நிறைந்த இடம் முல்லை, சேரளைந்த பகுதி மருதம், வெள்ளைச் சாலோடை பாலை என்றும் வகைப்படுத்தப்பட்டுள்ளது. மற்றும் நிலப்பகுதியைத் தோண்டத் தோண்ட ஒவ்வொரு வகை நிலத்தின் உட்தோற்றமும் வேறுபாடுடையனவாய் அமைதலையும் இவை தெளிவாக இயம்புகின்றன.

குறிஞ்சி நிலத்தில் மண்கண்டம் 6 சாண், அதன் கீழ் சரிசல் 2 சாண், வெள்ளைப்பார் 8 சாண், கொப்பரைக்கல் 3 சாண். கருமையான அப்புப்பார் 4 சாண், நாவரிக்கல் 10 சாண் என ஒவ்வொன்றாக அமைந்திருக்கும். இது போன்று பாலையில் முதலில் வெண்ணிற மண்ணும் சாம்பலும் 5 சாண், பின் வெள்ளைப் பார் 6 சாண், கொப்பரைக்கல் 6 சாண், முத்துக்கல் 3 சாண், பொன்னிற அடுக்குக்கல் 9 சாண் முதலியனவும் கொண்டிருக்கும்.

முல்லை நிலம் மண் கண்டம் 7 சாண், செம்பார் 3 சாண், வெள்ளைப் பாரும் நீரும் 5 சாண், கொப்பரைக்கல் 8 சாண், நாகவரிக்கல் 6 சாண், முத்துக்கல்லும், பொன்னிறக்கல்லும் 6 சாண், கருமணல் 1 சாண் என்ற அமைப்பினைக் கொண்டிருக்கும். நெய்தல் மண்கண்டம் 8 சாண், வெள்ளைப்பார் 8 சாண், மஞ்சள் பார் 3 சாண், கரிமுகக்கல் 8 சாண், சிப்பிக் கல்லடுக்கப்பாரும் நீரும் 8 சாண் என இவற்றைப் பெற்றிருக்கும். மருதத்தில் மண்கண்டம் 5 சாண், வெள்ளைப்பாரும் நீரும் 8 சாண், அப்புப்பாரும் வள்ளிப்பாரும் பொன்னிறக்கல்லும் விரவி 9 சாண் என அமைந்திருக்கும்.

நிலத்தினை வெட்டும்பொழுது அது எவ்வகை நிலத்தைச் சார்ந்ததோ அதற்கேற்ப நீர் கிடைக்கும் ஆழமும் வேறுபடுகின்றது. பூமியின் மேல் மட்டத்திற்கும் நீர் கிடைக்கின்ற பகுதிக்கும் இடைப்பட்ட பகுதியினைப் பற்றிய விளக்கத்தினையே மேற்சுட்டியுள்ள குறிப்புகள் காட்டுகின்றன. குறிஞ்சியில் 33 சாணின் கீழும், பாலையில் 30 சாணின் கீழும், முல்லையில் 36 சாணிலும், நெய்தலில் 35 சாணிலும், மருதத்தில் 22 சாணிலும் நீர் வரும் என்பதும் இவ் அளவுமுறை கொண்டு உணர்த்தப்படுகின்றது.

இந்நீர் ஆழம் பற்றிய குறிப்புகள் ஒன்றுபோல் எல்லா ஏடுகளிலும் காணப்படவில்லை. வேறுபாடுகள் உள. சான்றாக, குறிஞ்சி–32 சாண். பாலை–22, முல்லை–25, நெய்தல்–28, மருதம்–25 என்றும் குறிக்கப்பட்டிருத்தலைக் காட்டலாம்.

நிலத்தில் புறத்தோற்றத்தினைக் கொண்டே இந்நிலத்தில் நீர் இருக்கும் அல்லது இருக்காது என்பதனை அறிய அங்கு வளரும் தாவரங்களைப் பயன்படுத்தி உள்ளனர். பெரிய மரங்களை மரக்கரு என்றும், பிறவற்றைப் புற்கரு என்றும் பாகுபடுத்தி அவை பற்றிய விளக்கங்களையும் நல்கியுள்ளனர்.

ஆல், அத்தி, பாற்சொடி, மருது, இலுப்பை, வஞ்சி, மா, புளி, நொச்சி, இத்தி, பாலை, புங்கு முதலிய மரங்கள் உள்ள இடங்களிலும், வெண்புல், கரும்புல் கருஞ்சடைப் புல்லு, செங்கோலறுகு, குறுந் தொட்டி, தொப்பை, சிறு பீளை, சாரணை, கோரை, பொடுதலை, நாயுருவி, காக்கணம், எருக்கு, பிராய், கரும்பூலா இவையுள்ளயிடங்களிலும் நீர் இருக்கும் என்பது பொதுவான கருத்து.

நில வகைகளுக்கு நீர் ஆழம் கணக்கிட்டது போன்று சிலவகைத் தாவரங்கள் இருக்கும் இடத்திற்கும் குறிப்பிட்டிருப்பது சுட்டத்தக்கது. வெள்ளெருக்குத் தனித்து நின்றால் நின்ற இடத்தில் மூன்று முழத்தினில் ஓடை தோன்றும், முழம் நான்கில் தேரை தோன்றும், மிகுதியான தண்ணீரும் கிடைக்கும். நவ்வல் நின்றால் மூன்று முழத்தினில் நீர்க் கசிவும், கசிவு நின்ற முழம் ஐந்தில் வெகு நீரும் ஆகும் எனும் பகுதி களைக் காட்டாக்கலாம்.

இக்கருவகைகளை, எது எவ்வகை நிலத்திற்குரியது எனப் பாகுபடுத்து வாரும் உளர். அறுகு, தெர்ப்பை, கஞ்சாங்கோரை, குறுஞ் சடைப் புல்லு, கோரை, பீளை, குறுந்தட்டி, வெப்பூலா, கருப்பூலா, நீர்ப்பூலா, வேம்பு, கரந்தை, பொடுதலை, பஞ்சாத்திப் புல்லு, சாறணை, நாயுருவி, குறுஞ்சடைப் புல்லு, செங் கோரை, மாவிலங்கு இவை மருதத் திற்கும்; உவ்வா, இலுப்பை, நொச்சி, மாவிலங்கு, புங்கு, அரசு, கல்லத்தி ஆகியன பாலைக்கும், பாலை, பூலா, அத்தி, வஞ்சி, அரசு, அத்தி இவை முல்லைக்கும் உரித்தாக இயம்பப் பட்டுள்ளது. குறிஞ்சி நெய்தலுக் குரிய நிலக்கருக்கள் உரைக்கப்பட வில்லை. இக் கருத்துரையாளரின் எண்ணப்படி குறிஞ்சியிலும் நெய் தலிலும் நீர் மிகவும் குறைவாகவும், பிறவற்றில் அதிகமாகவும் உண்டு.

நிலத்தின் மேற்பரப்பில் சிலந்தி படர்ந்திருக்குமானால் 3 முழத்தில் நீர் தோன்றும் என்றும் வெள்ளெலி, தேரை, உடும்பு, ஓந்தியிவை ஊரு மாகில் அந்த நிலத்தில் 5 முழத்திற் குள் மிக அதிகமான நீர் இருக்கும் என்றும், செம்பாம்பு இருப்பின் மூன்று முழத்திற்குள்ளே நீர் தோன் றும் என்ற கருத்தும் காணப்படு கிறது.

கொடிப்புற்று, ஊமைப் புற்று, பாலி ளைப் புற்று, ஆயிளைப் புற்று, பிட்டான் புற்று என புற்று வகைகள் பேசப்படுகின்றன. கொடிப் புற்று என்பது நெடிமை போன்று ஒடுங்கி யிருக்கும் என்றும் அதற்கு 20 சாணில் பெருநீர், அதற்குக் கீழ் 5 சாணில் ஓடை ஆகியன தோன்றும் என்றும் காணப்படுகிறது. பிட்டான் (பிட்டின்) புற்று தாழ்ந்து உருண்டை போன்ற கொடுமுடி உடையதாய் நிற்கும். அதற்கு 16 சாணில் நீர் தோன்றும். அடுத்த 8 சாணில் பேரூற்று இருக்கும்.

ஆயிளைப் புற்று அகன்ற கண்ணை உடையதாய் வடவடக்கை போன்று கறையான் மொய்த்து

ஆய்ந்து கொண்டிருக்கும். அதில் 12 சாணில் நீர் தோன்றும். அதன் கீழ் எட்டுச் சாணில் மாடம் தோன்றும் என்றும் 3 சாணில் செம்பாம்பு தோன்றும், அப் பாம்பு ஒரு சாண் நீளமும் சொட்டைப் பருமனும் உடையதாகவும் இருக்கும். அப் பாம்பைக் கொன்று மண்ணுள் பால் வார்த்துப் புதைத்தல் வேண்டும். பின் 3 முழத்தினில் ஐம்பொன் நிற முடைய தேரை தோன்றும். தேன் நிறமுடைய நீர் தோன்றும். அங்குச் சிவந்த வர்ணமுடைய உண்டைக்கல் தோன்றி உடைபடும், இதற்கு ஞாயிற்றுக்கிழமை பலியிட வேண்டும் என்ற குறிப்பும் காணப்படுகின்றது.

ஊமைப்புற்றின் கீழ் 16 சாணில் நீர் தோன்றும். அதில் இரண்டு தவளை கிடக்கும். சாண் 5 முழத்தினில் ஓடை தோன்றும். அதில் முதுவரால் காணப்படும். பாலிளைப் புற்றின் கீழ் 12 சாணில் நீர் தோன்றும். அதன் கீழ் 5 சாணில் பெருநீர் காணப்படும்.

நிலவகைகளுக்கு உரைத்தவற்றுள் முரண்பாடு காணப்படுவது போன்றே புற்றுவகைகளைப் பற்றிய குறிப்புகளை நவிலுமிடத்திலும் அதிகமான வேறுபாடு புலப்படுகிறது. கொடிப் புற்று, பிடரிப்புற்று, ஆமைப்புற்று, அப்புப்புற்று, பிட்டுப்புற்று (பிட்டான் புற்று?) ஊமைப்புற்று, உருவப்புற்று ஆகியன உள்ள இடங்களில் நீர் இருக்கும் என்பது ஒரு சாரார் கருத்து.

இவர் பலவளிப்புற்று என்று ஒன்றினைச் சுட்டிக் காட்டி அது இடந்தோறும் கண் திறந்து இருக்கும், அதன் கீழ் அஞ்சு முழத்தில் பெருக நீர் தோன்றும். அப்புற்று இருக்கும் தலத்தில் தூர்த்தழுத்த புங்கு நின்றால் ஐந்து முழத்தினில் பெரு நீர் உண்டு. அங்குக் கட்டப்பரிசை விட்டு அதன் ஆரத்தில் சிலந்தி நூலிருக்கில் அஞ்சு முழத்தில் நீர்த் தோன்றும் அதன் கீழ் வடக்கடைய உண்டைப்பாரம் இரண்டு உண்டு. அதில் மூன்று முழத்தில் செம்பாம்புத் தாரை தோன்றும். அதில் வெள்ளெருக்கு நிற்கில் அதிகமான நீர் இருக்கும். புங்குபுராய் நின்றால் வடமேற்கிலிருந்து ஆறு தலை வைத்து வரும் என்ற விளக்கமும் அளிக்கிறார்.

இப்புற்றுகள் தவிர 'வினைப்புத்து, பலகண்புத்து, தொந்திப்புத்து என்பனவும் குறிக்கப்படுகின்றன. குறிஞ்சியில் படலைப்புத்தும், நெய்தலில் குடைப்புத்தும், மருதத்தில் ஏழுகண்புத்தும், காணப்படும்' எனவும் சுட்டப்பட்டுள்ளது.

நீர் ஊற்றுகள் பற்றிப் பேசும் போது அவற்றுடன் ராசிகளையும், கிரகங்களையும் இணைத்துப் பார்க்கும் பாங்கு காணப்படுகிறது. நாலாம் இராசி சூழ்ந்திடும் கிரகம் பார்த்து கிணறு வெட்டும்போது அது ஆட்சி உச்சம் உடையதானால் பேரூத்து என்றும் நட்பு வீடானால் நல்ல கசிவூத்து என்றும், பகை, நீசமானால் நீருத்தின்றி நீர் அற்பம் என்றும் நவில்வர். தீக்கோள்கள் பார்ப்பின் கீழ்நீர் ஊற்று சரியாக இருக்காது. சுபக்கோள்களும், சிலக் கோள்களும் பார்க்க அல்லது இருக்க, கீழ்நீர் ஊற்று உள்ள கிணற்றில் நீர் பெருகும். ஊற்றுகளின் இயல்புகள் விரிவாக இயம்பப் பட்டிருப்பினும் அவை கோள்களுடன் இணைத்து நோக்கியிருப்பதனால் தெளிவு பெற இயலவில்லை.

கிணறு வெட்டுமுன் அவ்விடத்தில் உள்ள நீரின் ஆழம், தன்மை

அறிவதற்குத் தொடுகுறி அமைப்பு முக்கியத்துவம் பெற்றுள்ளது. கிணறு வெட்டுகிற இடத்தில் மெழுகிப் பிள்ளையார் வைத்து நிறைநாழி, தேங்காய், பாக்கு, வெற்றிலை, தட்சணை வைத்து, தூப தீபம் கொடுத்து, நமஸ்கரித்து, கிழக்கு முகமாக இருந்து பூமாதேவியைத் துதித்துக் கொண்டு, ஒரு சிறுவனைத் தன் அவயவங்களில் ஏதேனும் ஒன்றைத் தொடச் சொல்லி அதற்குரிய பலனை அறியச் செய்வது தொடுகுறி ஆகும்.

சிரசைத் தொட்டால் ஒன்பது சாணில் வெண்பாருண்டு; உடைபடும். பதினொரு சாணில் பாறை மலை தோன்றும்; வெட்டுவது கடினமாயிருக்கும். பன்னிரண்டு சாணில் உப்பு நீர் கிடைக்கும். குறைவாகவும் இருக்கும். கண்ணைத் தொடுகில் 11 சாணுக்குமேல் 22 சாணுக்குள் பெருநீர் உண்டு. நெத்தி தொட்டால் வெட்டு வலிதாய் இருக்கும். 22 சாணுக்குமேல் நீர் அற்பமாக இருக்கும். வாயானால் 10 சாணுக்கு மேல் கருமலை தோன்றும். அதற்குக்கீழ் 5 சாணுக்கு மேல், 9 சாணுக்கு மேல் 22 சாணுக்குள்ளே பெருநீர் உண்டு.

புருவம், கன்னம், காது, மூக்கு இவற்றில் ஒன்றைத் தொட்டால் 10 சாணில் சேறும், சகதியும், மணலும் விரவியிருக்கும் 22 சாணில் ஊத்துக்கண் ஓடைத் தோன்றும். 26 சாணில் பெருநீர் உண்டு. கழுத்து, தோள், நெஞ்சு, உள்ளங்கை, முதுகு, பிடரி, முழங்கை இவற்றுள் ஒன்று தொட 30 சாணில் நீர்த் தோன்றும். அது உப்பு நீராக இருக்கும். இடது மார்பானால் 4 சாணில் செம்பார் தோன்றும். 18 சாணில் அப்புப்பாரும்; கருமணலும் விரவிக்கிடக்கும். 19 சாணில் மண்கண்டம் தோன்றும். 20 சாணில் கரும்பார் தோன்றும். 21 சாணில் குழி தோன்றும். 22 சாணில் பெருநீர் உண்டு. தென் மேல் மூலையில் ஊத்துத் தோன்றும்.

இங்கு விடப்பட்டுள்ள மீதி அவயவங்களைத் தொடுகில் பெரும் பான்மை நீர் இராது. இருப்பினும் அஃது உப்புத் தண்ணீராகவும், அற்பமாகவும் இருக்கும். பிறவற்றைப் போன்றே இதற்கும் நீராழம் உணர்த்துவதில் மிகுந்த வேறுபாடு காணப்படுகிறது. இம்முறையின்றி இராசிகளைக் கொண்டும் தொடுகுறிமுறை கையாளப்படுகின்றது.

இதனுள் ஒவ்வொரு ராசிக்கும் உரியதான உறுப்பு குறிக்கப்பட்டு அதன்படி நீரின் தன்மை அறியப்படுகின்றது. மேடம்—தலை; இடபம்—முகம்; மிதுனம்—கழுத்து, கடகம்—மார்பு, சிங்கம்—தோள், கன்னி—நகில், துலாம்—முதுகு, விருச்சிகம்—வயறு, தனுசு—அரை, மகரம்—துடை, கும்பம்—முழங்கால், மீனம்—பாதம் என உணர்த்தப்பட்டுள்ளன. இங்குப் பொது நிலையில் ஒவ்வொரு உறுப்புக்கும், ராசிக்கும் பலன் உரைக்கப்பட்டுள்ளது.

தலை, நெத்தி, சின்னீர், கன்னம், தளவாய், முதுகு, நகில், வயறு, தொப்புள், துடை, முன்னங்கால், இவற்றிற்குப் பெருநீர்; செவி, கழுத்து, மார்பு, தொப்புள், அரை, உள்ளங்கால் இவை தொடில் நீரில்லையாம். மேடம்—பார்; சிங்கம்—பாறை, கன்னி—நன்னீர்; மிதுனம்—? கடகம்—வெள்ளம், துலாம்—பார், விருச்சிகம்—பழங்கிணறு, தனுசு—சின்னீர், மகரம்—நன்னீர் எனக் காட்டப்பட்டுள்ளது.

இம்முறையின்படி எப்படி ராசியினை அறிவது என்பதற்கும் வழி காட்டப்பட்டுள்ளது. நிலத்தில் 28 ராசிகளுக்கும் 28 அறைகளை வரையும் முறையும் அவற்றில், அவற்றை நிறுத்தும் முறையும் காண்பிக்கப்பட்டுள்ளது. இவ்வமைப்பும் பகல் முன்பொழுது, இரா முன்பொழுது, பகல் பின்பொழுது, இரா பின்பொழுது என நேரத்திற்குத்தக்க மாறுபாடுடையது.

ராசிகளின் உதயத்தினைக் கொண்டும், பலன் கூறுவது; அமைந்துள்ளது. மேடம்–பாறை; இடபம்–கல்லு; மிதுனம்–நீரில்லை; கடகம்–நீர் பெரிது; சிங்கம்–கல்லூற்று; கன்னி–நீர் பாயும்; துலாம்–பார்; விருச்சிகம்–சித்தூத்து, தனுசு–மலை, மகரம்–பார், கும்பம்–பெருநீர், மீனம் பெருக நீர் என்று குறிப்பாகவும், கும்பம்–முக்கால் நீர், இரண்டே கால் புருசம் தோன்றும்; விருச்சிகம்–மூன்றேகால் புருசம் தோன்றும்; துலாம்–முழு நீர், இரண்டேகால் புருசம் தோன்றும்; சிங்கம்–பார் உண்டு, நீர் இல்லை, கற்கடகம்-முழுநீர், இரண்டு புருசத்தில் தோன்றும்; மேடம்–வெண்கல்லு, நாலுபஞ்சமி, இடபம், கன்னி-மூன்று புருசத்தில் தோன்றும் என்று சற்று விரிவாகவும் காணப்படுகிறது.

கிரகங்களைக் கொண்டு பலன் உரைக்கும் போது, நீர் காட்டும் நிலத்தினைப் பன்னிரு பிரிவுகளாக்கி, நிகழ்கின்ற ராசி (கிரகம்) தனை பிரம்மன் மேல் வைத்து வலம் இடமாக எண்ண, மதி, வெள்ளி, குரு அமையும் திக்கில் விடமே நீராம்; பாம்பாகில் பழைய கிணறு, பருதி, மதி, செவ்வாய், இவற்றில் நீரில்லை, புதன் ஆகில் கல்லுண்டு என்று குறிக்கப்படுகிறது.

இடபம், கடகம், விருச்சிகம், கும்பம், மீனம், துலாம் ஆகியன சில ராசியாகவும் (நீர் ராசி) சுக்கிரன், சந்திரன், ராகு மூன்றும் சில கிரகமாகவும், மகயிரம், கேட்டை, அலை, சித்திரை, சோதி, விசாகம், திருவோணம், அவிட்டம், சதையம், உத்திரட்டாதி, ரேபதி, அசுபதி, புணர்தம், பூசம், ஆயிலியம் முதலிய பதினைந்தும் சில நட்சத்திரங்களாகவும் உரைக்கப் பட்டுள்ளன.

இவை தவிர சில பொதுவகையான எண்ணங்களும் கூறப்பட்டுள்ளன. உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, கேட்டை, சோதி, சித்திரை, ரோகணி, திருவோணம், அத்தம், மிறுகசீரளம், பூராடம், மகம் எனும் இவ் நட்சத்திரங்களும், பஞ்சமி, சத்தமி, திரிகை, ஏகாதேசி, திரையோதசி, பிரதமை ஆகிய திதிகளும், கும்பம், மீனம், மகரம், இடபம், கற்கடகம் முதலிய இராசிகளிலும், குளம், தெப்பம், கிணறு ஆகியன வெட்டுதல் நன்று.

மனைக்குக் கிணறு கிழக்குப் பக்கம் இருப்பின் புத்தி, வடகிழக்குப் பக்கம் இன்பம், வடக்கு — தேகநலம், வடமேற்கு—ஆயுசு மரணம், மேற்கு—சம்பத்து, தென்மேற்கு — விருந்து, தெற்கு—தறிமாளும், தென்கிழக்கு—புத்திரகாணி என கிணறு இருக்கும் திசைகளும் என்னென்ன பலன் என்பன நவிலப்பட்டுள்ளன.

நீர் இருக்கக் கூடிய இடத்தில் மழைக்காலம் வெப்பமாயும், கோடைகாலம் குளிராகவும் இருக்கும். அந்நிலத்தில் உள்ள தாவரங்களும் இவ்வியல்பைப் பெற்றிருக்கும்.

ஒவ்வொரு நிலத்திற்கும் நாள், ராசி, கிழமை, பறவை போன்றன

உணர்த்தப்படுவதும் காணப்படுகிறது. பாலைக்கு நாள்—ரோகிணி; பக்கம்—அமர பட்சம்; தசமி, இராசி—கும்பம்; குலம் — வெள்ளாளன்; கிழமை—வெள்ளி; கிரகம்—செவ்வாய்; பட்சி—வல்லூறு. மருத நிலத்திற்கு நாள்—உத்திரட்டாதி; ராசி—துலாம்; கிழமை—வெள்ளி; குலம்—செட்டி; உதையம்-புதன். குறிஞ்சி நிலத்தின் நாள்—திருவாதிரை; ராசி—கன்னி; பக்கம்—ஏகாதசி; குலம்—அரசன்; கிழமை—திங்கள்; உதையம்—சனி. முல்லை நிலத்திற்கு நாள்—திருவோணம், ராசி–மேடம்; பக்கம்–ஏகாதேசி; கிழமை—வியாழன், குலம்—பிராமணன், புதன்; பட்சி—காகம், நெய்தல். நிலத்தின் நாள் — திருவோணம்; ராசி—மிதுனம், கற்கடகம் பக்கம்—துவாதேசி, குலம்—அன்னியகுலம், கிழமை — சனி, உதயம் — வியாழன், பட்சி—கோழி என அச்செய்தி விளக்கப்பட்டுள்ளது.

நீரின் பண்பாக, நவ்வல் நின்ற நிலத்தினின்றும் பெறும் நீரால் விடம் தீரும், எலி கடியும் தீரும் வெப்புத் தீரும் என்றும், புங்கும், பூலாவும் நிற்குமிடத்தினின்று பெறும் நீரும் முன்னீர் கொள்ளமுடியாத விடத்தைத் தீர்க்கும் என்று சிறப்பிக்கப்பட்டுள்ளது.

கிணறு தோண்டுவதற்குக் குறிப்பிட்ட நிலத்தில் மதியத்தில் நேரம் பார்த்து வெட்டினால் நல்ல தண்ணீர் காணும். அந்திக்காலத்தில் வெட்டினால் கடுத்தத் தண்ணீர் உண்டாகும்.

நாட்டுப்புறக் கலைகளுள் ஒன்றாக இக் கூவ சாத்திரத்தினையும் கருதலாம். கிடைத்துள்ள ஒன்பது ஏட்டுச் சுவடிகளில் வழக்கு மொழியே அதிகமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதாலும், 18, 19 ஆம் நூற்றாண்டினைச் சார்ந்ததாக அம்மொழி நடை தோற்றம் தருவதாலும், வழிவழியாக வாய்மொழியில் வழங்கப்பட்டு இந்நூற்றாண்டுகளில் ஏட்டில் இடம் பெற்றிருக்கலாம் எனவும் கருத வாய்ப்புண்டு. தமிழ் மொழி மரபுப்படி, ஒரு நூலினை அகத்தியர் எழுதினார் எனக் கூறுதல் சிறப்பாதலின் இவ்வேடுகளும் தங்கள் கருத்திற்கு அகத்தியரையும், மயன்மகனையும் தோற்றக் கர்த்தாவாக்கி உள்ளனர். மிக எளிய நடையுடையதானாலும், சோதிடக் கலை விரவி வருவதனால் இதனை முழுமையாகப் புரிந்துகொள்வதில் இடர்ப்பாடு ஏற்படுகிறது. ஏடுகளிடையே நீராழம் குறிப்பதில் காணும் வேறுபாட்டிற்கு ஏடுகளின் பிறப்பிடங்களைப் பொறுத்து அமைகிறது என அமைதி காணலாம். □

இரத்த ஓட்டத்தில் காந்த சக்தி

மனித உடலில் இரத்த ஓட்டத்தை விரைவு படுத்தவும் கட்டுப் படுத்தவும், காந்த சக்தியைப் பயன்படுத்தலாம் என்று சோவியத் விஞ்ஞானிகள் கண்டறிந்திருக்கிறார்கள்.

அறுவை சிகிச்சை செய்யும்போது, சில வேளைகளில் இரத்தக் குழாய்களில் இரத்தம் உறைந்து (கெட்டியாகி) சிகிச்சைக்குத் தடங்கல் ஏற்படுகிறது அல்லவா? சிகிச்சை செய்யும் பகுதியில் காந்த மண்டலத்தை உருவாக்கினால் அங்கு இரத்தம் உறையாது.

இதேபோல் இன்னொன்றுக்கும் காந்தத்தைப் பயன்படுத்தலாம். இரத்தக் குழாயில் சுவர்கள் சில இடங்களில் பலவீனம் அடைந்திருக்கும். அத்தகைய இரத்தக் குழாய்ச் சுவர்களைப் பலப்படுத்த அங்குக் காந்த மண்டலத்தை உண்டாக்கி இரத்தம் உறையும்படிச் செய்யலாம். இந்த முறையை, உடலின் எந்தப் பகுதிக்கும்—மூளைக்குள்ளாகக் கூட — பயன்படுத்தலாம்.

Phone : 87429

ANCHOR STANDARD INDUSTRIALS

826-B, Trichy Road ✱ Singanallur P. O.

COIMBATORE - 641 005

PRECISION THREAD ROLLED COMPONENTS

'HI-LOC' SELF LOCKING NUTS

Made to all Standards :

BSW, BSF, UNC, UNF, METRIC & HIGH TENSILE 8.8

QUALITY BOLTS & NUTS — IS : 1367

Kindly contact for all your requirements

Grams : "VIGILANCE"

Phones :

Office : 23718, 27338

Resi. : 24793

Godowns : 34079, 31041

C. R. S. Mannadiar & Bro.

(ESTABLISHED 1942)

N. H. ROAD - COIMBATORE - 641 001

DEALERS IN :

M. S. Rounds, Tor Steel Rods, Flats, Angles, Channels, Beams, M. S. Plates, M. S. Sheets, C. R. Sheets, G. I. Plain & Corrugated Sheets, Plywoods, Hardboards, Aluminium Sheets and Fittings, Tarpaulins, Welded mesh, Wire mesh, Fencing & Barbed Wire, G. I. Chainlinks and all other building accessories

both Wholesale & Retail

"CUSTOMERS SATISFACTION IS OUR MOTTO"

உள்ளிருள் நீக்கும் ஒளி

பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவி
பேராசிரியை டாக்டர் திருமதி கிருட்டிணா சஞ்சீவி

உலக நூல்களிலேயே திருவள்ளுவரின் திருக்குறள் பெற்றிருக்கும் உயர் இடத்தை இதுகாறும் ஒருவராலும் மறைத்தற்கோ, மறுத்தற்கோ, முடியவில்லை. அத்தகைய ஒழிக்கவொண்ணாத ஒளியாக - உலகப் பேரொளியாக - திருவள்ளுவரின் திருக்குறள் திகழ்கிறது. இந்த ஒளியின் உயர்வு யாது? பெரும்பாலும், சொல்லப்படும் பெருமை (1) திருவள்ளுவரின் திருக்குறள் வையகம் முழுவதற்கும் பயன்படுவது; (2) வாழ்க்கை முழுவதற்கும் பயன்படுவது என்பனவே ஆகும். இவ்விரு சிறப்புகளையும் (1) வையகப் பொது (2) வாழ்க்கைப் பொது என்றும் வாய்ப்பாடு செய்யலாம். ஆனால், இவ்விரு பொதுவுக்கும் பொதுவாக இருக்கும் இன்னொரு பெருஞ் சிறப்புப் பொது அறம் திருவள்ளுவர் திருக்குறளில் புதைந்து இருப்பது ஊன்றிப் பார்த்தாலே உணரத்தக்கது. பொதுவுக்கும் பொதுவான இவ்வறம், அளவறிதல், என்னும் அருஞ்சிறப்பு அறம் ஆகும். (இதன் அகலத்தையும் ஆழத்தையும் பேராசிரியர் டாக்டர் ந. சுப்பு ரெட்டியார் அவர்களின் மணி விழா மலரில் (1978) இக்கட்டுரையாளன் எழுதியுள்ள "அளவறிதல்-பொதுமறையில் ஒரு புதைபொருள்" என்னும் விரிவான கட்டுரையில் விளங்கக் காணலாம்).

திருவள்ளுவர் போற்றிய அளவறிதலாம் பொதுமை அறம் கௌதம புத்தர் போற்றிய நடுநெறி (mid path); கிரேக்கர்கள் போற்றிய பொன்னெறி (golden mean). இப்பொது நெறியினைச் சாதாரண ஆங்கிலத்தில் (moderation) என்று சாற்றுவர். இப்பண்பின் சிறப்பைப் புலப்படுத்தும் பொன்மொழிகள் சிலவற்றை (the new dictionary of thoughts...(1971) என்ற மேற்கோள் களஞ்சியத்தில் இருந்து ஈண்டு எடுத்துக்காட்டலாம். அவை வருமாறு.

1. Moderation is the silken string running through the pearl chain of all virtues — *Bp. Hall*

2. To go beyond the bounds of moderation is to outrage humanity — *Pascal*

3. Moderation is the inseparable companion of wisdom, but with it genius has not even a nodding acquaintance — *Colton*

4. I will not be a slave to myself, for it is a perpetual, a shameful, and the most heavy of all servitudes, and this end I may gain by moderate desires — *Seneca*

5. The true boundary of man is moderation-When once we pass that pale, our guardian angel quits his charge of us. — *Felthan*

6. Moderation is the center wherein all philosophies, both human and divine meet — *Joseph Hall*

7. Only actions give life strength, only moderation gives it a charm — *Richter*

8. Everything that exceeds the bounds of moderation, has an unstable foundation — *Seneca*

9. Moderation resemles temperance. We are not so unwilling to eat more as afraid of doing ourselves harm by it. — *Rochefoucauld*

10. The choicest pleasures of life lie within the ring of moderation — *Tuppur*

மேற்கண்ட moderation = மட்டுப்பாடு திருவள்ளுவர் திருக்குறளில் தனி அதிகாரமாக வலியுறுத்தப்படவில்லை எனினும் பாலில் படு நெய் போல்—விறகினில் தீ போல்—உடலுள் உயிர்போல் உள்ளுறையும் உண்மை உய்த்துணர்ந்து உய்யத் தக்கதாகும். இந்த மட்டுப்பாடு நெறியே இன்று தனிமனிதன் வாழ்விலும், அவ்வாழ்வால் இறைமை பெற்று அவ்வாழ்வையே இரைமை ஆக்கும் பொது வாழ்விலும் தட்டுப்பாட்டிற்குள்ள பெரும் பொருளாய் உள்ளது. இந்தத் தட்டுப்பாடு நீங்கும் பொழுதே, மட்டுப்பாடு இயல்பான கட்டுப்பாடு ஆகும் பொழுதே—மன்பதை மாண்பு பெறும், வையத்து வாழ்வாங்கு வாழும் வாழ்க்கை வடிவும் வண்ணமும் கொள்ளும். இன்னும் சொன்னால் — உண்மையைச் சொன்னால் இத்தகைய மட்டுப்பாடு நெறியே வானக வாழ்க்கைக்கு உரிய சமன்பாட்டு நிலையை (equanimity) உருவாக்கி இருவினை ஒப்பு நிலையையும் ஏற்படுத்தும். "எங்கெழில்என் ஞாயிறு எமக்கு?" எனச் சும்மா இருக்கும்—மனது சாட்சியதாக மருவி நிற்கும்–நெறிக்கு மேற்குறிப்பிட்ட அன்றாட வாழ்விற்குரிய மட்டுப்பாடு நெறியே அடிப்படை. இதை உணர்த்தவே போலும் திருவள்ளுவர் தம் திருக்குறளில் புறத்தோற்ற முரண்பாடாகப் (apparent contradiction) புலப்படும் எதிரிணைகள் பலவற்றை வாழ்வு பெற வைத்துள்ளார். சான்றுகளாக, நினை–நினையாதே, சொல்–சொல்லாதே, செய்-செய்யாதே, தூங்கு–தூங்காதே, மற–மறவாதே முதலியனவற்றைச் சுட்டலாம்.

இதுகாறும் விளக்கிய மனித மாண்பிற்குரிய அடிப்படை அறமாகிய அளவறிதலின் பயனாக எழுகின்ற உள்ளொளியே — உள்ளொளியினும் உயர்ந்த அருளொளியே—உள்ளிருளும் உலக இருளும் நீக்கும் ஒளி என்பதை எண்ணிப் பார்ப்போம்.

தமிழ் இலக்கியத் திறனாய்வு வரலாற்றில் தனிச் சிறப்பிடம் பெறுவது திருவள்ளுவ மாலை ஆகும். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இயற்றப்பட்டதாகவும் தொகுக்கப்பட்டதாகவும் எண்ணப்படும் இந்தத் திருவள்ளுவ மாலையில் 53 + 1 ஆக 54 செய்யுள்கள் காணப்படுகின்றன. அசரீரீ முதலாக இடைக்காடர் ஈறாகப் பாடியதாகப் பகரப்படும் வெண்பாக்களைக் கொண்ட இந்நூலில் உள்ள பாடல்களில் பல முச்சீர் முழுமணிகளாக விளங்கக்கூடிய ஈற்றடிகளைப் பெற்றுள்ளன. அவற்றுள் 16 வருமாறு:

1. உள்ளுவஎல் லாம்அளந்தார் ஓர்ந்து (6)
2. தாம்நின் றளந்த குறள் (14)
3. சொல்லிடினும் ஆற்றல்சோர் வின்று (15)
4. வள்ளுவர் வாய்மொழி மாண்பு (24)
5. திறத்துப்பால வள்ளுவனார் தேர்ந்து (25)
6. நேர்வனமற் றில்லை நிகர் (30)
7. ஆய்தொறும் ஊறும் அறிவு(31)

8. கொள்ள மொழிந்தார் குறள் (33)

9. வள்ளுவர் வாயுறை வாழ்த்து (35)

10. ஓதவழுக் கற்ற துலகு (37)

11. உள்ளிருள் நீக்கும் விளக்கு (47)

12. கொள்ளத் தகும்குணத்தைக் கொண்டு (48)

13. வையத்து வாழ்வார் மனத்து (49)

14. பன்னிய இன்குறள்வெண் பா (51)

15. உள்ளிருள் நீக்கும் ஒளி (52)

16. குறுகத் தரித்த குறள் (இடைக்காடர்)

மேற்கண்ட ஈற்றடிகளுள் "உள்ளிருள் நீக்கும் விளக்கும்" (47) "உள்ளிருள் நீக்கும் ஒளி" (52) என்ற இரு ஈற்றடிகளையும் கொண்ட திருவள்ளுவமாலை வெண்பாக்கள் இரண்டையும் முழுமையாக ஈண்டுப் பார்த்தல் இனிது.

அறம்தகளி ஆன்ற
பொருள்திரி இன்பு
சிறந்தநெய் செஞ்சொல்தீத் தண்டு
—குறும்பாவா
வள்ளுவனார் ஏற்றினார்
வையத்து வாழ்வார்கள்
உள்ளிருள் நீக்கும் விளக்கு

— நப்பாலத்தனார்

வெள்ளி வியாழம்
விளங்கிரவி வெண்திங்கள்
பொன்னென நீக்கும்
புறஇருளைத்—தெள்ளிய
வள்ளுவர் இன்குறள்
வெண்பா அகிலத்தோர்
உள்ளிருள் நீக்கும் ஒளி

— மதுரைப் பாலாசிரியனார்

மலிவு விலையில் அதிசய மருந்து

மார் சளி, சுவாசக் கோளாறு, 'ப்ளூ' காய்ச்சல், புற்று நோய், சரும நோய் முதலியவற்றுக்கு அற்புத நிவாரணி என 'இண்டர்ஃபெரான்' என்ற மருந்து உலகெங்கும் போற்றப்படுகிறது.

பலவித நோய்களை நலப்படுத்தும் சக்தி படைத்த 'இண்டர்ஃபெரான்' மருந்து, பசு, பன்றி ஆகியவற்றின் இரத்தத்திலிருந்து தயாரிக்கப்படுகிறது.

இதை முதன் முதலில் கண்டுபிடித்தவர் அலக்சாந்தர் ஐசாக்ஸ் என்ற பிரிட்டிஷ் விஞ்ஞானி. அவருடைய ஆராய்ச்சித் தகவல்களை அடிப்படையாக வைத்து சோவியத்து விஞ்ஞானிகள் மேற்கொண்டு ஆராய்ச்சிகளை நடத்தினர்.

மருத்துவ நிலையங்களில் பயன்படுத்துவதற்காக இந்த மருந்தை முதன் முதலில் உற்பத்தி செய்ய ஆரம்பித்தது சோவியத்து யூனியன்தான்.

இவ்விரு பாடல்கள், திருவள்ளுவமாலை பாடல்களுள்ளேயே தனிச் சிறப்பு வாய்ந்தவை என்பது தெளிவு. அவ்வாறாயினும் இவ்விரு பாடல்களுக்கு இடையே உள்ள ஒப்பின் அடிப்படையிலான உறழ்வும் உன்னத் தக்கது. முன்னது திருக்குறளையே ஒரு திருவிளக்காக உவப்புற உருவகிக்கின்றது. பின்னதோ கோள்களின் ஒளிக்கும், குறளின் ஒளிக்கும் உள்ள வேறுபாட்டை விளக்குகிறது. இரண்டும் வெவ்வேறு வழியில்—வகையில் கருத்து நடை போட்டாலும், திருக்குறளே சிறந்த ஒளி என்பதில் ஒருமையுறுகிறது. மேலும், இரு பாடல்களிலும் உள்ள ஈற்றடிகள் ஆழ்ந்து கருதத் தக்கன. அவை வருமாறு:

1. — — வையத்து வாழ்வார்கள்
உள்ளிருள் நீக்கும் விளக்கு

2. — — — அகிலத்தோர்
உள்ளிருள் நீக்கும் ஒளி

சந்தாதாரர்கள் கவனிக்க!

சந்தாவைப் புதுப்பித்துத் தொகை அனுப்பும் போதும், கடிதம் எழுதும் போதும் சந்தா எண்ணைக் குறித்து எழுத வேண்டுகிறோம்.

கலைக்கதிர்

மேற்கண்ட ஈற்றடிகளில் ஈற்று அயலடிகளில் காணப்படும் அடிக் கோடிட்ட சொற்கள் திருக்குறள் உலகப் பொதுமறை என்பதை உணர்த்துவதோடு, வேதகாலத்து முனிவர்கள் முதலாக, விஞ்ஞான காலத்துத் தத்துவ மேதை ஜே. கிருஷ்ணமூர்த்தி ஈறாக மெய்யறி வாளர்கள் பலரும் "உள்ளமே உலகம், உலகமே உள்ளம்" என்று திரும்பத் திரும்ப உணர்த்தி வந்துள்ள உண்மையை நினைவூட்டு வனவாகவும் உள்ளன. ஆம்! உள் ளிருளே உலக இருள்; உலக இருளே உள்ள இருள்.

"சித்த மயமிவ் வுலகம் உறுதிநம்
சித்தத்தில் ஓங்கிவிட்டால்—துன்பம்
அத்தனையும் வெல்ல லாமென்று
சொன்னசொல்
ஆரிய ராணியின் சொல்"

என்பது பாரதியாரின் பாட்டு.

புறவிருளினும் அகவிருளே போருக் கெல்லாம் வித்து என்பதை ஐ. நா. கல்வி விஞ்ஞானப் பண்பாட்டு (UNESCO) நிறுவனமும் நிறுவும். அதன் அடிப்படை வாசகம் ஒன்று வருமாறு:

The Governments of the states parties to this constitution on behalf of their peoples declare, that since wars begin in the minds of men, it is in the minds of men that the defences of peace must be constructed.

=Year book of the
United Nations (1946—'47) Page: 712

□

JAYVEEYES

Count on us
for
your Need and Choice
in
BEARINGS

JAYVEEYES MARKETING SERVICES PVT. LTD.

Dealers & Stockists: ALL TYPES & MAKES OF BEARINGS
Specialists: NEEDLE & SPECIAL TYPE BEARINGS
38-B, Dr. NANJAPPA ROAD ✶ COIMBATORE-641 018

Phone: Office 30228 Regd. Office 26635 ✶ Grams: JAYVEEYES

நம்மாழ்வார் காட்டிய நல்ல நெறி

இருசு

கடவுள் நிலை, உயிரின் தன்மை, வினைப்பயன் ஆகிய மூன்றில்தான் விஞ்ஞானம் மெய்ஞானத்தோடு மாறுபடுகின்றது. அறிவு பற்றி ஆராய்ந்து முடிவுகாணும் விஞ்ஞானியால் எல்லா அறிவிற்கும் மேம்பட்ட அறிவுமயமான மெய்ப்பொருளைத் தன் எல்லைகெட்டிய அறிவினால் அளந்தறிய முயன்று வெற்றி பெறாமல் கடவுளே இல்லை என்ற கருத்துக்கு வந்து விடுகின்ற நிலைமையைக் கூடக் காணுகின்றோம். ஆனால் ஐன்ஸ்டீன் போன்ற பெரும் விஞ்ஞானிகள் கண்டறிந்த ஒப்புமைக் கோட்பாடு என்ற தொடரின் வாயிலாக ஒருவர் மற்றவரினும் விஞ்சிய அறிவு படைத்தவராக இருப்பதனையும்; நேற்று கூறப்பட்ட விஞ்ஞான உண்மை அதற்கு முன்பு கூறப்பட்டுவந்த உண்மையினும் சற்றுத் தெளிவானதாக இருப்பதனையும்; இன்று கண்டறியப்பட்ட விஞ்ஞான உண்மை நேற்றுக் காணப்பட்ட உண்மையை மறுப்பதாக இருப்பதனையும்; அழகுடைய பொருள்கள் பலவற்றை நோக்குகையில் ஒன்று மற்றொன்றைவிட அழகாக இருப்பதனையும் ஆழ்ந்து எண்ணிப் பார்க்கையில் எல்லா உண்மைகட்கும் மேலான, முடிவான உண்மை ஒன்று இருக்க வேண்டும் என்றும்; எல்லாவற்றையும் விஞ்சுகின்ற ஆற்றல் ஒன்று இருக்க வேண்டும் என்றும்; எல்லாவற்றையும்விட அழகிய பொருள் ஒன்று இருக்க வேண்டும் என்றும் அனுமானிக்க முடிகிறது. இவ்வாறு எந்த ஒன்று பேராற்றல் உள்ளதோ எந்தவொன்று பேரழகினதோ எந்த ஒன்று உண்மையானதோ அதனைத்தான் பரம்பொருள் எனவும் கடவுள் எனவும் மெய்ஞ்ஞானியர் உலகம் கூறுகின்றது. இதனை இன்னும் சற்று விளக்கமாக, ஆழ்வார்களில் மிகச் சிறந்தவராகக் கருதப்படும் நம்மாழ்வார் அவர்கள் தாம் இயற்றிய சாமவேத சாரமெனப்படும் திருவாய்மொழியில், அருமறை துணிந்த பொருள் முடிவாம் பரம் பொருளைப்பற்றி,

"உயர்வற உயர்நலம்
உடையவன் எவனவன்
மயர்வற மதிநலம்
அருளினன் எவனவன்
அயர்வறும் அமரர்கள்
அதிபதி எவனவன்
துயர்அறு சுடரடி
தொழுதெழென் மனமே"...

என்று இனிய சொல்லால் அமுது ஒழுகுகின்ற தமிழிலே விளம்பியுள்ளார். "எவன் ஒருவன் தனக்கு ஒப்பும் உயர்வும் இல்லாத உயர்ந்த அழகிய குணங்களை உடையவனோ? எல்லா வல்லமைகளையும் பெற்ற அமரர்களுக்கு எவன் ஒருவன் தலைவனாக விளங்குகின்றானோ அத்தகைய தலைவனின் ஒளிவீசும் தாளிணைகளைத் தொழுது எழுவாயாக!" என்று தன் மனத்தினைப் பார்த்துச் சொல்வது போன்று கூறுகின்றார்.

இவ்வாறு, எல்லாம் வல்ல அப்பெருமகன் எங்கு உறைகின்றான்? எல்லையில்லா அப்பரம்பொருள் எல்லாரும் காணுகின்ற ஒரு எல்லைக்குள் நிற்குமானால் அதனை முற்ற முடிந்த ஆற்றலாய், அழகாய், அன்பாய், அருளாய்க் கூறுவது

பொருந்தாது. எனவே, அப்பரம் பொருள், அணுவுக்கு அணுவாய் அண்டத்திற்கு அண்டமாய் அவற்றிற்கும் அப்பாலாய் பார்க்கும் இடம் எங்கும் ஒரு நீக்கமற நிறைந்து விளங்குகின்றது. எனவேதான், சடகோபன் அவர்கள்,

'திடவிசும் பெரிவளி
நீர்நிலம் இவைமிசை
படர்பொருள் முழுவதும்
ஆயவை அவைதொறும்
உடல்மிசை யுயிரெனக்
கரந்தெங்கும் பரந்துளன்
சுடர்மிகு சுருதியுள்
இவையுண்ட சுரனே.''

என்று கூறியுள்ளார். வெளி, வளி, நெருப்பு, நீர், நிலம் என்ற ஐந்து பூதங்களாகவும் விளங்குகின்ற பரம் பொருள் அவைகட்கு உள்ளும் புறனும் எங்கும் பரந்து எல்லா வற்றையும் தம்முள் அடக்கிக் கொள்ளும் அவனுடைய ஆற்றலை இப் பாடலில் விளக்குகின்றார். உடம்பிலே உள்ள உயிர் உடல் முழுவதும் பரவி நின்றாலும் அதனைக் காண இயலாது; இதேபோன்றுதான் எல்லாப் பூதங்களிலும் இறைவன் அந்தர்யாமியாய் கலந்து நிற்கின்றான் என்ற கருத்தினை 'உடல்மிசை உயிர் எனக் கரந்து எங்கும் பரந்து உளன்'' ஓரணுவில் எத்துணை ஆற்றல் பொதிந்துள்ளதோ அதுபோன்று எல்லா வகையான பூதங்களையும் எல்லாம் வல்ல அப்பரம்பொருள் தன்னுள் அடக்கிக்கொண்டு பூத, பௌதிக வேறுபாடற்றுத் தான் ஒன்றே என்பதையும் என்றும் உள்ளதனையும் காட்டும் இயல்புடையது என்பதனை 'இவை உண்ட சுரன்'' என்ற தொடரால் விளக்குகின்றார்.

எல்லாம் வல்ல எங்கும் நிறைந்த பரம்பொருளை அனுமானித்து உணர்ந்து அறிவுச் செருக்கடங்கி அவன் உருவமாகவே அனைத்தையும் கண்டு எல்லா உயிர்க்கும் இரங்கும் மனப்பண்பைப் பெற்ற மெய்ஞானியர், எல்லாம் வல்ல பரம் பொருள் உண்டு என்று கூறுவாரும் அறிவின் துணைகொண்டு ஆராய்ந்து பார்த்து அறிய முடியா நிலையில் பரம்பொருள் இல்லையென்று கூறுவாரும் ஒன்றையே கூறுகின்றார்கள் என்றும் அவர்கள் ஒருவரையொருவர் பகைப்பதற்கோ பழிப்பதற்கோ இடம் இல்லை என்றும் கருதுவர். இதனை மாறன் எனப்படும் நம்மாழ்வார் அவர்கள்,

"உளன் எனில் உளன் அவன்
உருவம் இவ்வுருவுகள்
உளன் அலன் எனில் அவன்
அருவம் இவ் அருவுகள்
உளன் என இலன் என
இவைகுணம் உடைமையில்
உளன் இரு தகைமையொடு
ஒழிவு இலன் பரந்தே''.

எனக்கூறி விளக்குகின்றார். இறைவன் உண்டு என்பார் இங்கே காணப்படும் உருவங்கள் அத்தனையையும் அவனாகவே காண்கின்றனர்; இல்லையென்பார் காணக்கூடிய பொருளாக அவன் இல்லையே என்பதனை வைத்துத்தானே அவன் இல்லை என்கின்றனர். அவர்கள் அருவ உருவை வைத்து அவனின் இயல்பைச் சொல்கின்றார்கள் எனக் கொண்டால், உண்டு என்பாரும் இல்லையென்பாரும் ஒன்றையே கூறுவதாகக் கொள்ளலாம் என்கின்றார் ஆழ்வார். அவன் உருவமாகவும் அருவமாகவும் விளங்குகின்றான் என்பதே கருத்து. அவன் எல்லாக் காலத்தும் எல்லா இடத்தும் எங்கும்

நீக்கமற் நிறைந்திருக்கின்றான் என்பதே இப்பாட்டின் பொருளாகும்.

இவ்வாறு இறைநிலை உணர்ந்தவர்கள், தன்னலமற்றவர்களாய், ஆரவாரம் இல்லாதவராய், அனைவர்க்கும் நலம் நாடும் நல்லவராய் விளங்குபவர்கள் என்ற கருத்தில் ''வீடுமின் முற்றவும்'' "மின்னின் நிலையில் மன்னுயிர் ஆக்கைகள்" ''நீர் நுமது என்றிவை வேர்முதல் மாய்ப்பீர்" ''அற்றது பற்றெனில் உற்றது வீடு'' "பற்று இலையாய் அவன் முற்றில் அடங்கு'' என்றெல்லாம் இறையருளாளர்க்கு நெறிகளைக் காட்டி, எல்லாம் வல்ல அப்பரம்பொருள் எல்லா உருவங்களாகவும் விளங்குவதனை நம்புகின்ற நீர்மையாளர்கள் எண்ணத்தால், சொல்லால், செயலால் பிறர்க்கு எவ்வகைத் துன்பமும் நேராமல் விழிப்பான வாழ்வு வாழ்வர் அவர்கள் எண்ணம், சொல், செயல் ஆகிய மூன்றிடங்களிலும் இறை வனே நிறைந்திருப்பார் என்பதனை

"உள்ளம், உரை, செயல் உள்ள
இம்மூன்றும்
உள்ளிக் கெடுத்து இறை
உள்ளில் ஒடுங்கு"

எனக் கூறி அகநோக்குப் பயிற்சியின் சிறப்பினை எடுத்துச் சொல் நலமே எண்ணுக! நலமே சொல்க நலமே செய்க! என்று திருக்குருகூ உபகாரிமாறன், சடகோபன், நம்மா வார் நமக்கு நெறி காட்டியுள்ளார் அவர் காட்டிய நன்னெறிகளை உள்ளவாறு உணர்ந்து உலக ஒருவர்க்கொருவர் ஒத்தும் உதவியு வாழுமாக! வாழ்க வையகம் என் வாழ்த்துவோமாக!

With the best compliments from

The Palani Andavar Mills Limited

UDUMALPET COIMBATORE DISTRICT

Telephones 501 & 416 Telegram ANDAVAR

Manufacturers of

Outstanding Quality Cotton Yarn

80s Deluxe Hanks

80s Special Warp Combed Hanks and Cones

40s Hosiery Cones

31s S. F. Hanks

32s S. F. Cones and Hosiery Cloth in Lengths

WEAVERS CHOICE:

- **Rajalakshmi Cotton Yarn**
- **Rajalakshmi Viscose Yarn**
- **Rajalakshmi Blended Yarn**

BEST FOR ITS PRICE

Priyadharshini — Cambric

RLM 210 — Dhoti

RLM 1703—Superior Mull

THE RAJALAKSHMI MILLS LIMITED

Head Office :
1126 TRICHY ROAD
COIMBATORE 641 005

Phone : 26312 (3 Lines)

Cable : RAJALAKSHMI
COIMBATORE

Telex : 0855-267 RLM IN

Branch :
KARAMADAI
COIMBATORE DT.

Phone : 44 Karamadai
443 Mettupalayam

கலைக்கதிர் வளர்த்த தமிழாய்வு

டாக்டர் கு. மோகனராசு

1. கலைக்கதிர்

காலத்தின் தேவை கருதி, அவ்வப்போது கருக்கொள்ளும் பல் துறை அறிவினை எளிய தமிழில் தெளிவாக - இனிமையாக - கற்போர் உளங்கொள எடுத்துரைத்துத் தமிழ்ப்பணி ஆற்றும் தனிப்பெரும் ஒப்பற்ற ஏடே கலைக்கதிர். இதனைப் பல்துறைக் கருத்துக் கருவூலம் எனவும், அகர நிரலில் அமையாத அரிய - பெரிய பல்துறைக் களஞ்சியம் எனவும் போற்றுதல் சாலப் பொருந்தும்.

'...நீயே தாயெனும் தன்மையின்
மேயபே ராசைஎம் மீக்கொள
ஓர்வழி
உழைததல்ல தகுதமயன
நிழைத்தஇச் சிறுபணி
வெள்ளிய தெனினும்
விளங்குநின் கணைக்கார்க்கு
ஒளிய சிறுவிரல் அணியாக்
கொண்மதி அன்பே குறியெனக்
குறித்தே'

எனத் தமிழன்னையிடம் கலைக் கதிர் ஆசிரியர் முறையிடுவது அவருடைய பேரடக்கத்தின் எதிரொலியே; உண்மையில் தமிழன்னையின் ஆரமெனத் திகழும் பெரும்பேறு பெற்றது கலைக்கதிர் எனின், அது மிகையாகாது. தமிழ் வளர்ச்சிப் பாதையில் ஒரு பெரும் நம்பிக்கை ஒளியாகி வழிகாட்டுவது கலைக்கதிர் என்பது தமிழ் உலகம் ஏற்றுக் கொண்ட மறைக்க முடியாத - மறுக்க முடியாத உண்மை ஆகும்.

2. கலைக்கதிரின் தொடக்கம்

தமிழுக்கு வாய்த்த ஆக்கக் கதிர்களுள் ஒன்றாக விளங்கும் கலைக்கதிர் 1948-ஆம் ஆண்டு மார்கழித் திங்கள் தோன்றியது; 1952-ஆம் ஆண்டு ஆடித்திங்கள் முடிய உள்ள 44 இதழ்களில் அட்டைகளிலும் முகப்புப் பக்கங்களிலும் தமிழ் ஆண்டுகள், திங்கள்களின் பெயர்கள் இடம்பெற்று உள்ளன. 45-வது இதழ் ஆவணி முதல் நாள் வெளிவருவதற்குப் பதிலாகச் செப்டம்பர் முதல் நாள் - அதாவது, 44-வது இதழ் வெளிவந்த 45-வது நாள் வெளிவந்துள்ளது. அவ்விதழில், வாசகர்களுக்கு இனி, கலைக்கதிர் ஆங்கில மாதம் முதல் தேதியில் வெளிவரும்; இது செப்டம்பர் இதழ்; அடுத்த இதழ் அக்டோபர் முதல் தேதி வெளிவரும் என்னும் அறிவிப்பு வெளிவந்துள்ளது. இந்தப் பதினைந்து நாள் கூடுதலினால், ஒவ்வோர் ஆண்டும் மார்கழித் திங்களில் தொடங்கிய இதழ், சனவரித் திங்களில் தொடங்கும் மாற்றம் பெற்றது; ஒவ்வோர் ஆண்டும் இரண்டாவது இதழாக வெளிவந்த பொங்கல் சிறப்பு இதழ், முதல் இதழ் ஆயிற்று. பொங்கல் சிறப்பு இதழ், கலைக்கதிரின் தொடக்க இதழாக அமைய வேண்டும் என்னும் விழைவு, இத்தகைய மாற்றத்துக்கு அடிப்படைக் காரணமாக அமைந்திருத்தலும் கூடும். இத்தகைய மாற்றத்தினால், 1953-ஆம் ஆண்டு முதல் சனவரித்

திங்களே கலைக்கதிரின் தொடக்கத் திங்களாக இருந்து வருகின்றது.

3. ஆசிரியர்

அறிவியல் புதுமைகளின் பதிவேடாக-விரைவுப் பதிவேடாக விளங்கும் கலைக்கதிர் தொடங்கியது முதல், சென்னைப் பல்கலைக் கழக இன்றைய மாண்பமை துணைவேந்தராக வீற்றிருக்கும் தொழில்மேதை - அறிவியல் தமிழ் வளர்க்கும் அறிஞர் - பேராசிரியர் டாக்டர் ஜி.ஆர்.தாமோதரன் அவர்களே ஆசிரியராக இருந்து வந்து உள்ளார். அவர் துணைவேந்தரானதிலிருந்து கலைக்கதிரின் மதிப்பியல் ஆசிரியராக இருந்து வருகின்றார்; தற்போது பி.எஸ். ஜி. அறநிலைய நிர்வாக அறங்காவலர் திரு. ஜி. வரதராஜ் அவர்கள் ஆசிரியராக இருந்து வருகின்றார். கலைக்கதிர் உருவாகிச் செம்மையான முறையிலே தமிழ்த் தொண்டு ஆற்றுவதற்கு வினை ஊக்கிகளாக இருந்து உதவிய பேராசிரியப் பெருமக்கள் பலர். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் முன்னாள் முதல்வர் திரு போ.ரா. கிருஷ்ணமூர்த்தி டாக்டர் தெ.பொ. மீ., டாக்டர் மு.வ., திரு. அ. ச. ஞானசம்பந்தம், டாக்டர் தா.ஏ. ஞான்மூர்த்தி, டாக்டர் ம.ரா.போ. குருசாமி ஆகியோர் ஆவர்.

4. நோக்கம்

வளரும் குழந்தைகளுக்குப் பசும் பாலினும் தாய்ப்பாலே எல்லா வகையினும் சிறந்தது எனக் கருதும் உண்மையான தாய்மை உணர்வும், 'சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே' எனக் கருதும் உண்மையான தந்தைமை உணர்வும் 'தாயின் புறுவ துலகின் புறக்கண்டு, காமுறுவர் கற்றறித் தார்' என்னும் வள்ளுவ உள்ளமும் ஒரு சேரக் கொண்ட ஒரு பெரும் தமிழ் நெஞ்சத்தின் உயிர்த் துடிப்பே - துடிப்பு இழையோடிய பதிவுகளே கலைக்கதிர் என்பதை அதன் நோக்கையும் போக்கையும் தோற்றத்தையும் ஏற்றத்தையும் அறியவல்லார் மிகத் தெளிவாக உணர்வார். 'தமிழ் வாழ்க! தமிழ் வளர்க!' என்னும் வெற்றொலி ஆரவாரங்களினும், அமைதியான ஆக்கத் திறமான பணிகளால்தான் தமிழை வாழ்விக்க-வளர்விக்க முடியும் என்னும் ஆணித்தரமான நம்பிக்கையும், அதற்குச் செயல் வடிவு தரும் உள்ள உறுதியும் கொண்டவர் கலைக்கதிர் ஆசிரியர்.

> 'சென்றிடுவீர் எட்டுத் திக்கும்-
> கலைச் செல்வங்கள் யாவும்
> கொணர்ந்திங்குச் சேர்ப்பீர்'
> என்னும் பாரதியாரின் கட்டளையைத் தலைமேற்கொண்டு,
> 'தமிழினத்துக்கு வேண்டிய
> பொருள் எங்கே இருந்தாலும்
> அதனைக் கொண்டு வந்து
> சேர்க்கும் அரும் பணியைக்
> 'கலைக்கதிர்' ஆற்றும் என்பது
> உறுதி'
>
> (கலைக்கதிர், மலர்-க இதழ்-க)

என்னும் உறுதியுடனே கலைக்கதிரை ஆசிரியர் தொடங்குகின்றார்.

பல்கலை அறிவை - சிறப்பாக, நாள்தோறும் வளர்ந்து வரும் அறிவியல் அறிவை எளிய இனிய தமிழில் பெற்றுத் தெளிந்து, தமிழ் இனம் விழிப்புற வேண்டும்; தமிழ் ஆக்கம் பெற வேண்டும் என்னும் விழுமிய நோக்கோடே கலைக்கதிர் தோன்றியது; இன்றளவும் அதன் அடிப்படை நோக்கில் எவ்வித

மாறுபாடும் இல்லை; எனினும், நோக்கத்தை வெளிப்படுத்தும் நிலையில் காலத்துக்குக் காலம் ஒரு சில நுட்ப வேறுபாடுகள் காணப்படுகின்றன. ஆசிரியரின் பின்வரும் கூற்றுகளே இதற்குச் சான்றுகளாகும்:

> 'தற்காலத்துக்கு வேண்டிய விஞ்ஞானம், பொறியியல், பொருளாதாரம், இலக்கியம், வரலாறு ஆகிய இவை பற்றிய அறிவினைத் தமிழ்நாட்டில் வளரச் செய்வதாகிய சிறந்த தொண்டினை மேற்கொண்டு 'கலைக்கதிர்' உதயமாகிறது'' 1:1

> 'அறிவியல் புதுமைகளைத் தமிழ் மக்களுக்கு எளிய தமிழில் விளக்குவதே கலைக்கதிரின் சிறப்பான நோக்கமாகும்'' 18:1

> அறிவியல் தொழில் நுட்பக்கலை பற்றிய கருத்துகளைப் பரப்புவதற்கென்றே உருவெடுத்த மாத இதழ் கலைக்கதிர்' '' 30:3

நோக்கங்களில் காணும் நுட்ப வேறுபாடுகளுக்குத் தக்கவாறு கலைக்கதிரில் இடம்பெற்றுள்ள கட்டுரைகளின் போக்கும் மாற்றம் பெற்றுள்ளது என்பது கருதத் தக்கது

5. ஆய்வின் எல்லை

கலைக்கதிர் வளர்த்த தமிழாய்வு என்னும் தலைப்பில், தமிழில் வந்துள்ள பல்துறை ஆய்வுக் கட்டுரைகளை ஆய்வது என்பது முழுமையான ஆய்வு; தமிழ் இலக்கியம் - மொழி தொடர்பாக வந்துள்ள ஆய்வுகளை ஆய்வது என்பது அதில் கூறு. முழு அளவினதான ஆய்வு பல்வேறு கிளைகளாகப் பிரிந்து தனித்தனி டாக்டர் பட்ட ஆய்வுகளாக வெளி வருதற்குரிய விரிந்து பரந்த எல்லைப் பரப்புகளை உடையது. இக் கட்டுரையில் தமிழ் இலக்கியம், மொழித் தொடர்பாக வந்துள்ள ஆய்வுகள் மட்டுமே கருவாகக் கொள்ளப்பட்டன. (இவற்றுள் முப்பது ஆண்டுகளில் வெளிவந்துள்ள தமிழாய்வுக் கட்டுரைகள் மட்டுமே ஆய்வுக்குக் கொள்ளப் பட்டுள்ளன. பொங்கல் சிறப்பு மலர்களுள் தனியாக வந்தவை ஆய்வில் சேரவில்லை)

6. தமிழ் உணர்வு

கலைக்கதிர் ஆசிரியரின் நோக்கம் என்னும் குருதியிலே சிவப்பு அணுக்களாக விளங்குவன தமிழ் உணர்வே; இதனை, ஆய்வுலகம்—தமிழ் உலகம் நன்கு உணர முடியும். ஆசிரியரின் தமிழ் உணர்வுக்குப் பல்வேறு சான்றுகளைத் தர முடியும் என்றாலும், சுருக்கம் கருதி ஒரு சில சான்றுகளே இங்குத் தரப்படுகின்றது. கலைக்கதிரின் முதல் இதழே தமிழ் மணம் கமழத் தொடங்குகின்றது. தொடக்க இதழ் அட்டையில் ''கலைக் கதிர் மாத வெளியீடு - சர்வதாரி மலர் க மார்கழி இதழ் க'' எனக் குறிப்பிடப் பட்டுள்ளது. தமிழ் வழக்கில் உள்ள ஆண்டின் பெயரும் தமிழ்த் திங்களின் பெயரும் தமிழ் எண்களும் இடம் பெற்று உள்ளமை கருதத்தக்கனவாகும். முகப்புப் பக்கத்திலும்கூட ஆங்கிலத் திங்களின் பெயர் இடம்பெற வில்லை. (இந்நிலை முதல் 44 இதழ்களில் நீடித்துள்ளது). கலைக்கதிர் இதழைத் தம்

தந்தைக்குக் காணிக்கை ஆக்கும் ஆசிரியர், முதல் இதழினை,

> ''கல்வியறி வெங்கும் கமழநினைத் தெமக்கு நல்லவழி காட்டி, நலம்பலவும் - பல்லோர்க்கும் ஆக்கினார் எந்தை அவர் தமக்காம் காணிக்கை ஆக்கினோம் இந்நூல் தனை''

என்னும் படையல் பாவுடன் தொடங்குகின்றார்

முதல் இதழின் முகப்புப் பக்கம் மகாகவி பாரதியாரின் கட்டளை யுடன் தொடங்குகிறது; அடுத்து, நாமக்கல் கவிஞர் அவர்களின் வாழ்த்துப்பா; அதனை அடுத்து டாக்டர் மு.வ. அவர்களின் நல்ல நூல் என்னும் கட்டுரை. கலைக் கதிரின் அட்டைப் படங்களிலும் உள்ளேயும் தமிழறிஞர், புலவர், அரசியல் தலைவர் முதலிய பெரு மக்களின் வண்ண ஓவியங்களும் புகைப்படங்களும் பல வெளிவந் துள்ளன. தமிழ் இலக்கியக் காட்சி கள் பல, அட்டையிலும் உள்ளேயும் வண்ண ஓவியங்களாக இடம் பெற்று உள்ளன. நற்றிணையில் வரும் 33 பாடல்களுக்கு 33 முழுப் பக்க வண்ண ஓவியங்கள் கலைக் கதிரில் தொடர்ந்து வெளி வந்துள்ளன என்பது குறிப்பிடத் தக்கதாகும். சிறப்பு மலர்களில், சித்திரச் சிலம்பு, சூளா மணிக் காட்சிகள், சிந்தாமணிக் காட்சிகள் என அவ்வக் காப்பியங் களில் இடம்பெறும் இன்றி யமையாக் காட்சிகள் தொகுப்பு வண்ண ஓவியங்களாக இடம் பெற்று உள்ளன. இத்தகைய அரும் பெரும்பணியை - பொருள் இழப்பையும் கருதாத செந்தமிழ்ப் பணியைத் தமிழ் இலக்கண இலக்கிய ஆய்வுக்கென்றே தோன்றிய இதழ்களும் இதுவரை செய்ததில்லை என்பது வெள்ளிடை மலை.

ஆண்டுதோறும் பொங்கல் சிறப்பு மலர்கள் வெளிவந்துள்ளன; இவற்றொடு, வள்ளுவர் இரண் டாயிரம் ஆண்டுச் சிறப்பு மலரும், தமிழ் மொழியே பயிற்றுமொழியாக அமைய வேண்டும் என்னும் நோக் கில் பயிற்று மொழிச் சிறப்பு மலரும் வெளிவந்துள்ளன.

அடிசிற்கினியாள், கானல்வரி, சமணத் தமிழ் இலக்கிய வரலாறு, குலசேகரர், தெ.பொ.மீ. மணி விழா மலர், A critical study of Civakasinthamani, என்னும் நூல் கள் கலைக்கதிர் வெளியீடுகளாக வெளிவந்துள்ளன. தமிழில் அறி வியல் கலைச் சொற்களை உரு வாக்க வேண்டும் என்னும் உயர்ந்த நோக்கில், வேதியியல் கலைச்சொற்கள் தொகுதியும், இயற்பியல் கலைச்சொற்கள் தொகுதியும் கலைக்கதிர் வாயிலாக வெளிவந்துள்ளன. அறிவியல் தமிழாக்க மாநாடுகள் இரண் டினைக் கலைக்கதிர் நடத்தி, இரு சிறப்பு இதழ்களையும் வெளியிட்டு உள்ளது.

தமிழ் அறிஞர்களுக்கும் புலவர் களுக்கும் நடைபெறும் மணி விழா முதலிய சிறப்பு நிகழ்ச்சிகளையும், இறப்பு முதலிய இரங்கல் நிகழ்ச்சி களையும் அவர்களின் சிறப்புப் பணிகளோடு தக்கவாறு வெளி யிட்டுக் கலைக்கதிர் தொண்டாற்றி வருகிறது. புதுமைப்பித்தன் அவர்கள் இறந்தபோது, வறுமை யில் வாடிய அவருடைய குடும்பத் தாருக்கு நிதி திரட்டும் பணியில்

கலைக்கதிர் ஈடுபட்டது குறிப்பிடத்தக்கதோர் செய்தி. கலைக் கதிரில் வெளிவந்துள்ள பல்துறைக் கட்டுரைகளிலும் பெரும்பாலானவற்றில் தமிழ் இலக்கியக் கருத்துக்கள் — பாடல்கள் ஊடே இடம் பெற்று உள்ளன.

இவ்வாறு பல்வகையிலும் இழையோடி நின்ற தமிழ் உணர்வே கலைக்கதிரில் தமிழ் இலக்கியம் மொழி தொடர்பான ஆய்வுகள் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றதற்கு அடிப்படைக் காரணம் எனலாம்.

7. படைப்பிலக்கியங்களும் தமிழியல் கட்டுரைகளும்

கலைக்கதிரில் 30 ஆண்டுகளில் வெளிவந்துள்ள படைப்பிலக்கியங்கள் தமிழியல் கட்டுரைகள் ஆகியவற்றின் ஒருங்கிணைந்த மொத்த எண்ணிக்கை வருமாறு:

1948 – 1958 = 660
1959 – 1968 = 354
1969 – 1978 = 248

இவற்றுள், ஒவ்வொரு படைப்பிலக்கிய வகையும் தமிழியல் கட்டுரைகளும் பெற்றுள்ள விழுக்காட்டு விவர வரைப்படம் வருமாறு:

கலைக்கதிரில் படைப்பிலக்கியங்களும் தமிழியல் கட்டுரைகளும்



(படம் : 1)

இங்குக் குறிப்பிடத்தக்க ஒன்று, படைப்பிலக்கியங்களிலும் தமிழ் இயல் கட்டுரைகளின் எண்ணிக்கை ஒவ்வொரு பத்தாண்டிலும் கூடி உள்ளது என்பதே.

8. தமிழியல் கட்டுரைகள்

8.1 தமிழியல் கட்டுரைகளுள் பிறவும் பெற்றுள்ள இடம் தமிழ் ஆய்வுக் கட்டுரைகளும் வருமாறு:



(படம் : 2)

தமிழியல் கட்டுரைகளுள் தமிழ் ஆய்வுக் கட்டுரைகளுக்கே முதன்மை இடம் தந்துள்ளமை மேற்காட்டிய விளக்கப்படத்தால் புலனாகும். மொத்தத்தில், 30 ஆண்டுகளில் வெளிவந்த 359 இதழ்களில் (1973 சூன் இதழ் வரவில்லை) 45 இலக்கியத் திறன் ஆய்வுக் கட்டுரைகளும், 67, வரலாறு – பண்பாடு பற்றிய கட்டுரைகளும் 86 மொழியியல் – சொல்லாக்கக் கட்டுரைகளும், 20 இலக்கிய வரலாற்றுக் கட்டுரைகளும் 165 தனி இலக்கிய ஆய்வுகளும் வெளி வந்துள்ளன. அன்றியும் சிலப்பதிகாரச் செய்யுள், கம்பன் புளுகும், வால்மீகி வாய்மையும், பழந்தமிழ் இலக்கியத்தின் இயற்கை, தொல்காப்பிய நெறி ஆகிய தொடர் ஆய்வுக் கட்டுரைகளும் வெளிவந்துள்ளன.

9. கூடுதலும் குறைவும்

கலைக்கதிரில் ஒவ்வோர் ஆண்டும் வெளிவந்துள்ள தமிழாய்வுக் கட்டுரைகளின் எண்ணிக்கைகளை நோக்கின், ஒரே ஆண்டில் 45 கட்டுரைகள் (முதல் ஆண்டு) வந்துள்ளதையும் காணுகின்றோம்; ஒரு கட்டுரையும் வராததையும் (19, 22-வது ஆண்டுகள்) காணுகின்றோம்; தமிழாய்வுக் கட்டுரைகளின் எண்ணிக்கை ஒரே சீராக இல்லாமையும் தெளிவாகக் காணுகின்றோம். தமிழாய்வுக் கட்டுரைகளின் எண்ணிக்கை அடிப்படையில், கலைக்கதிரின் முதல் பதினான்கு ஆண்டுகளை ஒரு காலக்கட்டமாகவும் அடுத்த

கலைக்கதிரில் தமிழாய்வுக் கட்டுரைகள்



Grams : CHUCKS

Phones : 296 & 224

Sonalkar Tool Works Pvt. Ltd.

INDUSTRIAL ESTATE, YANTRAPUR Post

HARIHAR - 577 602 (Karnataka)

Manufacturers & Exporters of:

* 3 Jaw & 4 Jaw Lathe Chucks
* Hydraulic Copying Attachments
* Power Packs
* Lathe Centres
* Limit Gauges

Regd. Office :

Laxmi', 37/68, Prabhat Road Lane No. 6

POONA - 411 004

பதினாறு ஆண்டுகளை மற்றொரு காலக்கட்டமாகவும், பிரிக்கலாமோ என எண்ணத் தோன்றுகிறது; எனினும், சில விதிவிலக்குகளும் (21, 26, 28-ஆம் ஆண்டுகள்) உண்டு. இனி, தமிழாய்வுக் கட்டுரைகளின் கூடுதல் குறைதலுக்கான காரணங்களைக் காண்போம்.

வளர்ந்து வரும் அறிவியல், பொருளியல், உளவியல் முதலாய பல்துறை அறிவைத் தமிழில் தரமுடியுமா எனத் தமிழகம் பெரிதும் குழம்பிக் கொண்டிருந்த காலக்கட்டத்தில் - அறிவியல் அறிவொடு ஆங்கிலம் தமிழ் ஆகிய இருமொழிகளிலும் புலமை பெற்று இருந்தவர்களும் தமிழில் அறிவியல் கருத்துக்களை மொழிபெயர்த்துத் தர அஞ்சிய காலக்கட்டத்தில் ஒரு நம்பிக்கை ஒளியாகத் தோன்றியது கலைக்கதிர். கலைக்கதிர் தோன்றி வளர்வதற்கு வித்திட்டவர்களுள் பெரும்பான்மையோர் தமிழ்ப் பேரறிஞர்கள். கலை ஆர்வம் வேரூன்றி நிற்கும் தமிழ்மண்ணில், அறிவியல் சிந்தனைகளை முழுவதுமாகக் கொண்ட ஓர் இதழுக்கு வரவேற்பு இருக்குமா என்ற அச்சம் எழுவது இயற்கையாதலால், படிப்படியாகவே அறிவியல் சிந்தனைகளை ஊட்டவேண்டும் என்னும் சூழல் - ஓரளவு இத்தகைய காரணங்களால் முதலிரண்டு ஆண்டுக் கலைக்கதிர்களில் தமிழ் ஆய்வுத் தொடர்பான கட்டுரைகள் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றுள்ளன எனலாம்.

மேலும், மேலை நாடுகளில் இலக்கியத் திறன், இலக்கிய மரபு ஆகியவற்றில் தோன்றிய விழிப்புணர்வு தமிழ்மண்ணில் தாக்கத்தை ஏற்படுத்தியபோது, கலைக்கதிர் அதற்கு உண்மையான வரவேற்பை நல்கி உள்ளது. டாக்டர் மு.வ., அ.ச. ஞானசம்பந்தம் ஆகியோர் தொடர்ந்து இத்துறைகளில் கட்டுரைகள் எழுதி வந்துள்ளனர். முதலிரண்டு ஆண்டுகளில் வெளி வந்த தமிழாய்வுக் கட்டுரைகள் 83-இல் 33 கட்டுரைகள் (ஏறத்தாழ 40%) இலக்கியத் திறன் - இலக்கிய மரபு பற்றியவை என்பது குறிப்பிடத் தக்கது ஆகும். சிலப்பதிகாரச் செய்யுள், கம்பன் புளுகும் வால்மீகி வாய்மையும் என்னும் தொடர் ஆய்வுக் கட்டுரைகள் முதலிரண்டு ஆண்டுகளில் தொடர்ந்து வெளி வந்துள்ளதும் (வரைப்படத்தில், தொடர் கட்டுரையின் ஒவ்வொரு தொடரும் ஒரு தனி ஆய்வுக் கட்டுரை என்னும் அளவில் கொள்ளப்பட்டுள்ளது) கட்டுரைகளின் எண்ணிக்கை கூடுவதற்கு ஒருவகையில் காரணமாயின எனலாம். முதலிரண்டு ஆண்டுகளில் எண்ணிக்கை அளவில் குறிப்பிடத் தக்க இடத்தைப் பெற்றிருந்த தமிழாய்வுக் கட்டுரைகள், 3, 4, 5, 6-ஆம் ஆண்டுகளில் எண்ணிக்கை அளவில் குறைந்து உள்ளன. இதற்கான காரணங்கள் பின் வருவனவாகலாம்.

1. இலக்கிய மரபு - இலக்கியத் திறன் தொடர்பான கட்டுரைகளைத் தொடர்ந்து வெளியிட்டு வந்த டாக்டர் மு.வ., அ.ச. ஞானசம்பந்தம் ஆகியோர், அவற்றை நிறுத்திவிட்டு, அவ்வப்போது சங்க இலக்கியம் தொடர்பான ஆய்வுகளை வெளியிடுவதில் ஈடுபட்டமை.

2. டாக்டர் மு.வ. அவர்கள் சமுதாயச் சிந்தனைகளை அடிப்

படைகளாகக் கொண்ட சிறுகதைகளை எழுதுவதிலும், சங்க இலக்கியப் பாடல்களுக்கு விளக்கங்கள் தருவதிலும் தம் பார்வையைச் செலுத்தியமை.

3. சமய, சமுதாய, மொழியியல் தொடர்பான பொதுக்கட்டுரைகள் முன்னிரண்டு இதழ்களிலும் இவற்றில் கூடுதலான இடத்தைப் பெற்றமை.

4. பொங்கல் சிறப்பு மலர்களில் கவிதைகளும் சிறப்பிடம் பெற்றமை. (4-ஆம் ஆண்டுப் பொங்கல் மலரில் மட்டும் 7 கவிதைகளும் 5 சிறுகதைகளும் இடம் பெற்றுள்ளன)

மொழியியல் தொடர்பான கட்டுரைகள், (ஒன்பதாவது ஆண்டின் 8-வது இதழ் சுதந்திரப் போராட்டச் சிறப்பு இதழாக அமைந்து, அதில் வெளிவந்த) வரலாற்று ஆய்வுக் கட்டுரைகள், பொங்கல் சிறப்பு இதழ்களில் தமிழ் ஆய்வுக் கட்டுரைகள் பெற்ற சிறப்பிடம், டாக்டர் மு.வ. அவர்களின் 'பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை' என்னும் தொடர் ஆய்வுக் கட்டுரை ஆகியவற்றால் 7, 8, 9-ஆம் ஆண்டுகளில் தமிழ் ஆய்வுக் கட்டுரைகளின் எண்ணிக்கை ஓரளவு கூடுதலாயிற்று.

அறிவியல், கலையியல் ஆகியவற்றில் – சிறப்பாக அறிவியலில்– உள்ள பல்வேறு துறைகளுக்கும் உரிய இடம் தர முனைந்து, ஒவ்வொரு துறைக்கும் ஒன்று (அல்லது சில வேளைகளில் இரண்டு) எனப் பிரித்து, கட்டுரைகளைக் கலைக்கதிர் வெளியிடத் தொடங்கியது. அதில் 15-ஆம் ஆண்டு முதல் தமிழாய்வு கட்டுரைகளின் எண்ணிக்கை குறைவதற்கு அடிப்படைக் காரணம் ஆயிற்று எனலாம்.

மேலும், அறிவியல் அறிஞர்கள், உள்ளத்தின் உண்மை, சிறுவர் அரங்கு, தொழில் நுணுக்கங்கள், பணத்தின் கதை, பொது அறிவுப் புதிர், வரலாறும் வளர்ச்சியும், வானவெளி ஆய்வு, விஞ்ஞானப் புதுமைகள் முதலிய பல்துறைத் தொடர்களும், சீவகசிந்தாமணி, காமக்கண்ணி, அமராபரணம், பரிசுச் சிறுகதைகள், பரிசுக்கட்டுரைகள் ஆகியவைகளும் தொடர்ந்து இடம் பெற்றுள்ளதும் தமிழாய்வுக் கட்டுரைகளின் எண்ணிக்கை குறைவிற்குப் பேரளவு காரணமாகியுள்ளன. பொதுவாக, அறிவியல் சிந்தனைகளைத் தமிழ் மக்களுக்கு எளிய இனிய தமிழில் தரவேண்டும் என்னும் நோக்கின் பெரும் பகுதியை இக்காலக் கட்டத்தில் கலைக்கதிர் அடைகின்றது. இவற்றுள், குறிப்பாக 19-ஆம் ஆண்டு, 22-ஆம் ஆண்டு ஆகிய இரண்டு ஆண்டுகளிலும் தமிழாய்வுக் கட்டுரைகள் இடம் பெறாமைக்குப் பின்வரும் காரணங்கள் கூறலாம்.

1. அறிவியல் மேதைகள் வாழ்க்கை வரலாறு, அறிவியல் விந்தைகள் (விஞ்ஞானப் புதுமைகள்), அறிவியல் வினாவிடை, இன்றைய அறிவியல், சிறுவர் அறிவியல் அரங்கு (சிறுவர் அரங்கு), தொழில் நுணுக்கங்கள், விஞ்ஞான ஆராய்ச்சி முதலிய பல்வேறு தொடர்கள் வெளிவந்தமை.

2. சுதந்திர பாரதம் என்னும் இந்திய வரலாற்றுத் தொடர் தொடர்ந்து வெளிவந்தமை.

3. கற்பென்னும் தீபம், நற்றிணை இன்பம், முதிரமலைச் செல்வி முதலிய தொடர்கள் வெளிவந்தமை.

அறிவியல் வளர்ச்சி மலர் (19:8), பொறியியல் மாணவர் மலர் (22:4), பொருளாதாரச் சிறப்பு மலர் (22:11) ஆகியவை வெளிவந்தமை.

வள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுச் சிறப்பு மலரைக் கலைக்கதிர் 1969-ஆம் ஆண்டு நவம்பர்த் திங்களில் வெளியிட்டுள்ளது. இம்மலரில் மட்டும் 16 தமிழாய்வுக் கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. இதுவே 21-ஆம் ஆண்டில் தமிழாய்வுக் கட்டுரைகளின் எண்ணிக்கைக் கூடுதலுக்கு அடிப்படைக் காரணம் ஆயிற்று.

முதல் அறிவியல் தமிழாக்கக் கருத்தரங்கை 1973 டிசம்பர்த் திங்களிலும், அறிவியல் தமிழாக்க இரண்டாம் கருத்தரங்கை இரண்டாண்டுகள் கழித்தும் கலைக்கதிர் நடத்தி உள்ளது. அவற்றைத் தொடர்ந்து கருத்தரங்கச் சிறப்பு மலர்கள் முறையே பிப்ரவரி 74-லும், பிப்ரவரி 76-லும் வெளிவந்துள்ளன. கருத்தரங்குகளில் படிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரைகளும் பிறவும் தொடர்ந்து வெளிவந்துள்ளன. இக்காரணங்களால், 26, 28–ஆம் ஆண்டு இதழ்களில் தமிழாய்வுக் கட்டுரைகளின் எண்ணிக்கை கூடுதல் பெற்று உள்ளது.

தற்போது வரும் கலைக்கதிர்களில், தமிழ் இலக்கியம் - மொழி தொடர்பான கட்டுரைகளுள் அறிவியல் தொடர்பான கட்டுரைகளே முதன்மை இடம் பெறுகின்றன. எண்ணிக்கை அளவில் குறையினும் கட்டுரைகள் எண்ணத்தின் அளவில் கூடியே செல்கின்றன.

விரைந்து வளர்ந்து வரும் அறிவியல் சிந்தனைகளை அப்போதைக்கப்போது தமிழ்மக்கள் தம் தாய் மொழியிலேயே அறிந்து கொள்ளுமாறு செய்தல் வேண்டும் என்னும் அடிப்படையில் முகிழ்த்த கலைக்கதிர், தமிழ் மொழி - இலக்கியம் தொடர்பான ஆய்வுகளுக்கும் தக்க இடம் தந்து சிறப்பித்துள்ளது. கலைக்கதிர் தன் அடிப்படை நோக்கை நோக்கிப் படிப்படியாக நடையிட, நடையிட அதில் தமிழ் மொழி - இலக்கியம் தொடர்பான ஆய்வுகளின் எண்ணிக்கை பெரும்பான்மையும் குறைந்து கொண்டே வந்துள்ளது; விதிவிலக்குகளும் உண்டு; விதிவிலக்குகளுக்கு அடிப்படைக் காரணங்கள் தமிழ் வளர்ச்சி கருதி–தமிழின் பெருமையை வெளிப்படுத்தும் நோக்கில் வெளிவந்துள்ள சிறப்பு மலர்களே.

இலக்கியக் கொள்கை-இலக்கியத் திறனாய்வு போன்றவற்றில் தமிழறிஞர்கள் தம் பார்வையைச் செலுத்திய தொடக்க காலத்தில், அவற்றிற்குப் பெரும் வரவேற்பு நல்கியது கலைக்கதிர்; பின்னர், மொழியியல் சிந்தனைகள் வளர்ச்சி பெறத் தொடங்கியதும் அம்மொழியியல் தொடர்பான ஆய்வுகளுக்கு முதன்மையிடம் தந்துள்ளது; தமிழ் ஆக்கத்திற்குக் கலைச்சொற் படைப்பின் இன்றியமையாமை உணரப்பட்ட போது அதற்குப் பேராதரவு தந்துள்ளது; இவ்வகையில் காலமறிந்து தமிழ்ப்பணி ஆற்றும் கலைக்கதிருக்கு ஈடாக வேறொரு இதழைக் கூற முடியுமா என்பது ஐயமே.

''கலைக்கதிரின் நோக்கம், பயன்மிக்க கருத்துக்களைக் காலத்திற்கு ஏற்ப வெளியிட்டுத் தமிழ்ப் பணி புரிவதுதான்'' 2:2 (3)

என்னும் ஆசிரியர் கூற்றின் உண்மை இவற்றாலும் புலனாகும்.

With the best compliments from

Phone : 26458

NORTHERN ROADWAYS

REGISTERED

Props : MADRAS FRIEGHT CARRIERS
COIMBATORE

Head Office : **344, RAMGOPALPET, SECUNDERABAD-3**
Branches **MADRAS, VIJAYAWADA, WARANGAL**
KARIMNAGAR, HYDERABAD

With best compliments from

WILSON INDUSTRIES

Manufacturers of

ALL TYPES OF QUALITY SPRINGS

136-A, AVANASHI ROAD, PEELAMEDU
COIMBATORE - 641 004
Phones : 32247, 34605

கோவை மாவட்டத்தில் சிறுதொழில் அபிவிருத்தி

திரு. தா. பத்மனாபன்,
பி.காம்., எம். பி. ஏ., எம். பி. ஐ. எம் (இலண்டன்)

கோவை மாவட்டம் பழைய கொங்கு நாட்டைச் சேர்ந்தது. கொங்கு நாட்டு வேளாண்மை சரித்திரப் புகழ் பெற்றது. இங்குள்ள விவசாயிகள் கடும் உழைப்பாளர்கள். எனவே புன்செய் நிலப் பகுதியில் விவசாயிகள் மிகுதியான தோட்ட வேளாண்மை செய்யத் தொடங்கினர். பருத்தி சாகுபடியாளர்கள் பருத்திக்கு நல்ல விலை கிடைத்த காலத்தில் பஞ்சாலைத் தொழிலில் இறங்கினர். கோவை மாவட்டம் மழைக்குறைவான பகுதியாதலால் கிணறுகளில் தண்ணீர் மட்டம் மிகுந்த ஆழத்தில் இருப்பது இயற்கையே. ஆழத்திலுள்ள நீரை இறைப்பதற்குப் பம்பு செட்டுகள் தேவைப்பட்டன. இந்த மாவட்டத்தில் மின்சார சப்ளை கிராமங்களுக்குக் கிடைக்கும் வாய்ப்பு ஏற்பட்டதால் பம்பு செட்டுகளை ஓட்டுவதற்கு மோட்டார்களை உபயோகிக்கத் தொடங்கினர். இவ்வாறாக, சுமார் 200 பம்பு செட்டுகள், மற்றும் மின்சார மோட்டார்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் கோவையில் விரிவாகத் தொடங்கப்பட்டன.

கோவையில் செய்யப்படும் பம்பு செட்டுகளும், மோட்டார்களும் இந்தியாவில் உற்பத்தி ஆகும் எண்ணிக்கையில் 40 சதவிகிதமாகும். ஆண்டு ஒன்றுக்குச் சுமார் 2 லட்சம் மோட்டார்கள் இங்குத் தயாராகின்றன, கோவையில் உள்ள 90 பஞ்சாலைகளுக்குத் தேவையான உறுப்புகள் செய்யும்பல துணைத் தொழில்களும் இம்மாவட்டத்தில் நிறுவப்பட்டன. இவ்வாறாக கோவையில் எஞ்சினியரிங் தொழில்கள் சிறுதொழில் துறையில் மிகுதியாக வளர ஆரம்பித்தன.

மற்றும் பல எலெக்ட்ரானிக்ஸ் தொழில்களும் சுமார் 100 இரும்பு மேஜை நாற்காலித் தொழிற்சாலைகளும் சுமார் 80 பிளாஸ்டிக் தொழிற்சாலைகளும் சிறுதொழில் துறையில் பலவகையாக இங்கு இயங்கி வருகின்றன. சில இரசாயனத் தொழில்களும் கோவையிலும் சுற்றுப்புறங்களிலும் உள்ளன. ஈரோடு வட்டத்தில் சுமார் 100 தோல் பதனிடும் தொழிற்சாலைகள் உள்ளன. மற்றும் விசைத்தறிகளும் நூற்றுக்கணக்கில் அங்கு இயங்கி வருகின்றன. சுமார் 1,200 பனியன் தொழிற்சாலைகள், உள்ளன. சுமார் 100 பாத்திரங்கள் செய்யும் சிறுதொழில் நிறுவனங்களும் உள்ளன. பொள்ளாச்சிக்கு வந்தால் சுமார் 50 தீப்பெட்டித் தொழிற் கூடங்களைக் காணலாம்.

இந்த இடங்களில் சிறு தொழில்கள் தனித்தனி இடங்களில் பரவலாக அமைந்த போதிலும் சென்ற பத்து ஆண்டுகளில் சிறு தொழில் அபிவிருத்திக் கார்ப்பரேஷன் (சிட்கோ) அமைத்துக் கொடுத்த தொழிற் பேட்டைகளிலும் சிறு தொழில் நிறுவனங்கள் செயல்

பட்டு வருகின்றன. கோவையில் தனியார் தொழிற்பேட்டை ஒன்றும் ''சிட்கோ'' தொழிற் பேட்டை ஒன்றும் சிறு தொழில்களை வளர்ப்பதற்கு செய்யும் வகையில் அமைந்துள்ளன.

கோவை மாவட்டத்தில் சுமார் 4,000 சிறு தொழில்கள் பதிவு செய்யப்பட்டவை. பதிவு செய்யாத 4,000 க்கும் அதிகமான சிறு தொழில்களும் இங்கு இயங்கி வருகின்றன. இவை சுமார் 80,000 தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுத்து வருகின்றன. கோவையில் எஞ்சினியரிங் தொழில்கள் அதிகமாக உள்ளமையால் தொழில் துறையில் மந்தம் ஏற்பட்டுள்ளது. எனவே எலெக்ட்ரானிக்ஸ், இரசாயனத் தொழில்கள் போன்ற துறைகளில் புதிய பொருட்களை உற்பத்தி செய்து தொழில்களைப் பரவலாக்கும் திட்டங்களை அரசினர் ஊக்குவித்து வருகின்றனர்.

நவீன மயமாக்கும் திட்டம்

தவிர, சில தொழில்களை நவீன மயமாக்கும் திட்டமும் செயல்படத் தொடங்கி விட்டன. வார்ப்பு இரும்பு செய்யும் பவுண்டரிகளையும், பனியன் தொழிற்சாலைகளையும், மோட்டார் கார் உறுப்புகள் உற்பத்தி செய்யும் நிறுவனங்களையும், தோல் பதனிடும் தொழில்களையும் உடனடியாக நவீன மயமாக்கத் திட்டங்கள் தொடங்கப்பட்டு முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. இவ்வாறு பத்து சிறு தொழில் பிரிவுகளில் நவீன மயமாக்கப்படும் திட்டம் செயல்பட்டு வருகின்றது.

ஏற்றுமதித் துறை

மேலும் சிறு தொழில்கள் ஏற்றுமதித் துறையில் ஈடுபட்டால்தான் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு விடிவு ஏற்படும் என்கிற நிலைமை உருவாகியுள்ளது. கோவை மாவட்டத்திலுள்ள எஞ்சினீயரிங் துறையில் உள்ள தனிப்பட்ட தொழில் நிறுவனங்கள் சில ஆண்டு ஒன்றுக்கு ரூ. 6 லட்சம் மதிப்புள்ள பொருட்களை மட்டுமே நேரடியாக ஏற்றுமதி செய்கின்றன. விற்பனையாளர்கள் மூலமாக மேலும் ரூ. 6 லட்சம் மதிப்புள்ள பொருட்களை ஏற்றுமதி செய்துள்ளனர். மத்திய கிழக்கு நாடுகளுக்கும், அதாவது அரபு நாடுகளுக்கும், கிழக்கிந்திய நாடுகளுக்கும் டீசல் இயந்திரம், மெஷின்டூல், விவசாயக் கருவிகள், விவசாயத்திற்கு வேண்டிய பூச்சி மருந்து தெளிக்கும் தெளிப்பான்கள், கலப்பைகள், இடைச்சாகுபடிக் கருவிகள் ஏற்றுமதியாகின்றன. இயந்திரமானாலும் சரி மாடுகள் கட்டி இழுக்க வேண்டுமானாலும் சரி இவைகளை ஏற்றுமதி செய்வதற்கு வாய்ப்புகள் பல உள்ளன. மற்றும் வார்ப்பு இரும்பு, குழாய்கள், நூற்பாலைகளுக்கு வேண்டிய சிறு இயந்திர உறுப்புகள், சிறிய வகைக் கருவிகள், தோல் தொழிலுக்கு வேண்டிய சிறு கருவி சாதனங்களையும், பனியன் தொழிற்சாலைகளுக்குத் தேவையான இயந்திரங்கள் சிலவற்றையும், ஏற்றுமதி செய்தல் பொருத்தமாகும். வாய்ப்புகளும் மிகப்பிரகாசமாக உள்ளன.

பிரச்சினைகள்

பொதுவாக, சிறுதொழில்களுக்குத் தேசீய வங்கிகளும், சிட்கோ என்கிற தமிழ்நாடு சிறு தொழில் கார்ப்பரேஷனும், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கார்ப்பரேஷனும் கடன் வசதிகள் கொடுத்து உதவி செய்து வரு

கின்றன. ஸ்டேட்பாங்கும் பனியன் தொழிற்சாலைகளுக்குப் பண உதவி செய்ய முன் வந்தமையால் திருப்பூரில் ஆயிரக்கணக்கான பனியன் தொழிற்சாலைகள் நிறுவப்பட்டன என்றாலும் அண்மைக் காலத்தில் இந்த ஸ்தாபனங்கள் தொழில் நிறுவனங்களுக்குச் சரிவரப் பயன் கொடுக்கவில்லை. பண வீக்கத்தைக் குறைக்கும் கொள்கையினால் சிறு தொழில்களுக்குப் பாங்குகள் அதிகமாகக் கடன் வழங்குவதில்லை. சிறு தொழில்களுக்கு பிக் அயர்ன், கோக் இரும்பு எஃகு மூலப்பொருட்கள் போதிய அளவு காலா காலத்தில் கிடைப்பதில்லை. இவற்றைக் கணிசமான அளவு தருவிக்க ஏற்பாடு செய்தல் வேண்டும். சில மூலப்பொருட்களையும், தேவையான இயந்திரங்கள் மற்றும் உறுப்புகளையும் இறக்குமதி செய்வதற்கு மிகுந்த தொந்தரவு, சிரமமும் ஏற்படுகிறது. எனவே, இறக்குமதிக்கான நடைமுறைகளையும் சுலபமாக்க வேண்டும். மற்றும் சிறு தொழில்களுக்கு லைசென்சு வழங்கு முறைகளை அரசினர் எளிதாக அமைக்க முயன்ற போதிலும் நடைமுறையில் அரசினர் பிறப்பித்த ஆணைகளின்படி சிறுதொழில்களுக்கு இத்துறையில் நகராண்மைப் பகுதிகளில் கணிசமான பயன்கள் கிடைக்கவில்லை; தாமதங்கள் ஏற்படுகின்றன. இவற்றைத் தவிர்க்க வேண்டும்.

மின்சாரம்

கிராமத்திலுள்ள தொழில்களுக்குப் பகலில் 6 மணி நேரம் மட்டுமே மின்சாரம் கிடைக்கிறது. நகரங்களின் சுற்றுப்புறமுள்ள கிராமப் பகுதிகளில் இயங்கும் தொழிற்சாலைகளுக்காவது முழு நேரமும் மின்சாரம் கிடைக்க வழி காண வேண்டும்.

மேலும் சென்ற மூன்று ஆண்டுகளாக மின்சாரப் பற்றாக்குறையின் காரணமாக சிறுதொழில்கள் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளன. வங்கிகளின் கட்டுப்பாடுகளும் சிறு தொழில்களுக்கு ஊக்கம் கொடுக்கக் கூடிய மற்றும் முக்கிய மூலப் பொருட்கள் தட்டுப்பாடும் நிலவி வருகின்றது. பொருளாதார வளர்ச்சியும் தேக்க நிலையில் உள்ளது. எனவே, உற்பத்திக்கு அதிக ஊக்கம் தந்தால் சிறுதொழில்கள் மூலமாக உற்பத்தி பெருகுவதுடன் வேலை வாய்ப்புகளும் அதிக அளவில் கிடைக்கவும் வழி ஏற்படும்.

மாவட்டத் தொழில் மையம்

ஒவ்வொரு மாவட்டத்திலும் தொழில்கள் மையம் ஒன்றினை அரசினர் நிறுவி உள்ளனர். பொது மேலாளர் ஒருவரும் அவருடன் சம்பந்தப்பட்ட துறைகளுக்குத் தனிப்பட்ட துணை மேலாளர்களும் பணி புரிகின்றனர். சிறு தொழில் தொடங்குவதினின்று விற்பனை செய்வது வரை ஆலோசனைகள் வழங்குவதும் ஒத்தாசை செய்வதும் மாவட்டத் தொழில் மையத்தின் பணியாகும். கடனுதவி பெறுவதற்கும், தொழில் தேர்ந்தெடுப்பதற்கும் உதவி செய்தலும் மாவட்டத் தொழில் மையத்தினரின் கடமையாகும். எனவே தொழில் முயற்சியாளர்களும், சிறு தொழில் நடத்துவோரும் தங்களுடைய பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கு இனிமேல் பல அரசு அலுவலகங்களை அணுக வேண்டிய அவசியமில்லை. ஒரே அலுவலகத்தில் தங்களுக்கு வேண்டிய உதவிகளைப் பெற்றுத் தொழில் தொடங்குவதற்கு அரசினர் மேற்கொண்டிருக்கும் முயற்சி பெரிதும் பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும். □

With the best compliments from

Phone : 26624

Sri Meenakshi Hardwares

117 A, Avanashi Road

PEELAMEDU - COIMBATORE - 641 004

Stockist : GARWARE PAINTS LIMITED

Dealers in : PAINTS & HARDWARES

With the best compliments from

Grams : WINDWIRE

Phone { Office : 33333
Resi. : 26752

PRAKASH ELECTRICALS

238, AVANASHI ROAD

COIMBATORE - 641 018

செவிக் குறையும் அதனை மீட்கும் வழிகளும்

திரு. ஜே. தயாளன் சாமுவேல் — திரு. சு. வேணுகோபால்

செவிப்புலன் மனிதன் பெற்றுள்ள அரிய செல்வங்களுள் சீரியதாகும். செவிப் புலனின் உதவி கொண்டு மனிதன் கற்றுள்ள மொழியறிவு அவனை மாக்களினின்று வேறுபடுத்தும். செவிப்புலனில் குறையிருப்பின், வாழ்வில் வருந்தத்தக்க விளைவுகள் ஏற்படும். கேட்கும் திறனில் குறையுண்டானால், குழவிக்கு மொழி வளர்ச்சி குன்றிப் போகும்; இளையவர்க்குத் தனிமை மேவிடும்; மனந் தளரும்; முதுமை விரைவில் படர்ந்திடும்; முதியவர்க்கோ, வாழ்வே இருண்டு போம். மொழியுணரும் கேள்வித் திறனில்லையேல், வாழ்வில் ஒளியில்லை. இதனைத்தான்,

"செல்வத்துள் செல்வம்
செவிச் செல்வம் அச் செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை"

என வள்ளுவம் உணர்த்திடும்.

இந்தியர்களில் நூறில் இருவர் செவிடர் என ஆராய்ச்சியாளர்கள் மதிப்பிடுகிறார்கள். நாடோறும் புதுமை படைத்திடும் அறிவியலின் உதவியால், செவிடர் பலர் இழந்த செல்வத்தை மீட்டுக்கொள்ள முடியும். இத்தகைய விந்தையறிவியலை வளர்க்க, வலியுறுத்த இந்திய அரசு கர்நாடக மாநிலத்தில், மைசூர் நகரில் அகில இந்திய சொற்கேள்வி நிறுவனத்தை அமைத்துள்ளது. பல்வகைச் செவிட்டுத் தன்மைகளை உணர, ஆராய திறன் வாய்ந்த வல்லுநர் குழு இங்கு உண்டு.

செவிகளின் அருமை

உள்ளத்தைக் கண்களால் உணர முடியும். செவியாலோ உள்ளத்தையே அடைய முடியும். செவி உறுப்பு, மனித உடலிலே மிக விந்தையான படைப்பாகும். கண்களை மூடிட இமைகள் உண்டு. செவிகளை மூடிட இமைகள் உண்டோ? மனிதன் உறங்கிடினும் செவிகள் உறங்குவதில்லை. அவை மனிதனின் தலையின் இரு புறமும் அமைந்துள்ளதால், 360° பாகைகளையும் கண்காணிக்கின்றன. இரு செவிகள் உள்ளதால், மனிதன் ஒலிகளில் எது வேண்டுமோ அதைத் தனிப்படுத்திக் கேட்க முடிகிறது (selective listening). ஓசை மிக்க இடங்களிலும் நினைத்தவாறு செவிக் கவனத்தைத் திருப்ப முடிகிறது (cocktail party effect). இரு செவிகளின் அருமை ஒரு செவியின் திறன் குன்றும் போது உணரப்படும். அவ்வாறு குன்றும் போது ஒலிகளை வேறுபடுத்தும் திறன் குறையும்; ஓசைகளைப் பேச்சிற்கு இடையூறு விளைவிக்காமல் பிரித்தறியும் ஆற்றல் அகலும்; செவித்திறனின் தெளிவும் மறையும்; இதன் விளைவாக, மன அமைதி சீர்குலையும்.

செவியுறுப்பியல்

இத்தகு உயிரியற்பொறியியலின் விந்தைப் படைப்பான மனிதச் செவிகளின் உறுப்புக்களை அவை இயங்கும் முறை கொண்டு நான்கு பகுதி

இக்கட்டுரை ஆசிரியர்கள், மைசூர் அகில இந்திய சொற்கேள்வி நிறுவனத்தில் கேள்வியியல் துறையில் பணியாற்றுகிறார்கள்.



செவிப்புலனின் இயங்கும் முறை

களாகப் பிரிக்கலாம். அவை ஒலி கடத்தும் பகுதி (conductive), ஒலி உணரும் பகுதி (sensory), ஒலி நரம்புப் பகுதி (neural), மற்றும் ஒலியறிவுணரும்—ஒலிப் பொருள் அறியும் மூளைப் பகுதி (auditory perceptual area) என்பனவாகும். இங்குக் கொடுக்கப்பட்டுள்ள படம் செவிப் புலனின் அமைப்பையும், செயல்படும் முறையையும் விளக்கும்.

ஒலி கடத்தும் பகுதி (conductive system)

வெளிச்செவி மடல், வெளிச் செவி வளை, செவிப்பறை, நடுச்செவி சிற்றெலும்புத் தொடர், மற்றும் நடுச் செவிக் குழாயும் ஒருங்கே ஒலி கடத்தும் பகுதி எனப்படும். இவை செவி மடலிலும், மற்றும் மடலருகே விழும் ஒலிகளை / ஒலியலைகளைச் செவி வளைக்குள் கடத்துவதுமன்றி அலைகளின் சக்தியையும் பெருக்கச் செய்கின்றன. ஓரளவு மாற்றமடைந்த ஒலியலைகள் செவிவளை வழியே அதிர்வொலிப் பெருக்கெடுத்து, செவிப் பறையில் மோதும். செவிப் பறை தன் மீது விழும் அலைகட்குத் தக்கவாறு அசைந்து,ஒலியலைகளைப் பொறியலைகளாய், சிற்றெலும்புத் தொடர் வழியே அனுப்பும். இங்கே

உண்டாகும் இயந்திர இலாபம் (mechanical advantage) ஒலியலைகளின் சக்தியைப் பன்மடங்காய் அதிகரிக்கும். நடுச் செவிக்குழாய் வெளிச் செவிக்கேற்ப காற்றழுத்த மாற்றங்களை உடனுக்குடன் ஏற்படுத்தி, செவிப்புலனை எளிதாக இயங்கச் செய்யும். இப்பகுதியில் நோய் ஏற்பட்டால், ஒலிகடத்தும் சக்தி குறையும். இதனையே கேள்வியியல் வல்லுநர் (audiologist) ஒலிகடத்தும் இழப்பு என்பர். காதில் விழும் ஒலியலைகள் உரக்குமாயின், செவிப்புலன் சரிவர இயங்கும். இப்பகுதியில் ஏற்படும் நோய்களுக்கு, காதுக்குறும்பி, காதில் சீழ் வடிதல், உட்செவியெலும்பணுவில் உண்டாகும் உள்ளரிக்காழ்ப்பு (otosclerosis) முதலியவை சில எடுத்துக்காட்டுகளாகும். மலைப்பகுதியில் உந்து வண்டியில் பயணம் செய்யும் போதோ, பழைய விமானத்தில் பயணம் செய்யும் போதோ காது மந்தமடையும் (இது நடுச் செவிக்குழாய் திறக்காத போழ்து ஏற்படும்). அச்சமயத்தில் வாயைத் திறந்து, கீழ்த்தாடையை அசைத்தால் நடுச் செவிக் குழாய் திறந்து, செவிப்பறையின் இருபக்கக் காற்றழுத்தங்களும் சமனடையச் செய்யும். செவியும் நன்றாகக் கேட்கும். நடுச் செவிக்குழாய் நோய்வாய்ப்பட்டால் இத்தகுசெயல் தடைபட்டு, நடுச்செவியில் துர் நீர் உண்டாகி, நிறைந்து அதன் அழுத்தம் செவிப்பறையைக் கிழியச் செய்யும். செவியில் வேதனை உண்டாகும். செவித் திறனும் குறையும்.

ஒலி உணரும் பகுதி
(sensory system)

உட்செவி அல்லது ஒலியுணரும் செவிப் பகுதி, உட்செவிப் பறையின் உதவியால் நடுச்செவிச்சிற்றெலும்புத் தொடரில் வரும் பொறியலைகளைத் தன்னுள் உள்ள வெளிப்பைத் திரவத்தினுள் (perilymph) செலுத்தும். இந்தத் திரவ அலைகள், உட்செவியின் ஆழப் பகுதியில் உள்ள பறையை அசையச் செய்யும். உட்செவியின்மேல் அமைந்துள்ள மயிருயிர் அணுக்கள் உட்பறையின் அசைவுக்கேற்றவாறு அசைவதாலும் அதன் மேற்பகுதியில் உள்ள பறையின் மீது அழுந்தி இயற்பொருள் வேறுபடுவதாலும் மின்னலைகளைப் பிறப்பிக்கும். வெளிச் செவியில் விழும் ஒலியலைகள், நடுச்செவியில் பொறியலைகளாய் மாறி, உட் செவியில் திரவ அலைகளாய் ஊடுருவி, இரசாயன மின்னலைகளாய் உருவெடுக்கும். இந்த உறுப்பில் நோய் ஏற்பட்டால் ஒலியுணர் சக்தி பாதிக்கப்படும். பேச்சறியும் சக்தியில் சிதைவு ஏற்படும். நடக்கும் சக்தியில் தடுமாற்றம் ஏற்படும். ஓசை மூலம் உண்டாகும் செவிக்குறை (noise induced hearing loss), உட்செவித் திரவம் அதிகரிப்பதால் உண்டாகும் ஒருவகை நோய் (meniere's disease) போன்றவை இப்பகுதியில் ஏற்படும் நோய்களுக்கு எடுத்துக்காட்டுகளாகும்.

ஒலி நரம்புப் பகுதி (neural system)

செவி நரம்புப் பகுதி, இரு செவிகளிலும் உண்டாகும் மின்னலைகளை எதிர் நேர்முனைப் பகுதிகட்கு எடுத்துச் செல்லும். அதாவது, வலது செவி நரம்பு இடப்பக்க மூளையையும், இடப்பக்க நரம்பு வலப்பக்க மூளையையும் இணைக்கும். இந் நரம்பில் புற்று நோய் உண்டாகலாம். இப்புற்றின் அழுத்தத்தால் நரம்பலைகள் பயணம் செய்வது சீர்குலையும். அதன் விளைவாக, பேச்சு உணரும், அறியும் திறன் அறவே ஒழியலாம். புற்று நோயழுத்தம், ஒலி நரம்புக் கருகாமையில் உள்ள நரம்புகளையும்

சீர்குலைத்து ஒரு கண்ணில் நீர் பெருக வைக்கும்; தலைவலியை உண்டாக்கும்; ஒரு பக்க முகத்தின் உணர்வை இழக்கச் செய்யும்; மனித உயிரையே பணயங்கொள்ளும்.

ஒலியறிவுணரும் - ஒலிப்பொருள் அறியும் மூளைப்பகுதி

ஒலிப்பொருள் அறியும் பகுதியே, ஒலியின் உண்மையான சிகரம் ஆகும். இருபக்கச் செவிகளும், தங்கள் நரம்புகளின் ஒரு பகுதியை இருபக்க மூளைகட்கும் அனுப்புவதால், செவி மூளைப்பகுதியில் ஏற்படும் நோய்களை எளிதில் கண்டறிவது கடினம். இதற்கென சீரியற்கலைகள் உண்டு.

செவித்திறன் அளவீடு

இத்தகு வேறுபட்ட செவிக்குறைகளைக் கண்டறியும் அறிவியல் கேள்வியறிவியல் (audiology) எனப்படும். செவித்திறனை அளக்கப் பயன்படுத்தும் கருவியை ஆடியோமீட்டர் (audiometer) என்றும், பரிசோதனையை செவித்திறனாய்வு (audiometry) என்றும் அழைப்பர். ஒலியுணர்வை அளக்க ஒலியளக்கும் decibel என்ற அளவீட்டைப் பயன்படுத்துவர்.

வேறுபட்ட தனி ஒலிகளை மின்சக்தியில் உண்டாக்கி, அதன் சக்தியை வேண்டுமளவு கட்டுப்படுத்தி, செவியின் ஒலி கேட்கும் திறனை அறியும் முறைக்கு ஒலி மாறுபாடறியும் செவித்திறனாய்வு (pure-tone audiometry) என்று பெயர். ஒலியலைகள், வெளிச் செவி, நடுச் செவிகளின் வழியே உட்செவியை அடையும் முறை காற்று ஒலிகடத்து முறை (air conduction) எனப்படும். உட்செவி தலை எலும்புக்குள் அமைந்திருப்பதால், தலை எலும்புகளை அதிர வைத்து உட்செவியை மட்டும் இயங்க வைத்து கேட்கும் திறனை அளக்கலாம். இம்முறைக்கு எலும்பொலிக் கடத்து முறை (bone conduction) என்று பெயர். சிறு வயதில் நாம் இருப்புப் பாதையில் தலையை வைத்துத் தொலைவில் வரும் தொடர் வண்டியின் ஒலியை உணர்ந்த விதத்தை இங்கு நினைவுக்குக் கொண்டு வரவேண்டும். மேசைகளின் மீது தலையை வைத்துக் கேட்டால், மேசைத் தாளங்கள் உரக்கக்கேட்பதும் இம்முறையில் தான். ஆயின், நடைமுறையில் அன்றாட வாழ்வில் பெரும்பாலும் பயன்படுவது காற்றுக்கடத்து முறையேயாகும். ஏனெனில் நம்செவி உறுப்புகள் காற்றுக் கடத்துமுறையில் இலகுவில் செயல்படுவதற்கே படைக்கப்பட்டுள்ளது அல்லது உருவாகியுள்ளது. இதனால் தான் நாம் நம் பேச்சையே பதிவு நாடாவில் (tapes) கேட்கும்போது வேறு ஒருவர் பேசுவது போல் தோன்றுகிறது. நம் பேச்சை நாமே நேராகக் கேட்கும் போது இந்த இருவகைக் கடத்து முறைகளும் பயன் படுத்தப்படும். பதிவு நாடாவில் கேட்கும்போது ஒலி கடத்து முறை மட்டுமே செயல்பட முடியும்.

இந்த இரு ஒலி வழிகளின் மூலம் உட் செவித்திறனை அளந்து, இவ்விரு ஒலி கடத்துத் திறன்களையும் ஒப்பிட்டு, வரும் வேறுபாட்டை வெளிச் செவி அல்லது நடுச் செவியின் குறை எனக் கூறலாம். இந்த அளவீடுகளை விளக்கும் அட்டவணையை ஆடியோகிராம் (audio-gram) (கேள்வித்திறன் வரைபடம்) என்பர். இவ்வட்டவணையின் விளக்கப் படம் அடுத்த பக்கம் கொடுக்கப்பட்டுள்ளது.



கேள்வித் திறன் வரைபடம்

ஒருவர் ஒலியலைகளில் எந்த மிகக் குறைவான சக்தி ஒலியலைகளைக் கேட்க முடியுமோ, அதுவே அவரின் கேள்வித் திறனாகும். வரைபடத்தின் கீழ்க் கோடு பல்விதச் சுருதிகளைக் குறிக்கும். குறைந்த சுருதி முதல் அதிக சுருதி வரை வேறுபட்ட சுருதிகளை உண்டாக்கி, ஒவ்வொரு சுருதியிலும் குறைந்த அளவு கேட்கும் திறனை நிர்ணயிப்பதே இச்சோதனையின் குறிக்கோள். இந்த எல்லா தனி ஒலிகளையும் ஒருவர் 20 டெசிபெல்லுக்குள் கேட்க முடியுமானால்தான், அவரின் கேட்கும் திறன் சரியாயுள்ளதெனலாம். 500, 1000, 2000 என்ற மூன்று சுருதிகளைப் பேச்சுச் சுருதிகள் என்பர். இவற்றின் சராசரி அளவைக் கொண்டு கேட்கும் குறைபாடுகளை நான்கு வகையாகப் பிரிக்கலாம்.

நுன் கேள்விக்குறை
(mild hearing loss)

பேச்சுச் சுருதிகளின் சராசரி அளவு 26 முதல் 41 டெசிபெல்லுக்குள் இருந்தால் குறைந்த சக்தி ஒலியலைகளையும், பிறர் மெதுவாகப் பேசுவதையும் கேட்க இயலாது. இவ்வகைக் குறை உள்ளவர்கள் அன்றாட வாழ்வில் ஓரளவு சமாளிக்க முடியும். பள்ளிகளில் முன் வரிசையில் சிறுவர்கள் (இவ்வகைக் குறையிருப்பின்) உட்காருவது நலம் விளைவிக்கும். உடனே செவி மருத்துவரையோ (otologist), கேள்வி வல்லுநரையோ (audiologist) அணுகுவது மிகப் பயன் தரும்.

மிதக் கேள்விக்குறை
(moderate hearing loss)

இந்த அளவு குறையிருப்பின், தொலைவில் இருந்து சாதாரணமாகப் பிறர் பேசும் பேச்சைக் கேட்க

முடியாது. பேசுபவர் மிக அருகாமை யில் இருந்தால், பேச்சு எளிதில் விளங்கும். இக்குறை உள்ளவர்கள் வகுப்பிலோ, அலுவலகங்களிலோ பேசப்படுபவற்றைக் கேட்டுப் புரிந்து கொள்வது கடினம். கேட்க உதவும் மின்னியல் கருவியைப் (electronic hearing aid) பயன்படுத்துவது இன்றியமையாததாகும்.

கடுங் கேள்விக் குறை (severe hearing loss)

உரைத்துப் பேசினால் ஒழிய, கேட்கமுடியாதவர்கள் இவ்வகுப்பைச் சார்ந்தவர்கள். மிகவும் உரக்கப் பேசினால்மட்டும் பேச்சு கேட்கும். ஆயின் பேச்சு விளங்கும் என்று உறுதி யில்லை. இவ்வளவு குறை உள்ள குழந்தைகள் கேட்க உதவும் மின்னியல் கருவியை அணிந்து, சிறப்பு வகைக் கல்வி முறையின் உதவி கொண்டும், கேள்வித் திறன் பயிற்சியாலும் பேசக் கற்றுக் கொள்ள முடியும். சாதாரணப் பள்ளிக்கூடங்களுக்கே இவர்களை அனுப்பிக் கல்வி பயிலச் செய்யவேண்டும் என்பது எமது குறிக்கோளும் வேண்டுகோளுமாகும்.

ஆழ் கேள்விக் குறை (profound hearing loss)

பெயருக்கேற்ப இவ்வளவு குறை உள்ளவர்கள் கேட்க உதவும் கருவியாலும் பயன் பெறுவது கடினம். பிறவியிலேயே இவ்வளவுகுறை உண்டாகுமாயின், குழந்தைகள் பேசக் கற்றுக் கொள்ள முடியாமல் ஊமைகளாய் வளர்ந்து விடுவர். இவர்களை மற்ற குழந்தைகளைப்போல பேச வைக்க கோவை மாநகரில் ஒரு நிறுவனம் (Society for the Orthopedically Handicapped) தன்னுள் ஒரு சொற்கேள்வி திருத்தும் பகுதியை ஏற்படுத்தி, சீரிய பணி புரிந்து வருகிறது.

தமிழ்நாடு அரசின் அரிய சாதனை

அண்மையில் சென்னை நகரில் அரசு மருத்துவக் கல்லூரியில் 'சொற்கேள்வி மறுவாழ்வுப் பகுதி' ஒன்று தமிழக அரசின் பெருமுயற்சியால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மருத்துவக் கல்லூரியின் செவி, மூக்கு, தொண்டைப் பகுதியிலும், நரம்பியல் பகுதியிலும், சிறுவர்கள் மருத்துவ மனையிலும் சொற்கேள்வி திருத்தும் பகுதிகள் உள்ளன. செவித்திறன் குறைவுள்ள சிறுவர்கள் ஒரு மொழியையே கற்பது கடினமாதலால், மாணவர்கள் கட்டாயம் இரு மொழிகளைக் கற்க வேண்டும் என்ற சட்டத்தைச் செவித்திறன் குறைந்த குழந்தைகட்கு மட்டும் தளர்த்தியுள்ளது. அதுமட்டுமன்றி செவித்திறன் குறை உள்ளவர்கட்கு இலவசமாக காது கேட்கும் மின் கருவிகளையும், பண உதவியையும் அளித்துள்ளது. முற்றிலும் கேட்காத குழந்தைகட்குச் செவிடர் பள்ளிகளையும் ஏற்படுத்தி உள்ளது. இவ்வாறு இந்தியாவிலேயே தமிழகம் செவிக் குறை உள்ளவர்கட்கு மறுவாழ்வு அளிப்பதில் முன்னிலையில் உள்ளது என்று கூறிக் கொள்வதில் பெருமையும், உவகையும் கொள்வோம்.

மதுரை மாநகரிலும், வேலூரில் கிருத்துவ மருத்துவக் கல்லூரியிலும் சொற்கேள்வி திருத்தும் வல்லுநர்கள் உள்ளனர்.

உயர் சுருதிக் கேள்விக் குறை (high frequency hearing loss)

பெரும்பாலும் இவ்வகைக் கேள்விக் குறை வயது அதிகரிப்பதால் உண்டாகும். சிலசமயங்களில் குழந்தைகளும், இளைஞர்களும்கூட இக்குறையைப்

பெற்றிருப்பது உண்டு. இவர்கட்குப் பேச்சைத் தெளிவாக அறியும் சக்தி குறைந்திருக்கும். உயர் சுருதி எழுத் தொலிகளைக் கேட்கும் திறனும், உச்சரிக்கும் திறனும் சிதைந்திருக் கும். செவி நரம்பின் புற்று நோயும், உட்செவி நோய்களும் இளையவர்க் கும், முதியவர்க்கும் உண்டாகுமாயின் இவ்வகைக் கேள்விக் குறை உண்டா கும். காதுகளில் ஒருவகை ஒலி ரீங்காரமிடும்; தலைவலி உண்டாகும்; வாந்தி வருவதுபோல் தோன்றும். செவியில் திரவம் நிறைந்த பிரமையை உண்டாக்கும்; இவ்வகை அறிகுறி கள் உண்டானால் உடனே செவி மருத்துவரைக் கண்டு ஆலோசிப்பது நலம்.

செவி மருத்துவ, அறுவை சிகிச்சைகளும் மறுவாழ்வும்

வெளிச் செவியிலோ, நடுச் செவி யிலோ உண்டாகும் நோய்களையும், குறைகளையும், புதுமை மருத் துவமும், அறுவை சிகிக்சையும் கொண்டு சரி செய்ய முடியும். உட் செவிக் குறையைச் சீர்படுத்தப் பெரும் பாலும் மருத்துவ சிகிச்சையே பயன் படுத்தப்படுகிறது, அறுவை சிகிச்சை கடிது, அரிது. செவி நரம்பில் உண் டாகும் புற்றுநோய் அறுவை சிகிச் சையில் அகற்றப்பட வேண்டும். செவித்திறன் மட்டும் குறைந்திருந் தால், கேட்க உதவும் மின்னியல் கருவியின் உதவி கொண்டு, மறு வாழ்வு பெற முடியும். செவியின் முழுச் சக்தியையும் இழந்தவர்கள் உதட்டசைவால் (lip reading) பிறர் பேச்சை அறிந்து கொள்ள பயிற்சி பெற வேண்டும். இதற்கு பேச்சுக் குறை நீக்கல் கலைஞர்கள் (speech therapist) பெரிதும் உதவி செய்வர்.

செவிக் குறையை மீட்டுக் கொடுப் பதாகப் பல்வகை மருத்துவர்கள் விளம்பரம் செய்து கொள்கின்றனர். இவர்களில் பலர் கேள்வித் துறையில் சிறிதும் பயிற்சி பெறா தவர் என்றறிகிறோம் நாம். இவர் களிடம் திறன் குறைந்த செவியை ஒப்படைத்து, அழித்துக்கொள்ளா தீர்கள்.

புதுமை அறிவியலின் உதவியால், செவிச் செல்வத்தைப் பாதுகாக்கவும், அழிந்த செவிச் செல்வத்தையும் மீட்டுக் கொள்ள முடியும். இக் கட்டுரையில் கொடுக்கப்படாத பல் வகை கேள்வித்திறன் ஆய்வு முறை கள் உண்டு. அவை பேச்சுக் கேள்வித் திறன் அறிமுறை, நடுச்செவி இயல்பு அறிமுறை, மின்னூசலியால் கேள்வித்திறனாயுமுறை, தானே செயல்படும் கேள்வித்திறனறிமுறை என்பனவாகும். இவ்வெல்லா முறை களையும் கொண்டு கேள்வித் திறன் களை ஆராய 'அகில இந்திய சொற் கேள்வி நிறுவனம்' இந்த அங்க வீனருக்கென்ற சிறப்பாண்டில் தன் சேவைகளைத் தொடரவும், அதிகரிக் கவும் தன்னை அர்ப்பணித்துக் கொள்ளும். □

சல்யூட்-6 இல் 3 சோவியத்து வீரர்கள்

கடந்த 3 ஆண்டுகளாக பூமியைச் சுற்றி வரும் சல்யூட்-6 விண்வெளிக் கலத்தினுள் சென்ற 3 சோவியத்து விண்வெளி வீரர்களும் அதன் பாகங்களை இயக்கி சுறுசுறுப்படையச் செய்தனர். 3 பேர் உட்கார்ந்து செல்லக் கூடிய சோயூஸ்-4 விண்வெளிக் கப்பல் சோவியத்து யூனியனின் புதுச் சாதனை. இது வெற்றிகரமாகச் செயல்பட்டுவிட்டால், சோவி யத்து விண்வெளித் திட்டத்தில் மேலும் பல புது சாதனைகளுக்கு வழி ஏற்படும்.

விண்வெளிக் கப்பலின் கமாண்டர், பிளைட் எஞ்சினியருடன் கூட பயணிகளும் செல்ல வழி செய்கிறது.

சல்யூட்-6ன் இயந்திரங்களை முடுக்கி அதை வேகமாக இயங்கச் செய்வதில் இவர் கள் நாள் முழுவதும் ஈடுபட்டிருந்தனர்.

விண்வெளி வீரர்கள் எடை இல்லாத நிலை அடைந்து, நன்கு உள்ளனர்.

ARC

உங்களின்
ஓடித்தேய்ந்த
டயர்களைச்
சிறந்த
முறையில்
புதுப்பிக்க
அணுகுங்கள்

ஆனைமலைஸ்

ரிட்ரெடிங் கம்பெனி

தலைமை அலுவலகம்: கோயமுத்தூர் - 641 018 போன்: 34500
கிளை: திருநெல்வேலி - 627 002 போன்: 2590

Trans-World Trade Fare Service Award Delhi

“தங்கமெடலை” மூன்று முறை
பெற்றவர்கள் என்பதை மகிழ்வுடன் அறிவிக்கிறோம்.

செவிப்புலனின் சிறப்பு

திரு. எம். ஏ. மைதிலி

மனிதன் பெற்றுள்ள பல செல்வங்களுள் ஒன்று பிள்ளைச் செல்வம். பெறற்கரிய பிள்ளைச் செல்வத்தைப் பெற்றவுடன் பெற்றோர்களது கடமை நிற்பதில்லை. குழந்தைப் பேற்றை அடைந்ததும் அவர்களது பொறுப்பு பல்வேறு கோணங்களில் மிகுகின்றது.

உறுப்புக்குறைபாடுடைய குழந்தைகளின் பெற்றோர்களுக்கு இத்தகைய பொறுப்பு சர்ாசரி குழந்தைகளின் பெற்றோர்களைவிடப் பன்மடங்கு மிகுகின்றது. பொறுப்புள்ள பெற்றோர்கள் தமது குழந்தையின் நிறை குறைகளை விரைவாக அறிந்து தக்க நடவடிக்கைகளெடுத்து அவர்களது முன்னேற்றமான எதிர்காலத்திற்கு வழிவகுக்க வேண்டும்.

குழந்தைகளைக் கூர்ந்து கவனித்தால் நீங்களே அவர்களின் நிறை குறைகளைக் கண்டுணரலாம். பொதுவாக, குழந்தையின் கேள்வித்திறனை அறிய சில அறிகுறிகளாவன:

குழந்தை அழும்பொழுது சராசரிக்குரலில் அழுகிறதா? அல்லது கீச்சுக்குரலில் அழுகிறதா? குழந்தைக்கு மூன்று மாதங்கள் ஆகும் போது மழலையின் பொருளற்ற மழலை மொழிகளைக் குழந்தை ஒலிக்கிறதா? நீங்கள் குரல் கொடுத்தால் குழந்தை கவனிக்கிறதா? குழந்தையின் பக்கத்தில் கிலுகிலுப்பையை ஆட்டினால் திரும்பி நோக்கி நகைக்கிறதா? உரத்த ஒலி கொடுத்தால் கைகால்களை அசைத்தோ, அழுதோ தனது பாதிப்பை அறிவிக்கின்றதா? ஆறுமாதவாக்கில் தாய்மாரின் தாலாட்டையும் வானொலி இசையையும் இரசித்துத் தானும் இராகமாக ஒலி எழுப்புகிறதா? நம்நாட்டு வழக்கப்படி கால்களில் அணிவிக்கப்படும் சதங்கையின் ஒலியை ஒருமுறை காலசைவினால் கேட்டு அனுபவித்து, பிறகு அதனைக் கேட்கும் பொருட்டு மீண்டும் மீண்டும் கால்களை உதைத்துக் குதூகலிக்கிறதா? அழும் குழந்தை தாங்கள் குரல் கொடுத்ததும் அழுகையை நிறுத்துகிறதா?

மேற்கண்ட கேள்விகட்குப் பதில் 'ஆமாம்' என்றால் தங்கள் குழந்தை கேள்வித்திறன் படைத்த குழந்தை எனலாம்.

குழந்தைகள் பின்வருமாறு நடந்து கொண்டால் அவர்கள் கேட்கும் திறமையை ஐயுறலாம்.

அறைகுறை பதில் கூறுதல், மிகச் சன்னமாக அல்லது மிக மிகுதியான குரலில் பேசுதல், ஒருமுறை விளித்த போது உணராது பலமுறை விளித்த போது மட்டும் உணருதல், உரக்கப் பேசியபோது மட்டும் உணருதல், காதின் பின் கைவைத்து கேட்க முயற்சி செய்தல், வானொலி மற்றும் நாடாப்பதிவுகள் போன்ற கருவிகளை அதிக ஒலியில் வைத்தல், பிறருடன் கலக்காமல் தனித்திருத்தல் போன்றன செவியுணர்வு குறைபாடுடைய பிள்ளைப்பருவத்தின் அறிகுறிகள். தாய் குரல் கேட்டு அழுவதை நிறுத்தாமல் தாயைப்பார்த்து மட்டும் உணர்தல்; அவ்வப்பொழுது காது வலி, சீழ்வடிதல் போன்றன

இக்கட்டுரை ஆசிரியை மைசூர், அகில இந்திய சொற்கேள்வி நிறுவனத்தில் ஆராய்ச்சி உதவியாளராகப் பணியாற்றுகிறார்.

உண்டாதல், கீச்சுக்குரலில் அழுதல் மட்டும் முன்னால் கூறிய எட்டுக் கேள்விகளுக்கும் 'இல்லை' என்பது பதிலானாலும் அதன் கேட்கும் சக்தியின் மேல் ஐயம் கொள்ளலாம். இவைகளைக் கண்டுணர்ந்து உடனே தக்க வல்லுநர்களிடம் செல்ல வேண்டும்.

கேட்கும் திறனைப் பரிசோதிக்கும் மின்னியல் இயந்திரங்களும் அவைகளைத் திறம்படப் பயன்படுத்தத் தேர்ச்சி பெற்ற வல்லுநர்களும் நம் நாட்டில் பல இடங்களில் உள்ளனர்.

கேட்கும் சக்தியின் குறையினால் ஊமை ஏற்படும். இவ்வாறு உண்டாகும் பேச்சின்மையோ. பேச்சுக் குறையோ அன்றிப் பல்வேறு விதமான பேச்சுக் கோளாறுகளும் உள்ளன. பொதுவாக உள்ள குரலன்றி ஆண்கள் பெண்களைப் போல கீச்சுக்குரலிலும், பெண்கள் ஆண்களைப்போல கட்டைக் குரலிலும் பேசலாம். கரகரக்கும் (hoarse) தொனியிலோ மிகச்சன்னமான (weak voice) தொனியிலோ பேசலாம். சராசரி ஏற்றத்தாழ்வுடன் சொற்களை ஒலிக்காமல், அதன் பொருளைச் சீராக உணர்த்தாமல் ஒரே விதக்குரலில் சொற்களை ஒலிக்கலாம். சில சொற்களை மாற்றி உரைக்கலாம். காட்டாக 'கலம்' என்று கூறுவதற்குப் பதிலாகத் 'தலம்' என்று கூறலாம். திக்குவாய் அல்லது ஒரு சொற்றொடரில் பல சொற்களை விழுங்கி விடும் குறையிருக்கலாம். ஒருவர் அதிவேகமாகப் பேசும் தன்மை பெற்றுப் பிறருக்குப் புரியாமல் போகலாம். பேச்சில் மழுப்பலோ குளரலோ இருக்கலாம்.

மூளை வளர்ச்சியின் பாதிப்பாலோ, விபத்தின் மூலம் தலைக்கு அடிபட்டோ, இயற்கையாகவே குறைந்த மூளைச் சக்தியுடன் பிறந்தோ, தாய் கருவுற்றிருக்கும் தருணத்தில் அம்மை போன்ற வியாதிகள் நேர்ந்த காரணத்தாலோ, பிறக்கும் பொழுது ஏற்படும் ஊறுகளினாலோ அல்லது பிறந்த பின்பு வளரும் பருவத்தினில் நேரும் வியாதிகளினாலோ குழந்தை பேசாமலும் பேச முயற்சி செய்யாமலும் இருக்கலாம். மற்றும் புற்று நோய் காரணமாக ஒருவரின் உயிரைக் காக்கும் பொருட்டு அவரது குரல்வளை (larynx) யை அறுவை சிகிச்சை மூலம் அகற்றுவதால் குரலற்ற மனிதனாக இருக்கலாம்.

மேற்கூறிய எல்லா நிலைமைகளுக்கும் பலவிதமான சிகிச்சை வழிகள் உள்ளன. சிகிச்சைப் பெற வசதிகளும் உள்ளன. குரல்வளை நீக்கப்பட்டவர்க்கும் ஏப்பத்தின் பேசப்பயிலுவிக்கத் தேர்ச்சி பெற்றிருக்கும் வல்லுநர்கள் உள்ளனர். அவர்கள் குரல்வளை இழந்தவர்க்குக் குரலுக்குப் பதிலாக ஏப்பத்தின் ஒலியின் மூலம் பேச்சு உறுப்புக்களான உதடு, மேல்வாய், நாக்கு முதலியவற்றின் துணைகொண்டு பேசப்பயிற்சி அளிப்பார்கள். மேல்வாய்ப்பிளவு (cleft palate) மற்றும் மேலுதடுப்பிளவு (cleft lip) போன்ற குறைகளுக்கும் அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு அவர்களது குரலில் உள்ள குறையைச் சீராக்க இவர்கள் பயிற்சி அளிப்பார்கள்.

பெற்றோர்கள் மற்றும் வீட்டிலுள்ளவர்கள் குறைபாடுடைய குழந்தையின் முன்னேற்றத்தை மனதில் கொண்டு வீட்டின் சூழ்நிலை முறைகளை வல்லுநர்களின் ஆலோசனைப்படி அமைத்துத் தருதல் வேண்டும்.

கலைக்கதிர் சந்தா விவரம்

1 ஆண்டுச் சந்தா	...	ரூ.	18–00
½ ஆண்டுச் சந்தா	...	ரூ.	9–00
தனி இதழ்	...	ரூ.	1–50
ஆயுள் சந்தா	...	ரூ.	250–00

கலைக்கதிர் - கோவை - 641 004

அவ்வப்பொழுது செவி, மூக்கு, தொண்டை பரிசோதகரிடம் (E. N. T. specialist) பரிசோதனைக்கு உட்படுதல் நல்லது, ஆண்டிற்கு இரு முறை இவ்வாறு சென்றால் நாமறியாமல் ஏதாவது சிறு குறை தோன்றியிருக்குமேயாயின் மருத்துவரின் துணை கொண்டு அதனை முளையிலேயே நீக்கலாம். செவியில் குறும்பி அதிகம் சேர்ந்தால் அதை மருத்துவரின் மூலம் அகற்றுதல் நல்லது. குறும்பி (wax) அதிகம் சேர்ந்தாலும் காது கேட்காது. குச்சியாலோ, அல்லது கம்பியாலோ காதைக் குத்தவேண்டாம். ஏனென்றால் குத்தும்பொழுது தற்செயலாகச் செவிப்பறையை அது துளைத்துவிடலாம், அல்லது பழுதுபடுத்தலாம்.

மிகுந்த ஒலியை நமது செவி அவ்வப்பொழுது கேளாதவாறு பார்த்துக்கொள்ளவும். தொழிற்சாலை, புகைவண்டி நிலையம் போன்ற இடங்களில் தொழில் புரியும் தொழிலாளிகள் அங்கு உண்டாகும் மிகுந்த ஒலியிலிருந்து தமது செவிப்புலனைப் பாதுகாக்க காது அடைப்பான்களை (ear muffs & ear protectors)-த் தொழில் புரியும் சமயத்தில் பயன்படுத்தல் நல்லது. குழந்தைகள் விளையாடும்பொழுது ஒருவர் செவியில் ஒருவர் சத்தமாகக் கத்துவதைத் தவிர்க்கவும். பேரிரைச்சலுள்ள முரட்டுத்தனமான கேலிக்கூத்து நிகழ்ச்சிகளில் (jazz) கலந்து கொள்ளாமலிருத்தல் நல்லது. இந்நிகழ்ச்சிகளில் பேராரவார இசைமேளக்குழு (jazz-band) பங்கு பெறுவதால் அவ்விரைச்சல் எளிய செவிகளைப் பழுதுபடுத்துகிறது. எவர் மீதும் செவியின் அருகில் அறைய வேண்டாம். விபத்தினால் தலைக்கு அடிவிழுந்து காதிலிருந்து இரத்தம் வந்தால், மற்றும் காது அடைத்த உணர்வு வந்தால் செவிப்பரிசோதகரை உடனே கலந்தாலோசித்தல் நல்லது. நீச்சல் பயிற்சியின்பொழுது காதில் பஞ்சு வைத்துச் செவியைப் பாதுகாக்கவும். விமானத்தில் பயணம் செய்யும் பொழுதும் அவ்வாறே செவியைப் பாதுகாக்க வேண்டும்.

சின்னச் சின்ன பொருட்களுடன் குழந்தைகள் விளையாடுவதைத் தவிர்க்கவும். ஏனென்றால் அவை காது, மூக்கு மற்றும் தொண்டையில் சென்று அடைத்துக் கொண்டால் குழந்தையின் உயிருக்கே கேடு விளைவிக்கும். குழந்தைகளுக்கு காய்ச்சல், அம்மை போன்ற வியாதிகள் வராதவாறு பாதுகாக்கவும். வந்தால் அது குணமடைந்த பிறகு ஒரு தடவை கேள்வித்திறன் பரிசோதனைக்குச் செல்லுதல் நல்லது. சளி பிடித்திருக்கும் பொழுது வெகு தீவிரமாக மூக்கைச் சிந்தினால் காற்றழுத்தத்தினால் காதில் வலி உண்டாகலாம். பிறகு அதுவே கேள்விச் சக்தியைக் குறைக்கலாம். அதனால் நிதானமாக மூக்கைச் சிந்தவேண்டும். அவ்வப்பொழுது இருமல், சளி, தலைவலி, தலைசுற்றல், வாந்தி வருதல் மற்றும் நடக்கும்பொழுது விழுமாறு உணர்ச்சி ஏற்படுதல் முதலியன இருந்தால் உடனே மருத்துவரிடம் செல்லவும். ஆஸ்துமா, காசநோய், போன்ற நுரைப்பைக் கோளாறினால் காதுவலி மற்றும் வீக்கமிருந்தால் உடனே மருத்துவரிடம் சிகிச்சைப் பெறவும்.

மலச்சிக்கலா?

கழிவு மண்டலம் சரிவர இல்லாவிட்டால் அறிவு சரிவர இயங்காது. அதனால் வரும் உடல் கோளாறுகளினால் ஆன்மிகமும் தடை பெறும். நாம் அதிகமாக சாப்பிடவேண்டியதே இல்லை. கருவுற்ற தாய்மார்கள் அதிகமாகச் சாப்பிட வேண்டும் என்பது மிகத் தவறான தாகும்.

நாக்கில் வெண்படலம், வாய் நாற்றம், சிறு நீரைப் பாட்டிலில் பிடித்து வைத்துப் பார்த்தால் அதில் மேகம்போல வெண்படலம் இருப்பது, மலத்திலும், அபான வாயுவிலும், துர்நாற்றம் இருப்பது ஆகியன சாதாரண மலச் சிக்கலின் அடையாளங்கள்.

கபம் அதிகமாதல், வியர்வையில் நாற்றம், கணுக்கால் வீக்கம், கண் கீழ் இமை கனமாதல் ஆகியவை நாட்பட்ட மலச்சிக்கலின் அறிகுறிகள். முகப்பரு, வாய்ப்புண், ஏப்பம் வருதல், மனத் தளர்ச்சி, பசியின்மை, செரிமானமின்மை, எளிதில் சோர்வு அடைதல், தலை சுற்றல், தோல் உரிதல் ஆகியவையும் கடினமான மலச் சிக்கலின் விளைவுகளே.

மலச் சிக்கல் உள்ளவர்களுக்கு மனத்துன்பம் பழக்கமாகி விடுகிறது. விசாரம் அழுத்தப்படுகிறது. வருத்தம், வெறுப்பு, பொறுமையின்மை, சிடுசிடுப்பு ஆகியவையும் உண்டாகின்றன.

மலச் சிக்கலும் ஒரு நோய். இதுவே பல நோய்களுக்குக் காரணமாகிறது. இதுவரை இதற்கு மருந்தே கிடையாது. இயற்கை உணவான பழங்களும், காய்களும்தான் சரியான வழி. இத்துடன் உடலுழைப்பும், பிராணயாமமும் உதவி செய்யும். உட்கார்ந்தே இருப்பவர்களுக்கு நடப்பதே ஒரு பயிற்சி. பேதி மருந்துகள் குடலைப் பலமிழக்கச் செய்து வேறு விளைவுகளை உண்டாக்கும்.

காரட் சாறும், தேங்காய்ப் பாலும் நீர் கலந்து காலையில் வயிறுநிரம்பச் சாப்பிட்டால் அளவான பேதி உண்டாகும். குடல் அசுத்தங்கள் ஓரளவு வெளியேறும். உணவுடன் தண்ணீர் சாப்பிடுவது, ஊறுகாய்கள், உப்பு, காரம் எண்ணெய்ப் பண்டங்கள், வெள்ளை மாவு, தீட்டிய அரிசி, சமைத்த உணவு, ஐஸ் உறைந்தவை ஆகியன மலச்சிக்கலுக்குக் காரணங்கள். காலை எழுந்ததும், கடன் தீர்க்கப் பழகிக் கொண்டால் பயனுண்டு. மலம் வரா விட்டாலும், குறித்த நேரத்தில் பத்து நிமிடம் வரை உட்கார்ந்து பழக்கப்படுத்த வேண்டும். பின்னர் உடம்பு முறைப்படுத்திக் கொள்ளும். இயற்கை எனிமா ஓரளவில் நன்கு உதவி செய்யும்.

இயற்கை மருத்துவ சங்கம், கோவை

காதில் சீழ் வடிந்தால் விரைவான சிகிச்சை அவசியம். சிகிச்சை அளிக்காவிட்டால் காதிற்கு அருகிலேயே மூளையிருப்பதால் நோய் மூளைக்குப் பரவும். அது உயிருக்கே ஆபத்து விளைவிக்கும்; ஆகையால் காதுவலி, சீழ்வடிதல், நீர் வடிதல், காதைச் சுற்றி வீக்கம், காதுக்குடைச்சல் போன்றவற்றை உணர்ந்தவுடன் மருத்துவரிடம் செல்லவும்.

உங்கள் குடும்பத்தில் எவர்க்காவது செவிக்கோளாறு இருந்தால் குடும்பத்தினர் அனைவரும் அவ்வப்பொழுது கேள்வி வல்லுநர்களிடம் (audiologists) சென்று பரிசோதித்துக் கொள்ளவும்.

பல் வலியோ அல்லது பயோரியா போன்ற நோயோ இருந்தால் உடனே சிகிச்சைப் பெறவேண்டும். நோய் வாயிலிருந்து காது, மூக்குக்குப் பர்வி கேடு விளைவிக்கலாம்.

சொற்கேள்வி வல்லுநர்கள் (speech and hearing specialists) தற்பொழுது நமது நாட்டில் பல இடங்களில் உள்ளனர். சொற்கேள்வி குறையுள்ளவர்கள் நலனுக்கென்றே மத்திய அரசாங்கத்தால் நிறுவப்பட்ட நிறுவனம் தென்னிந்தியாவின் கர்நாடகப் பிராந்தியத்திலுள்ள மைசூரில் உள்ளது.

குறைபாடுடையாருக்கான சிறப்பு ஆண்டான 1981இல் பொது மக்களும் சொற் கேள்விக் குறைகளைப் பற்றி அறிந்து தம்மிடையே உள்ள குறைபாடுடையவர்களை அடையாளங்கண்டு அவர்களுக்கு வழிகாட்டி உதவி புரிய வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையிலேயே இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது. □

ஊனமுற்றோருடன் எனது தொடர்பும் அனுபவமும்

திருமதி பங்கஜாட்சி சுப்பையன்

ஊனமுற்றோர் என நாம் யாரையுமே பிரித்துக்கூற முடியாது. ஏனெனில், உலகில் பிறந்த ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு வகையில் ஊனமடைந்தவர்களே. அதன் அளவு தான் மாறுபடுகின்றது. சில ஊனங்கள் வெளிப்படையாகத் தெரிகின்றன. பல ஊனங்கள் மறைந்தே உள்ளன. வெளிப்படையாகத் தெரியும் உடல் ஊனங்களை வைத்துத் தான் நாம் இவ்வாறு ஊனமுற்றோர் எனப் பிரித்துப் பேசுகிறோம்.

ஊனமுற்ற குழந்தைகளைக் குறித்து–பெற்றவருக்கும் மற்றவருக்கும் அவர்கள் ஒரு பெருத்த சுமை, என்ற மனப்பான்மையே இதுகாறும் நிலவி வந்த கருத்து. ஆனால், அவர்களும் தங்கள் வாழ்விற்கு வேண்டிய பொருளீட்டி, பெற்றோருக்கும், மற்றோருக்கும் பெருத்த பாரமாக இல்லாது தத்தம் காலூன்றி நிற்க வழி செய்ய இயலும் என்பது இன்றைய அறிவியலும், மருத்துவமும் நமக்கு உணர்த்தியுள்ளன. இதைப் பொதுவாக சமுதாயத்தில், அனைவரும் உணர்ந்து, உடல் ஊனமுற்றோரை, உள்ளம் ஊனமடையவிடாமலும், உள்ளம் ஊனமுடையவரை அவர்கள் ஊனத்தை அதிகப்பட விடாமலும் காப்பது நம் ஒவ்வொருவரின் கடமை என்பதை உணர்த்தவே 1981ஆம் ஆண்டை அகில உலக ஊனமுற்றோர் ஆண்டாகக் கொண்டாட உள்ளோம்.

முதன் முதலில் நாம் ஒரு ஊனமுற்ற குழந்தையைப் பார்க்கும்போது,

அறிவு வளர்ச்சிக் குறைக்கும் மாற்று உண்டு

அந்தக் குழந்தையின் நிலை கண்டு, நம் மனத்தில் ஒரு பரிவு, இரக்கம் தான் தோன்றுகிறது. மற்றபடி நம்மாலும் அவர்களுக்கு உதவ முடியும் என்ற எண்ணம் எழுவதில்லை. இதேபோன்ற எண்ணம்தான் பத்து ஆண்டுகளுக்கு முன்பு என் மனத்திலும் இருந்தது. ஆனால் இந்தப் பத்தாண்டுக் காலமாக உடல், உள்ளம் ஊனமுற்றோருடன் பழகும் வாய்ப்பு எனக்குக் கிடைத்ததால்,



தூண்டுகோலும் துணிவுமே வேண்டும்

பல புதிய அனுபவங்கள் ஏற்பட்டுள்ளன. எந்த ஒரு குடிமகனும் ஆணாக இருந்தாலும் சரி, பெண்ணாக இருந்தாலும் சரி ஊனமுற்றோர் நலனுக்காக நேரடியாக இல்லாவிடினும், வேறு ஏதாவது ஒரு வகையிலாவது கட்டாயம் உதவ முடியும் என்பது நான் கற்ற உண்மை. உலகில் ஒளவை மூதாட்டியின் சொற்படி அரிய பெரும் பிறவியைப் பெற்ற நாம் ஒவ்வொருவரும், குறையுடைய மக்களுக்கு அவர்தம் குறை நீங்க இயன்றதைச் செய்ய வேண்டும். பொதுவாக, நல்ல நிலையில் இருக்கும் ஒருவருக்குச் செய்யும் உதவி, ஏதோ அவரிடம் பிரதி பயன் கருதிச் செய்யப்பட்டது அல்லது அவரை திருப்திப்படுத்துவதற்காகச் செய்யப்பட்டது என்று தான் எடுத்துக் கொள்ளப்படுகிறது. இது நடைமுறை, உலக நியதி என்றே கூறலாம். ஆனால் ஊனமுற்றோருக்குச் செய்யும் எந்த உதவியும் பிரதிபயன் கருதாது செய்யப்படுகிறது என்பது உறுதி. மேலும், ஊனமுற்றோருக்கு அதிலும் மூளை வளர்ச்சி குன்றியோருக்கு நாம் அளிக்கும் உதவியின் அடிப்படையைப் பற்றி அறிந்து கொள்ளும் மனப்பக்குவம் அவர்கட்குக் கிடையாது. ஆனால், நமது பணி அவர்களுக்கு ஆதரவு தர வல்லது என்பதை உணருகிறார்கள். அதன் பலனாக அவர்கள் உள்ளத்தில் தாழ்வு மனப்பான்மை, விரக்தி, வெறுப்பு, முரட்டுத்தன்மை மாறி பாசமும், நேசமும் மலர்கின்றன. இந்தப் பாசத்தினால், பக்குவமற்ற மனநிலையில் மாற்றம் காண்கிறோம்.

எடுத்துக்காட்டாக, கடந்த ஆண்டு சில நாட்கள் உடல் நிலை சரியில்லாத காரணத்தால் கோவை, உடல்

ஊனமுற்றோர் மறுவாழ்வு நிலையத்திற்கு நான் அடிக்கடி செல்ல இயலவில்லை. நலமடைந்தபின் நான் அங்குச் சென்றபோது மூளை வளர்ச்சி குன்றிய நாகமணி என்ற பெண் – வயது பதினொன்று இருக்கும், என்னைக் கண்டவுடன் கை கூப்பி வணக்கம் தெரிவித்து விட்டு 'அம்மா உங்களுக்குக் காய்ச்சல் நன்றாகி விட்டதா?' எனத் திணறிக் கொண்டே கேட்டாள். ஏனெனில், அந்தக் குழந்தைக்குச் சரியாகப் பேச வராது. அந்த நிமிடத்தில் என் மனதில் உண்டான நெகிழ்ச்சிக்கு எல்லையில்லை. அப்போது மனதில் ஓர் உறுதி ஏற்பட்டது. வேறு பல வகையில் இடர்ப்பாடுகள் இருந்தாலும், இத்தகைய குழந்தைகளுக்காகச் செய்யும் பணியை இன்னமும் நல்லமுறையில் செய்ய வேண்டுமென எண்ணினேன். காரணம் அந்தக் குழந்தை என்னிடம் கேட்ட கேள்வி. நலம் குன்றியிருந்தவர், நலமாகி வந்துள்ளார், அவரை நாம் விசாரிக்காவிட்டால் தவறு ஏற்படுமோ என்ற ஐயப்பாட்டிற்காகக் கேட்கப்பட்ட கேள்வி

ஊமையேயாயினும் உளறுவாய் ஆயினும் உழைப்பால் அவற்றை அகற்றுவோம் வாரீர்!

வயதுக்கேற்ற மன வளர்ச்சி இல்லையா — அன்பால், அறிவால் உங்களை வளரச் செய்வோம்

அல்ல! மாறாக ஆத்மார்த்தமாக, மனப்பூர்வமாக என்னிடம் கொண்ட அன்பினால் கேட்கப்பட்ட கேள்வியாகும்.

இதுபோல் இரண்டாண்டுகளுக்கு முன்பு ஊனமுற்றோர் மறுவாழ்வு நிலையக் குழந்தைகளுக்காக பூண்டியில் ஒரு விடுமுறை முகாம் நடத்தினோம். அந்த முகாமில் எங்கள் நிறுவனத்தைச் சேர்ந்த ஊனமுற்ற குழந்தைகளும், சர்வ ஜன மேல் நிலைப் பள்ளியைச் சேர்ந்த குறைபாடற்ற குழந்தைகளும் பங்கு பெற்றனர். இந்தக் குழந்தைகள் அங்குத் தங்கிய பதினைந்து நாட்களில் நானும், திருமதி அமிர்தம் வரதராஜும் மூன்று நான்கு முறை போனதுண்டு. அம்மா அவர்கள் வருவார்கள் என தினமும் கோவிலுக்குச் செல்லும் போதெல்லாம், விபூதிப் பிரசாதம் எடுத்து வைத்திருந்து எங்களைக் கண்டவுடன், ராகவன், சுரேஷ் என்ற இரண்டு ஊனமுற்ற குழந்தைகள் விபூதி அளிப்பார்கள். இதே முகாமில் பல ஆண்டுகள் பேசாமலிருந்த பெண் ஒருத்தி, மாறுபட்ட சூழ்நிலையில் அன்புடனும், பரிவுடனும் பாதுகாக்கப்பட்டவுடன் பேச ஆரம்பித்தாள். சாதாரணமாக, அவரவர் வீட்டிலிருக்கும்போது ஊனமுற்ற குழந்தையைப் பெற்றோரும், மற்றோரும் ஏளனமாகப் பேசுவது உலக இயல்பு. இத்தகைய சூழ்நிலையில் இருக்கும்போதுதான் ஊனமுற்ற குழந்தைகளின் மனோபாவம் மாறி அடம் பிடிப்பதும், முரட்டுத்தனம் அதிகரிப்பதும் கட்டுக்கடங்காத நிலையும் ஏற்படுகின்றது. மாறாக அன்பும் பரிவும் காட்டும் போது அவர்களே மற்றவர்களுக்கு உதவ முன்வருகிறார்கள்.

இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த ஒரு பிரபல கண் மருத்துவர்

ஊனமுற்றோர் வாழ்வு மலர சமூகம் உதவவேண்டும்.

மக்கள் தங்களுக்குள் மனிதாபிமான உணர்வை வளர்த்துக்கொண்டு துன்பங்களைச் சமாளித்து மேன்மேலும் உயர முயல வேண்டும்.

உடல் ஊனமுற்றவர்கள் தங்களை எதிர் நோக்கியுள்ள சவாலை வெற்றிகரமாகச் சமாளிக்கும் போது ஏற்படக்கூடிய மகிழ்ச்சிதான் மற்ற எப்போதும் ஏற்படக் கூடிய உணர்வைக் காட்டிலும் சிறந்தது.

உடல் ஊனத்தாலும் சித்த பிரமையாலும் பாதிக்கப்பட்ட மக்களைச் சமுதாயம் ஒரு போதும் புறக்கணிக்கக் கூடாது.

இவர்களுக்கு உதவும் இந்த மனிதாபிமானம் மிக்க தொண்டில், மேலும் அதிக அளவில் ஈடுபட வேண்டும்.

அரசால் இப்பணியை மேற்கொள்ள இயலாது. ஏனெனில் அது சமாளிக்க வேண்டிய பிரச்சினைகள் பல உள்ளன.

உடல் ஊனமுற்ற பலர் தங்கள் இயற்கைத் தடைகளைச் சமாளித்துப் பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கவேண்டும்.

திருமதி இந்திராகாந்தி

இங்கு வந்திருந்தார். அவர் தம் துணைவியாருக்கு அவரது இருபத்தி நான்காம் வயதில் இளம்பிள்ளை வாதத்தினால் இடுப்பிற்குக் கீழுள்ள பகுதி செயலற்றுப்போய்விட்டது. ஆனாலும் அவர் செய்து வந்த நர்சுத் தொழிலை அவர் விட்டாரில்லை. காரணம் அவருடைய கணவர் அவரிடம் காட்டிய பரிபூரணமான அன்பும், அதனால் ஏற்பட்ட தன்னம்பிக்கையும் அந்த அம்மையாரின். அறுபதாவது வயதில்கூட கணவருக்கு அறுவை சிகிச்சை செய்யும்போது சக்கர நாற்காலியில் உட்கார்ந்த வண்ணம் உதவ வழி கோலியுள்ளது. மனைவியின் ஊனத்தைச் சுமையாகக் கருதாமல் அந்தக் கண் மருத்துவர் உலகின் எப்பகுதிக்குச் சென்றாலும் மனைவியை உடன் அழைத்துச் செல்கிறார். அம்மையாரும் கணவருக்குத் தன்னாலியன்ற உதவிகளைச் செய்கிறார்.

இவை போன்ற பல அரிய அனுபவங்கள் ஏற்பட்டதனால் 'ஊனமுற்றவர்கள் என ஒரு தனி சமுதாயத்தை நாம் உருவாக்கக் கூடாது, மாறாக, அவர்களும் நம்மவர் என்ற எண்ணத்தை அவர்களிடையே ஏற்படுத்த வேண்டும், என்ற உண்மை எனக்கு விளங்கியது. மேலும், ஊனமுற்றோருக்கு அவர்கள் செய்யக் கூடிய, அவர்களது திறமைக்கேற்ற தொழிலை ஏற்படுத்தி, வேலை வாய்ப்பளித்தோமேயானால் கட்டாயமாக அவர்கள் வாழ்வில் மறு மலர்ச்சி ஏற்படும். நாட்டின் பொருளாதாரமும் பெருகும் என்பதில் ஐயமில்லை. மேலும், மன வளர்ச்சி குன்றியோருக்கு கைத்தொழிலைக் கற்பித்து அவர்களை அந்த வேலையில் ஈடுபடுத்தினோமானால், அவர்களுக்கு அந்த வேலை தான் குறிக்கோளேயல்லாமல் சுற்றுப்புறச் சூழ்நிலையில் கவனமே இருக்காது. எனவே, அந்த வேலையின் தரமும் நன்றாக இருக்கும். அதற்கான நேரமும் குறையும். வீண் பிரச்சினைகளுக்கு இடமே இல்லை.

எனவே, நற்பிறப்பினைப் பெற்ற நாம் அனைவரும் ஒருங்கிணைந்து தம்மாலியன்ற பணியைச் செய்தோமானால் வளம் குன்றிய மக்களின் வாழ்வில் நம்பிக்கை ஒளி வீசும் என்பது திண்ணம். □

நன்றி

ஊனம் உற்றோர் மறுவாழ்வு பற்றிய படங்கள் அனுப்பி உதவியவர்கள்

1. ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் நிதிக் குழு. (UNICEF)
2. இந்திய அரசின் மக்கள் செய்தித் தொடர்புப் பிரிவு.

The Lakshmi Mills Company Limited

348, AVANASHI ROAD * COIMBATORE - 641 037

Spindles : 1,60,384 — Looms: 394

Telegrams : "LAKSHMI" COIMBATORE
"LAKSHMIMIL" KOVILPATTI

Telex : COIMBATORE - 0855-212
KOVILPATTI - MA 0445-286

Telephone: COIMBATORE - 30251 to 30255
KOVILPATTI - 613 and 614
PALLADAM - SULUR 88250

Manufacturers of: Finest Quality

COTTON, STAPLE FIBRE
POLYESTER YARN & FABRICS

Ask by name our following fabrics

SUVARNA
100% Polyester Saree in Bewitching Prints

ROYAL JEWEL, EMPEROR & EXCELLENCE
100% Polyester Texturised Shirtings

SUPREMACY & LAKSHMI CROWN
100% Polyester Printed Shirtings

ROYAL GOLD
80% Polyester 20% Cotton Shirting with Texturised Filament Weft

GOLD CROWN & YUVARAJ
Polyester Cotton Blended Shirtings in 80 : 20 & 67 : 33 Blends

BALLERINA & PRITI
100% Cotton Superfine Printed Voiles

POLY CROWN
Polyester-Cellulosic Suiting in Popular Shades

முடநீக்கு புனர் வாழ்வு நிலையமும் அதன் சேவையும்

திருமதி அமிர்தம் வரதராஜ்

1966ஆம் ஆண்டு செப்டம்பர் 1ஆம் தேதி நகராட்சியின் சிறிய கூடத்தில் முடநீக்கு புனர் வாழ்வு நிலையம் துவங்கப்பட்டுக் கடந்த 15 ஆண்டுகளாக நன்கு செயல்பட்டுப் பல பிரிவுகள் தொடங்கப்பட்டுள்ளன. தற்போது நகராட்சியினர் நன்கொடையாக அளித்த இடத்தில் அகன்ற கட்டிடத்தில், அங்கேயே தங்கி மருத்துவம் செய்து கொள்ளவும், மற்றும் வேண்டிய வசதிகளுடனும் இயங்கி வருகிறது. இந்த நிலையத்தில் சிகிச்சை பெற்றுப் பின்னர் தகுந்த வலிவு தரும் காலணிகள் (braces) பொருத்தப்பட்ட குழந்தைகள் பலர் மற்ற குழந்தைகளுடன் சமமாகப் பள்ளிகளில் படித்து வருகின்றனர். மூளை வளர்ச்சி குன்றிய குழந்தைகளில் சிலர் கற்றுப் பயின்று வேலைகளில் அமர்ந்துள்ளனர்.

மாவட்டத் தலைமை மருத்துவ மனையில் இல்லாத சில நல்ல துணைக் கருவிகள் இங்கு பொது மக்களின் வசதிக்காக அமைக்கப்பட்டுள்ளன. இங்குப் பல்தரப்பட்ட மக்களுக்கும், மருத்துவ உதவி, பயிற்சி, ஆலோசனை தரப்படுகிறது. ஏழை மக்களுக்கு இலவசமாகவே மருத்துவ வசதி தரப்படுகிறது. கூடுமான வரையில் வசதி பெற்றவர்கள் இந்த நிலையத்தின் சேவைகளைக் கருதி பொருளுதவி செய்தால் இன்னும் பல ஏழை மக்களுக்கும் இலவச மருத்துவம் செய்ய இயலும். இவ்வாறு எங்களைப் பொதுமக்கள் ஊக்குவிப்பதனால் மேலும் மேலும் நல்ல முறையில் பணியாற்றிட முடியும். மூளை வளர்ச்சி குன்றியோருக்கான பள்ளி தகுந்த பயிற்சி பெற்ற ஆசிரியைகளால் நல்ல முறையில் நடத்தப்பட்டு வருகிறது. மூளை வளர்ச்சி குன்றிய குழந்தைகளின் பெற்றோர்கள், இந்தக் குறைபாட்டை, ஒரு சாபக்கேடு என்றோ, தலைவிதி என்றோ, மனம் தளர்ந்து போகாமல் இத்தகைய பள்ளிக்கு அனுப்ப வேண்டும். அவர்களோடொத்த குழந்தைகளுடன் பழகுவதாலும் பயிற்சி பெற்ற ஆசிரியைகளின் கண்காணிப்பாலும் கட்டாயமாக மூளை வளர்ச்சி குன்றிய குழந்தைகளின் அவல நிலையை மாற்றிட முடியும், அவர்களும் சமூகத்தின் ஒரு பயனுள்ள உறுப்பினர் என்ற உணர்வை அவர்களுக்கு ஏற்படுத்த வேண்டும். எங்கள் நிலையத்தில் கல்வி, பயிற்சி பெற வந்த குழந்தைகள் பலரின் வளர்ச்சியிலும் அவர்கள் நடையுடை பாவனைகளிலும் ஏற்பட்ட மாற்றத்தினைக் கண்டு நாங்களே வியந்ததுண்டு.

அன்பும், ஆதரவும் சரியான முறைக் கல்வியும் தன்னைப் போன்ற குழந்தையின் கூட்டுறவும் இவர்களுடைய மனப்பான்மையை வெகுவாக உயர்த்தி அறிவுத்திறனையும் கைத்தொழில் கற்கும் திறனையும் ஓரளவு உயர்த்துகிறது. இத்தகைய குழந்தைகளைச் சமூகத்தில் பயனுள்ள உறுப்பினர்களாக மாற்ற வேண்டுமென்பதே எங்கள் குறிக்கோளாகும். குழந்தையின் நிலையில் மாற்றம் கண்ட பெற்றோர்கள் மந்திரம், தந்திரம் என்ற பழைய முறைகளை

கால் ஊனம் பற்றிக் கவலை கொள்ளாதே!

அணுகாது எங்கள் நிலையத்தில் சேவை புரியும் மனோதத்துவ வல்லுநரிடம் ஆலோசனை பெற்றுக் குழந்தையைப் பயனுள்ள குடிமகனாக்க வேண்டியது பெற்றோரின் கடமையாகும். இத்தகைய குழந்தைகளின் பூரணமான மனநிலை இல்லாமையை ஒரு பெரிய இழிவு என நினைத்து, அவர்களை மருத்துவரிடம் அழைத்துச் செல்லாமலிருப்பது பெருந்தவறு. மேலும், இரத்த சம்பந்தமுள்ளவர்கள் திருமணங்கள் செய்து கொள்வதாலும், தாய் கருவுற்றிருக்கும் போது மருத்துவரின் ஆலோசனையில்லாமல் கண்ட மருந்துகளை உட்கொள்வதாலும் குழந்தை பிறக்கும்போது தக்க மருத்துவ வசதி செய்து கொள்ளாமலிருப்பதாலும் குழந்தைகளுக்குக் குறைபாடுகள் ஏற்படுகின்றன.

மூளை வளர்ச்சி குன்றிய குழந்தைகள் பலருக்குச் சரியாகக் காது கேட்பதில்லை. அதேபோல் பேச்சும் வருவதில்லை. இவர்களுக்குப் பயிற்சி அளிக்க 1975 ஆம் ஆண்டு முதல் ஒரு தனிப் பிரிவு, தனிப் பயிற்சி பெற்ற ஆலோசகரைக் கொண்டு (audiologist and speech therapist) இயங்கிவருகிறது. செவிட்டுத் தன்மையை முடிவு செய்து, அதற்கேற்றவாறு காதொலி கேட்கும் கருவிகள் (hearing aid) பொருத்தும் வாய்ப்பினை audio meter என்ற துணைக் கருவியின் மூலம் செய்து வருகிறோம். வசதியற்றவருக்கு அன்பளிப்பாகக் காதொலிக் கருவிகள் வழங்குகிறோம். கூட்டுக்கல்வி மூலமாக மந்த செவியுடைய ஊமைக் குழந்தைகளுக்குக் கல்வி புகட்ட இருக்கிறோம். காது மட்டும் கேட்காத குழந்தைகளுக்கு வாய் அசைவின் மூலமாக சொற்களைச் சொல்லிக் கொடுக்கிறோம்.

'வருமுன் காப்பது'தான் சிறப்பாகும். எனவே நாங்கள் எங்கள் "நல்ல

ஆரோக்கியமான குழந்தைகள் நிலையத்தின்" மூலமாக இளம்பிள்ளை வாதத் தடுப்பு மருந்தும், முத்தடுப்பு ஊசியும் இலவசமாகப் போடுகிறோம். இளம்பிள்ளை வாதம் வந்தவுடன் ஆலோசனைக்கு வந்தால் 90 சதவிகிதம் வரை நலம் பெற வாய்ப்பு உண்டு. பாதிக்கப்பட்ட திசுக்கள் முழுவதுமாக அழியுமுன் அதற்குப் புத்துணர்ச்சியூட்டி நன்கு செயல்படுத்திவிட்டால் குழந்தைகளின் ஊனத்தைக் குறைத்துவிடலாம். விரைவாகச் செயல்பட்டால் முழு நலம் பெறலாம்.

காலை 8 மணி முதல் மாலை 4 வரை செயல்படும் இந்நிலையத்தில் முடநீக்கு இயல் மருத்துவத்தில் (orthopaedics) தேர்ச்சி பெற்ற மருத்துவர் நோயாளிகளைப் பரிசோதித்து தக்க பயிற்சி ஆலோசனைகள் கூறுவதற்கு ஏற்பாடுகளைச் செய்துள்ளதோடு அந்த ஆலோசனைகளின்படி பயிற்சிகள் அளிக்க இரண்டு அசைவு மருத்துவர்களும் (physiotherapists) உள்ளனர்.

சென்னை, வேலூர் மருத்துவமனைகளில் உள்ளன போன்ற விலையுயர்ந்த கருவிகள் இங்கு மக்களின் பயனுக்காக வாங்கி வைக்கப்பட்டுள்ளன. இந்நிலையத்திற்கு வந்த வெளிநாட்டவர்கள் இதன் சேவையைப் பாராட்டி அவர்களும் நல்ல துணைக் கருவிகளை நன்கொடையாக அளித்துள்ளனர்.

வெளியூர்களிலிருந்து சிகிச்சைக்கு வருபவர்கள் எண்ணிக்கை அதிகரித்து வந்ததால் 1977-ஆம் ஆண்டு முதல் மருத்துவமனையில் தங்கி



கை விரலில்லையெனக் கூடிந்து ஒதுக்காதீர்



ஏறிப் பழகி ஏற்றம் காண்போம்

யிருந்து சிகிச்சை பெறுவோர் பிரிவு செயல்பட்டு வருகிறது. குழந்தைகள் மட்டுமே கவனிக்கப்படுகிறார்கள், பெரியவர்களுக்கு மருத்துவ வசதி கிடைப்பதில்லை என்ற பலரின் வேண்டுகோளுக்கிணங்க அந்தக் குறையைப் போக்கத் தற்போது பெரியவர்களுக்கும் மருத்துவ வசதி அளிக்கிறோம்.

தற்போது இந்த ஊனமுற்றோரின் வாழ்க்கையின் மறுமலர்ச்சிக்காக அவர்களால் செய்யக்கூடிய வேலைகளுக்குச் சிறு தொழிற்கூடங்கள் அமைக்கத் திட்டமிட்டுள்ளோம். இதன் முதல் கட்டமாக தென் இந்திய ஜவுளி ஆராய்ச்சி கழகத்தின் (sitra) தொழில் நுட்ப உதவியாலும், சமூக நல வாரியத்தின் பொருளுதவியுடனும் பனியன் ஆடைகள் (knitting unit) செய்யும் தொழிற்கூடம் அமைக்க இருக்கின்றோம்.

செயற்கைப் பாறை

செயற்கை முறையில் பாறாங்கற்களைத் தயாரிக்கும் முறை ஒன்றை விஞ்ஞானிகள் கண்டறிந்திருக்கிறார்கள்.

ஆயிரக்கணக்கான — இலட்சக் கணக்கான ஆண்டுகளில் படிப்படியாக ஏற்பட்ட மாற்றங்களின் விளைவாகப் பாறைகள் உருவாகின்றன அல்லவா? இவ்வளவு பெரிய காரியத்தை ஒருசில விநாடிகளில் காமா-பீட்டா கதிர்கள் செய்து முடிக்க இயலும் என்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கொள்கையைச் செயல்படுத்த உதவும் இரசாயனக் கலவை ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கிறது. இதைக் கொண்டு, ஒரு கான்க்ரீட் பொருள் மீது கருங்கல் அல்லது சலவைக் கல் துண்டுகளை மிகமிக அழுத்தமாகப் பதிய வைக்கமுடியும். இவை எல்லாம் சேர்ந்து இயற்கையான ஒரு கருங்கல் போல அவ்வளவு உறுதியாக ஆகிவிடுகிறது.

இத்தகைய தொழிற்கூடங்கள் அமைப்பதில், ஊனமுற்றோர், தம் ஊனத்தை மறந்து, தங்கள் செலவிற்குப் போதிய வருமானத்தைத் தாங்களே ஈட்ட முடியும். ஊனம் உடையார் பயனற்றவர்களல்லர்; அவர்களாலும் வேலை செய்ய முடியும்; பொருளீட்ட முடியும் என்ற நிலையை உண்டாக்க வேண்டுமென்பதே எங்கள் அவா. இந்த அவாவினை வெற்றிகரமாகச் செயல்படுத்த பொது மக்களும், தொழில் வல்லுநர்களும், தொழில் அதிபர்களும் ஆதரவளிக்க வேண்டும்.

ஊனமுற்றோருக்கு வேண்டியது அன்பும், ஆதரவும் தான்; அனுதாபம் அல்ல. எல்லோரும் ஏதாவது ஒரு ஊனத்தால் பாதிக்கப்பட்டவர்கள் தான். ஆனால் வெளிப்படையாகத் தெரியும் ஊனத்தைப் போக்கும் பணியில் எல்லாம் வல்ல இறைவன் எங்களுக்கு அருள் புரிய வேண்டுகிறோம். நம்பிக்கையே நல்வாழ்வின் கால்கோள். ஆகவே, எல்லோரும் நம்பிக்கையோடு நற்பணி புரிந்து முன்னேறுவோம். □

பார்வையற்றோர்க்குக் கற்பிக்கும் முறை

செல்வி எஸ். ஜெபினால் லியோன்

'எண்ணும் எழுத்தும்
கண்ணெனத் தகும்' என்றும்,
'எண்ணென்ப ஏனை
எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு'—

என்றும் மொழிந்தனர் ஆன்றோர். ஊனக்கண் இல்லாமலும் ஞானக் கண் பெறுதற்கு எண்ணும் எழுத்துமே ஏற்றதொரு சாதனம். என்ன! ஊனக்கண் இல்லாதோர் ஞானக் கண் பெற்றனரா என்று வியப்பு ஏற் படுகிறதா! வேண்டாம். இதோ கல்வி மட்டுமல்ல கலைகள் பலவும் கற்கிறார்கள்.

கண்ணிழந்தோர் சமுதாயத்தின் கண்களாகமாட்டார்கள். அவர்களால் எதுவுமே இயற்ற இயலாது என்று உலகோர் நினைத்தனவெல்லாம் மறைந்துவிட்டன. பார்வையற்ற குழந்தைகளும் பார்வையுள்ள குழந் தைகள் போலவே பள்ளிகளிலும் கல் லூரிகளிலும் படிக்க இயலும்; படிக் கிறார்கள். இது எவ்வாறு என்று நீங்கள் வினவுவது எம் செவிகளிலே ஒலிக்கிறது. அவர்கள் கற்பது கண் கள் கொண்டு அல்ல; கைவிரல்களின் தொடும் உணர்ச்சியைக் கொண்டு. எப்படியென்றால், உடலின் ஓர் உறுப்பு தான் இயங்கும் சக்தியை இழக்க நேரும்போது இதர உறுப்பு கள் அவ்விழப்பை ஈடு செய்யும் விதத் தில் தீவிரமாக வேலை செய்கின்றன. அதற்கு வேண்டிய பயிற்சியும் அளிக் கப்படுகிறது. புலனுடையோர்க்கு அரசியலார் வகுத்த பாடத்திட்டங்கள் அனைத்தையும் அப்படியே கற்று, அரசாங்கத் தேர்வுகளிலும் நூறு விழுக்காடு வெற்றி பெறுகின் றார்கள்.

கற்பிக்கும் முறையை எடுத்துக் கொண்டால் இருசாராருக்கும் ஒரே முறைதான் கையாளப்படுகிறது. (அதிலும் உயர்நிலைப் பள்ளிகளில் முக்கியமாக அதே முறைதான்) ஆனால், அவர்கள் கற்கின்ற எழுத்து முறையில் வேறுபாடு உண்டு. உல கத்தில் அனைத்து பார்வையிழந் தோரின் எழுத்து முறைகளும் எந்த மொழியாயினும் (⠿) அடைப்புக் குறிக்குள் இடப்பட்ட ஆறு புள்ளிக் குள் அமைகின்றன. இந்த எழுத் துக்களை ஆரம்ப நிலையில் உள்ள குழந்தைகளுக்குக் கற்று கொடுப்பது சற்று கடினம்தான். ஆனால் குழந்தைகளுக்கு, பார்வையுள்ளோர் தமிழ், ஆங்கில சாதாரண எழுத்துக் களைக் கற்றுக் கொள்வது போலத் தான் இருக்கும் என்பதில் ஐய மில்லை. சற்றுக் கால தாமதம் உண்டு; அதை நாங்கள் பொருட் படுத்துவது இல்லை. அதைப் போலவே அதைப் படிப்பதும் சற்று வேகம் குறைவாகவே இருக்கும். ஏனென்றால் தொடுபுலன் மூலம் உணர்ந்து படிப்பதால் காலதாமதம் ஏற்படுகிறது. இந்தக் காலதாம தத்தை ஈடு செய்வதற்குத்தான் அர சியலாரே மாணவர்கள், ஆசிரியர்கள் விகிதம் 1:10 என்ற முறையில் அமைய வேண்டும் என்று வரையறை செய்துள்ளார்கள். இதற்கு நாங்கள் அரசியலாருக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

கண் போயினென் கவலை வேண்டா - இட்டும் தொட்டும் காண்பீர் உலகினை.

மேலும், கற்பிக்கும் முறையில் துணைக் கருவிகள் முக்கிய இடத்தைப் பெறுகின்றன அல்லவா? நாங்களும் கூடுமானவரையில் இயற்கைப் பொருட்களைக் காட்டி அறியவைக்கிறோம். (பூ, காய், பழம், இலை போன்றவை) இயற்கையில் கிடைக்காத சிலவற்றை மாதிரி உருவங்கள் செய்து காட்டி விளக்குவோம். கணிதம், விஞ்ஞானம், சமூகவியல் போன்ற எல்லாப் பாடங்களுக்கும் துணைக் கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன. இவைகளை விளக்கும் பொழுது, இயற்கைப் பொருட்களுக்கும், செய்பொருட்களுக்கும் இடையே உள்ள மென்மை, குளிர்ச்சி போன்ற வேறுபாடுகளைக் கூற எப்போதும் நாங்கள் தவறுவதில்லை.

வெறும் ஏட்டுக் கல்வி மட்டுமல்லாது பலவகையான தொழிற் கல்வியும் கற்பிக்கப்படுகிறது. உடற்பயிற்சிக் கல்வி, இசை போன்றவையும் பார்வையுள்ள குழந்தைகள் போலவே கற்கிறார்கள். தட்டெழுத்துப் போன்ற கல்வியும் தொடு புலனைக் கொண்டே நன்கு கற்பிக்கப்படுகிறது. சமையற்கலையும் கூட கற்பிக்கப்படுகிறது.

இவைமட்டுமன்றி சமுதாய அறிவு நன்கு புகட்டப்படுகிறது. சமுதாயத்தில் நல்ல குடிமக்களாக உருவாக வல்லவர்களாக இருந்தால் மட்டும் போதாது, நல்லவர்களாகவும் இருக்க வேண்டும் என்பதற்காக சமயற்கல்வி, ஒழுக்கக் கல்வி ஆகியவை கற்பிக்கப்படுகின்றன. சமுதாயத்தில் தாங்களும் ஒருவர்; ஒதுக்கப்பட்டவர் அல்லர் என்ற உணர்ச்சியை மேற்கூறிய கல்வியின் அடிப்படையிலே சத்துணவாக ஊட்டி வருகிறோம். பலரோடு பழகும் முறை; எதிர்காலத்தில் நடந்துகொள்ளும் முறைகளும் அவர்களுக்குக் கற்பிக்கப்படுகின்றன. நல்ல பழக்கவழக்கங்களும்; பொருட்களைக்

கையாளும் முறைகளும்; உட்காருதல், எழுதல், வணக்கம் கூறல் போன்ற சிறு சிறு செயல்களையும் கூடக் கற்பிக்கிறோம். பார்வை இழப்பை ஈடு செய்ய மற்ற புலன்களுக்கு நல்ல சரியான பயிற்சியும் அளித்து அவர்களை சிறந்த குடிமக்களாக உருவாக்குகிறோம். இவை யாவும் அவர்கள் உள இயல்பு அறிந்தே கற்பிக்கப்படுகிறது. கற்பிக்கும் ஆசிரியர்கள் இதற்கென்று தனிப்பயிற்சி பெற்றிருப்பதால் அவர்களுக்கு அதிக தொல்லை இருப்பதில்லை.

மேற்கூறிய கல்வியெல்லாம் அவர்களுக்குக் கொடுக்கப்படும் பயிற்சியின் மூலமே அமைகிறது. சிறந்த பயிற்சியின் மூலம் அவர்கள் பார்வையுடையோர் போலவே விளங்குகிறார்கள் என்பதை பெருமிதத்துடன் கூறிக் கொள்கிறோம்.

பார்வையற்றோர் மிகவும் சிறந்த அறிவுடையவர்கள்

பொறியிழந்தோர் எல்லாம்
புலனிழந்தார் அல்லர்
நெறியறிந்து நிற்கப் பெறின்—

என்பது பொய்யாமொழியாரின் பொன்மொழி.

அவர் கூற்று இன்று பொய்யா மொழியாதலை நாம் கண்கூடாகக் காண்கிறோம். பொறியில்லாமை அவர் குறை அன்று. பொறியில்லாமைக்கும் அறிவு குறைவிற்கும் எத் தொடர்பும் இல்லை.

பொறியிழந்தோர் இன்று புலனுடையோர் போலவே அனைத்து கல்விகளையும், கலைகளையும் கற்கின்றனர். இதிலிருந்து நாம் அறிவது அவர்களும் நம்மவரில் சிறந்த அறிவுடையோரைப் போலவே அறிவு பெற்று விளங்குகின்றனர் என்பதே. புலனுடையோர்க்கு அளிக்கப்படும் வாய்ப்பும், பயிற்சியும் அவர்களுக்கும் அளிக்கப்பட்டால் அவர்களும் எதையும் கற்று அறிவுடையோராய்த் திகழ்வர்.

ஒரே நிலையில் அறிவுடைய இருசாராருக்கும், ஒரே விதமான பயிற்சி அளித்து வந்தால், புலனுடையோர் அச்செயலைச் செம்மையாகச் செய்து முடிப்பதைவிட புலனற்றவர் சிறப்பாகச் செய்வர் என்று கூறினால் அது மிகையாகாது. இதற்குக் காரணம் என்ன? அறிவும் திறமையும் ஒன்று; ஆயினும் இஃது எவ்வாறு நேர்ந்தது எனில், நாம் புலன் வழியே நம் கவனத்தைப் பல வழிகளில்

"கண்" உடைய எந்திர மனிதன்

மனிதர்களைப்போல் சுற்றுப்புறச் சூழ்நிலையை அறிந்து, வேலை செய்யும் எந்திர மனிதனை அமெரிக்காவில் தயாரித்து வருகின்றனர்.

இந்த எந்திர மனிதர்கள் (Robot) மின் மோட்டார்கள், டேப் ரிக்கார்டர்கள் ஆகியவற்றைத் தயாரிக்கும் திறன் படைத்தவர்கள்.

தற்போது உள்ள எந்திர மனிதர்கள் ஒருவித குறிப்பிட்ட வேலையையே செய்யும் திறன் படைத்தவர்கள். ஆனால் இப்போது தயாரிக்கப்பட்டு வரும் இந்த புதிய எந்திர மனிதர்கள் தங்களைச் சுற்றி என்ன நடக்கிறது என்று அறியும் திறன் உடையவர்கள் என பிரிட்டிஷ் எக்னாமிக்ஸ் ஜெர்னல் கூறுகிறது.

அமெரிக்காவில் பிட்ஸ்பர்க்கில் உள்ள வெஸ்டிங் ஹவுஸ் சோதனைச் சாலையில் இம்மாதிரி எந்திர மனிதர்களைக் கொண்டு நிமிடத்திற்கு 8 மின் மோட்டார்கள் உற்பத்தி செய்யும் எந்திர மனிதர்களைத் தயாரித்து வருகின்றனர். இந்த எந்திர மனிதர்கள் ஒவ்வொரு பாகத்தையும் பார்த்து, சேர்த்து இணைத்து, முழு மோட்டார் ஒன்றைத் தயாரிக்கும் ஆற்றல் பெற்றவர்கள்.



ஊனம் உற்றோரும் வாழத் தக்கவரே!

சிதற விடுகிறோம். அவர்க்கு அக் கவனச்சிதைவு ஏற்பட வழி இல்லை. கவனச்சிதறல்கள் இல்லாததால் செவிப்புலனால் கேட்பவையும், தானே கற்பவையும் அப்படியே பசு மரத்தாணிபோல் உள்ளத்தில் பதிகின்றன.

நினைவாற்றலை எடுத்துக் கொண்டாலும் கூட ஒரே அளவாக, ஒரு குறிப்பிட்ட காலவரையறைக்குள் கற்ற இருசாராரிலும், பார்வையற்றோரே நெடிய நாட்கள் நினைவில் வைத்துப்போற்றுகின்றனர். ஏனென்றால் நாம் கண்ணால் ஒரு நாளில் பலரை, பல பொருட்களைப் பார்க்கிறோம். உரையாடுகின்றோம். நேற்றுப் பார்த்த ஒருவரை இன்று வேறிடத்தில் பார்த்தால்கூட எங்கோ பார்த்தது போல் இருக்கிறதே என்றுதான் நம்மால் நினைக்கத் தோன்றுகிறது. ஆனால், இவர்களோ, ஒரு சிறு குரல் ஒலியாலே உடனே கண்டுணர்கின்றனர். நம்மைவிட கண்டுணரும் ஆற்றல் உடையவரே என்பது அதிலிருந்து தெளிவாகிறது.

மேற்கூறிய கருத்துக்களைப் படிக்கும்போது, புலனிழந்தோரிடையேயும் மிக அறிவாற்றல் குறைந்தவர் உளரே என்றெழலாம். ஏன்? அறிவாற்றல் குறைந்தவர் நம்மிடையேயும் இல்லையா? எனவே, அறிவு பெறுதற்குப் புலன் ஒன்று மட்டும் போதா; பயிற்சியும், ஆர்வமும் தேவை. மிகப் பெரிய சாதனைகளை அவர்கள் செய்ய முடியாமல் இருக்கலாம். ஆனால் நடுத்தரமான நிலையில் நின்று பார்த்தால் அவர்களும் மிகுந்த அறிவுடையோரே!

'கண்ணுடையர் என்பர்
கற்றோரன்றோ! □

அசாதாரணக் குழந்தைகளும வகைகளும

டாக்டர் ப. நடராசன் — திரு. இராம. பாலகிருஷ்ணன்

மக்களாட்சியில் ஒவ்வொரு குழந்தைக்கும் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளும் அடிப்படை உரிமை வழங்கப்பட்டுள்ளது. அதுவே, அக்குழந்தை தன் திறமைக்குகந்த கல்வியைப் பயின்று தற்சார்பு அடைய ஏதுவாகிறது. பொதுவாக, ஆசிரியர்களும்—ஏன் பொது மக்களும்கூட பெரும்பாலான ஒழுங்கான அக்குழந்தைகளைப்பற்றியே மிகவும் கவனம் செலுத்துகிறார்கள். அத்துணை அளவு பிறழ் நிலையில் உள்ள மற்ற குழந்தைகளைப் பற்றி அறியவும் அவர்தம் காலிலேயே நிற்கவும் சமூகம் பொறுப்பேற்கவில்லை என்றால் அது மிகையாகாது!

அசாதாரண குழந்தைகள யார!

குழந்தைகளிடம் பல வகையான குறைபாடுகள் காணப்படுகின்றன. அவை பெரும்பாலும் மரபு நிலைப்பட்டனவாகவோ அல்லது தாயின் வயிற்றில் குழவி வளரும்போது ஏற்பட்ட சூழ்நிலைக் கோளாறுகளிலிருந்தோ அல்லது பிறந்த பின்னர் ஏற்படும் பல காரணிகளிலிருந்தோ எழுபவையாக உள்ளன. தனியனது உடலையும் உள்ளத்தையும் தொடர்புறுத்தும் அவை தனியனையும் சமூகத்தையும் பாதிக்கின்றன. அதனால் சமூகம் அவர்களைப் பிறழ்நிலைக் (Abnormal) குழந்தைகளென ஒதுக்கிவிடுதல் கண்கூடு. பார்வையின்மை, செவிட்டுத்தன்மை, சமூகப் பொருத்தப் பாடின்மை போன்றவை பிறழ்நிலைக் கோளாறுகளாகும். இக்குறைபாடுடையோரே பிறழ்நிலைக் குழந்தைகள் ஆவர்.

பிறழ்நிலைக் குழந்தைகள் எனும் பெயரிலுள்ள 'பிறழ்நிலை' எனும் அடைமொழி வழக்கில் இழிவு, ஏளனம், வெறுத்து ஒதுக்குதல் ஆகிய பொருளைத் தருவதால், வழக்கத்திலிருந்து மாறுபட்ட அவர்களை 'நாம் அசாதாரண (exceptional) குழந்தைகள் என அழைக்கலாம்

ல்ராய்ட்டன் எனும் கல்வியாளர் அசாதாரணக் குழந்தைகளைப் பன்னிரண்டு வகைகளாகப் பிரிக்கிறார். அவை ஆக்கத் திறனுடையோர் (gifted), கல்வி கற்பிக்கக் கூடிய நுண்ணறிவு உடையோர் (educable mentally retarded) பயிற்றுவிக்கக் கூடிய நுண்ணறிவு உடையோர் (trainable retarded), சமூகப் பொருத்தப் பாடற்றவர், மன எழுச்சிக் கோளாறுடையோர் (emotionally disturbed), பேச்சுக் கோளாறுடையோர், செவிடர், அரைகுறைச் செவிடர், குருடர், அரைகுறைக் குருடர், உடல் ஊனமுற்றோர், நாட்பட்ட நோயுடையோர் (Chronic diseases) ஆகியனவாகும்.

இவ்வாறாக வகைப்படுத்திய போதும், ஒரு குழந்தையை எப்போதும் ஒரு குறிப்பிட்ட வகைக்கு உட்படுத்துவது இயலாததாகும். ஏனெனில், ஒரு குழந்தையிடமே

கொடுமை போலத் தோன்றினும் கொடுமை நீக்கும் பணி இதுவாம்

ஒன்றுக்கு மேற்பட்ட நடத்தை அமைப்பு காணப்படலாம்.

1971–72 ஆம் ஆண்டில், ஐக்கிய அமெரிக்காவில் பள்ளி செல்லும் ஐந்திலிருந்து பத்தொன்பது வயதுக்குட்பட்டோரில் 13½% அசாதாரணக் குழந்தைகளெனப் புள்ளி விவரங்கள் எடுத்தியம்புகின்றன. அவற்றில் 3½% ஆக்கத்திறனுடையோர் என மதிப்பிடப் பட்டுள்ளது. மற்றையோர் ஊனமுற்றோர் எனக் கூறப்பட்டுள்ளது. அவர்களில் 0.8% பயிற்றுவிக்கக் கூடிய நுண்ணறிவு உடையவராகவும், 1.5% கற்பிக்கக் கூடிய நுண் அறிவு உடையவராகவும், 2% மனவெழுச்சி மற்றும் சமூகப் பொருத்தப் பாடற்றவராகவும், 3.3% பேச்சுக் கோளாறுடையவராகவும், 6% முழுவதுமோ அன்றி அரைகுறை செவிடராகவும், 0.1% பார்வைக் கோளாறுடையவராகவும், 0.5% உடல் ஊனமுற்றவராகவும், 1.5% எழுதப் படிக்க முடியாதவராகவும் மதிப்பிடப் பட்டுள்ளனர். இத்தகைய அசாதாரணக் குழந்தைகள் இந்தியாவிலும் ஏனைய நாடுகளிலும் சிறப்புக் கல்வி பெறுகின்றனர்.

ஒவ்வொரு நாட்டிலும் சிறப்புக் கல்வியைப் பெறும் அவர்கள் எத்

துணை விழுக்காட்டினர் என்பதை 1971 – ஆம் ஆண்டுக்கான யுனெஸ்கோ அறிக்கை பின்வருமாறு வெளியிட்டுள்ளது. அவையாவன : 8.58% சுவீடன், 4.67% டென்மார்க், 3.98% ஐக்கிய அமெரிக்க அரசு, 3.47% இஸ்ரேல், 3.42% கனடா, 2.61% நெதர்லாண்ட்ஸ், 2.06% செக்கோசுலோவாகியா, 1.88% பிரான்சு, 1.45% நியூசீலாண்ட், 1.24% ஹங்கேரி, 1.15% இத்தாலி, 1.08% இங்கிலாந்து, 0.8% சிலி, .44% ருஷ்யா. 1972-ஆம் ஆண்டில் ஐக்கிய அமெரிக்காவில் மட்டும் பத்து இலட்சத்திற்கும் மேற்பட்ட குழந்தைகளும், கனடாவில் பன்னிரண்டு இலட்சத்திற்கு மேற்பட்டோரும் சிறப்புக் கல்வியைப் பெறுகின்றனர்.

மனித இயல்பு உலகின் எப்பாகத்திலும் மாறுபாடில்லாததெனக்கொண்டால் அமெரிக்காவிலுள்ள அசாதாரணக் குழந்தைகளின் வகைகளின் மொத்த நிகழ்வை ஆதாரமாகக் கொண்டு நம் நாட்டில் உள்ள அசாதாரணக் குழந்தைகளின் எண்ணிக்கையை நாம் ஊகிக்கலாம். அமெரிக்காவின் மொத்த மக்கள் தொகை 28 கோடியெனின் அவர்களுள் 5 லிருந்து 19 வயதுக்குட்பட்ட பள்ளி செல்வோர் 6 கோடியெனக் கணக்கிடப்பட்டுள்ளது. ஆகவே, நம் நாட்டின் மொத்த மக்கள் தொகையான 64 கோடியில் 15 கோடியினர் பள்ளிக்குச் செல்வோரெனத் தோராயமாக மதிப்பிடலாம். அவர்களுள் கிட்டத்தட்ட இரண்டு கோடியினர் அசாதாரணக் குழந்தைகளாக இருக்கலாம். அவர்களின் எண்ணிக்கையைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

புற ஒளி இல்லையாயினும்
அறிவொளி தருவோம்

1.	ஆக்கத் திறனுடையோர்	50,000
2.	முட்டாள்கள்	75,000
3.	மூடர்கள்	11,25,000
4.	பேதையர்	22,50,000
5.	பார்வையற்றோர்	15,000
6.	அரைகுறை பார்வையுடையோர்	1,35,000
7.	காது கேளாதோர்	1,25,000
8.	அரை குறையாகக் காது கேட்பவர்	13,75,000
9.	இளங் குற்றவாளிகள்	27,50,000
10.	உடல் ஊனமுற்றோர்	6,00,000
11.	பெருமூளை பால்ஸி	1,50,000
12.	பேச்சுக்கோளாறு உடையோர்	52,50,000

குழந்தைகளிடம் காணப்படும் குறைபாடுகளை மேற்கூறியவாறு பிரித்தாலும், அதனைப் பின்வருமாறு எளிமைப்படுத்திப் பிரிக்கலாம். அவையாவன: நுண்ணறிவு குன்றியோர், ஆக்கத் திறனுடையோர், இளங்குற்றவாளிகள், உடல்-புலன் குறைபாடுடையோர் ஆவர். இவற்றையே நாம் கீழே விவரித்துள்ளோம்.

குழந்தைகள் யாவரும் பல திறப்பட்டவராகவே உள்ளனர். கற்கும் திறன், புதிய சூழ்நிலைகளுக்குத் தகுந்தவாறு தமது நடத்தையை மாற்றிக் கொள்ளும் திறன், சிக்கல்களை ஊடுருவி ஆராயும் திறன் போன்றவற்றில் தனியாள் வேற்றுமைகள் காணப்படுகின்றன. இவற்றை நுண்ணறிவின் கூறுகளாகக் கொள்ளலாம். இத்தகைய நுண்ணறிவு வேற்றுமைகளைப் பல உளவியல் சோதனைகள் மூலம் நாம் அறியலாம். அச்சோதனைகள் ஒருவனுடைய மன வயதுடன் கால வயதை ஒப்பு நோக்கி அவனது நுண்ணறிவைக் கணிக்கிறது. அதனை நுண்ணறிவு ஈவு எனலாம்.

உலகிலுள்ள மனிதரிடம் நுண் அறிவு எவ்வாறு பரவி அமைந்துள்ளது என்பது பற்றிப் பல ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அவை நேர் நிலைப் பரவலாக (normal distribution) அமைந்து உள்ளதென எடுத்துக் காட்டுகிறது. அவர்களுள் பெரும்பாலோர் சராசரி நுண்ணறிவைக் கொண்டவராக உள்ளனர். மற்றவர்களுள் ஒரு சிலர் மிகக் குறைவான நுண் அறிவையும் மற்றும் சிலர் மிக அதிகமான நுண்ணறிவையும் பெற்றுள்ளனர். பின்வரும் பட்டியல் அதனை மேலும் விளக்குகிறது.

நுண்ணறிவு ஈவு	பெயர்
0-20	முட்டாள்கள் (idiots)
20-50	மூடர்கள் (imbeciles)
50-70	பேதையர் (morons)
70-90	பிற்பட்டோர் (bordlerline)
90-110	சராசரி நுண்ணறிவுடையோர் (average)
110-120	திறனுடையோர் (above average)
120-ம் மேலும்	ஆக்கத்திறனுடையோர்

முட்டாள்கள், மூடர்கள், பேதையர், பிற்பட்டோர் ஆகியவர்கள் அறிவு ஊனமுள்ளோர் எனப்படுவர். அவர்களுள் முட்டாள் எனப்படுபவர் தம்மால் எதையும் செய்ய இயலாதவராவர். ஏனையோருள் மூடரும் பேதையரும் சாதாரணப் பள்ளிக்குச் சென்று பயிலும் தகுதியற்றவராவர். இவருக்கென தனித்தனியாகச் சிறப்புக் கல்வி முறை மூலம் அன்றாட வாழ்க்கைக்கு அவசியமான உணவு உண்ணுதல், உடை உடுத்தல் போன்ற செயல்களைக் கற்பிக்கலாம். மேலும்

களை எடுத்தல், அட்டைப் பெட்டிகள் செய்தல், திரும்பத் திரும்பச் செய்ய வேண்டிய ஒரே மாதிரியான எளிய வேலைகளையும் கற்பிக்கலாம். பிற்பட்டோர் எனப்படுபவர் பள்ளிப் படிப்பில் பின் தங்கியவர்களாவார்கள். இவர்களை மெதுவாகக் கற்போர் எனவும் குறிப்பிடலாம். இவர்களுள் ஒரு சிலர் நுண்ணறிவு அதிகம் உள்ளவராகவும் காணப்படலாம். எடுத்துக்காட்டாக, ஏழைக்குடும்பங்களிலிருந்து வரும் பல குழந்தைகள் பட்டினி, புத்தகமின்மை, படிக்க இடம் இல்லாமை, குடும்பப் பூசல்கள் போன்ற காரணிகளால் வகுப்பில் பின் தங்கி விடலாம். எனவே, இவர்களை இனம் கண்டு உதவ சமூகம் முன்வர வேண்டும்.

ஆக்கத் திறனுடைய குழந்தைகள் மற்ற சாதாரணக் குழந்தைகளைக் காட்டிலும் அறிவுத் திறன் மிக்கவராவர். இருப்பினும், ஏனைய குழந்தைகளைப்போலவே இவர்களும் சமூகத்தில் சரிவரக் கவனிக்கப்படாது அவதியுறுகின்றனர். இவர்களுள் பலர் கவிதை, இசை, நாடகம், ஓவியம் போன்ற கலைகளிலும், மற்றவர், அறிவியல், கணக்கு, இயந்திரத் தொடர்பானவைகளிலும் நாட்டம் கொண்டுள்ளனர். ஆயினும், தம்மைவிடக் குறைந்த திறனுடைய மாணவரோடு கல்வி பயில நேரிடுவதால் மனமுறிவடைகின்றனர். இதிலிருந்து விடுதலை பெற ஒரு சிலர் பகற்கனவிலும், மற்றவர்கள் வெறுப்புணர்ச்சியால் உந்தப் பெற்று அழிவு நடத்தையிலும் ஈடுபடத் துவங்குவர். அதற்குச் சில ஆசிரியர்களின் ஆளுமையும் காரணமாகிறது. எனவே, ஆக்கத் திறனுடைய இவர்களை ஆசிரியரும், பெற்றோரும் அறிந்து ஊக்குவித்தல் இன்றியமையாததாய் உள்ளது

சமூகத்தில் வெளிப்படுத்த முடியாத பால், ஆக்கிரமிப்பு போன்றவைகள் சமூக நலத்துக்கு ஒவ்வாதனவாகும். ஆயினும், இவ்வெழுச்சிகள் மனிதனிடம் இயல்பாகவே உள்ளன. இவை தொடர்பான செயல்களில் குழந்தைகள் ஈடுபடுமானால் அவை பெற்றோராலும் மற்றோராலும் தடை செய்யப்படுகின்றன. இருப்பினும், விருப்பங்கள் தடைப்படும்போது மனமுறிவு எழும். இம்மனமுறிவு தீவிர மனவெழுச்சிகளையும் போராட்டங்களையும் தோற்றுவிக்கும். மனமுறிவினைப் பொறுத்துக் கொள்ளும் திறனில் தனியாள் வேற்றுமைகள் காணப்படுகின்றன. இதனைக் குறைவாகக் கொண்டவர் எளிதில் உளப் போராட்டங்களுக்கு உட்பட்டுச் சமூகத்திற்குப் பொருத்தமற்ற நடத்தைகளைப் பின்பற்றலாம். மனவெழுச்சிக் கோளாறால் விளையும்இவற்றிற்கு எடுத்துக்காட்டாக பொய் பேசுதல், திருடுதல், பள்ளிக்கு வாராமை, பால் தொடர்பான குற்றங்களைச் செய்தல் போன்றவற்றைக் கூறலாம். இவற்றில் ஈடுபடுபவரை இளம் குற்றவாளிகளென (delinquents) அழைப்பர். இவர்களைச் சமூகத்திற்கு உகந்த உறுப்பினர்களாக்கும் நல்ல சூழ்நிலைகளை உருவாக்குவதில் தங்கள் பங்கைச் செய்ய சமுதாயம் கடமைப்பட்டுள்ளது.

உடல் நலம், பேச்சுக் கோளாறுகள், காது கேளாமை, பார்வைக் குறைபாடுகள், உடல் நலம் மிகக் குன்றிக் காணப்படல் போன்ற

வையே உடல்–புலன் குறைபாடுகள் எனப்படுகின்றன. உடற் குறைபாடுள்ள இவர்கள் மற்ற சாதாரணக் குழந்தைகளைப்போல நுண்ணறிவு கொண்டிருக்கலாம். வேறு சிலரிடம் நுண்ணறிவு குறைந்து காணப்படலாம். அதற்காகப் பெற்றோர்கள்கூட அவர்களை இகழ்ச்சியாக நடத்துவது வேதனைக்குரியது. தாழ்வுணர்ச்சியை அவர்களிடம் பெருக்கும் இந் நடத்தைகளைப் பெற்றோரும் மற்றோரும் கைவிட்டு அன்புடன் நடந்து அவர்களது குறைகளைப் பெரிதுபடுத்தாமல் உடல் மன நலத்தை வளர்க்கவும் காக்கவும் வேண்டும். அவர்களுக்கெனத் தனிப்பள்ளிகளும் இதற்கெனப் பயிற்சி பெற்ற ஆசிரியர்களால் நடத்தப்பட வேண்டும்.

வேறுபட்ட குறைபாடுடைய இக் குழந்தைகளின் சொந்த நலனை எண்ணியும், நாட்டின் நலன் கருதியும் பெற்றோர்களும், ஆசிரியர்களும், சமுதாயமும் ஒருங்கிணைந்த கூட்டு முயற்சியில் ஈடுபடின் இக்குழந்தைகள் முன்னேற்றமடையும். இமாலயப் பிரச்சினையான இதற்குத் தீர்வு காணும் நிலையங்களை அமைக்கவும், அவை எண்ணிக்கையில் பெருகவும் நாம் உழைப்போமாக!

PHI

SCIENCE AND TECHNOLOGY

Eastern Economy Editions

a select list

	U. S. Price Rs.	3E Price Rs.
Diseases of Crop Plants in India, 2nd Ed., **Rangaswami**	—	32.00
Living World, The: Exploring Modern Biology, **Macqueen and Hanes**	89.55	20.00
Textbook of Biochemistry and Human Biology, **Talwar**	—	69.00
Assurance Sciences, The: An Introduction to Quality Control and Reliability, **Halpern**	166.50	39.00
Physics: Foundations and Frontiers, 3rd Ed., **Gamow and Cleveland**	161.55	22.00
Electronics for Scientists and Engineers (Devices, Circuits and Systems), **Viswanathan, Mehta and Rajaraman**	—	24.00
Engineering Mechanics: Statics and Dynamics, 2nd Ed., S. I. Unit Ed., **Shames**	215.55	32.00
System Simulation with Digital Computer, **Deo**	—	16.25
Testing of Metallic Materials, **Suryanarayana**	—	16.25
Introductory Methods of Numerical Analysis, **Sastry**	—	22.00

Prentice-Hall of India Private Limited

M-97, Connaught Circus New Delhi-110 001

வியப்பான விழியை இழப்பது விதியினாலா? - ஆய்வுரை

டாக்டர் எஸ். மனோகர் டேவிட்
எம்.பி., பி.எஸ்., டி.ஓ., எம்.ஏ., எம்.எஸ்., (வியன்னா)

கண் மனிதனுக்கு உள்ள உறுப்புகளில் ஒரு வியப்புக்குரிய சாதனம் என்றே கூற வேண்டும். கண்ணின் அருமை கண்ணை இழந்தோருக்குத் தான் தெரியும். கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் என்ற ஒரு பழமொழி உண்டு. விழி இழப்பிற்கு விதியே காரணம் என்ற எண்ணத்தைப் போக்கி மதியினால் அதை நாம் காக்கலாம் என்பதை உணர்த்துவதே இக்கட்டுரையின் நோக்கம்.

22 மி.மீ. நீளமே உள்ள கண்ணைக் கொண்டு நாம் உலகில் உள்ள எந்தப் பொருளையும் பார்க்க முடிகிறது.

கண்ணை மனிதன் இழப்பதற்கு அறியாமையும், ஆற்றல் இன்மையுமே முக்கிய காரணமே ஒழிய விதி யல்ல.

ஒரு பொருளை ஒரு மனிதன் காணும் பொழுது அப்பொருளில் இருந்து வரும் ஒளிக்கதிர்கள் கண்ணின் பல்வேறு பாகங்களைக் கடந்து ரெட்டினா என்று சொல்லப்படும் உள் விழித் திரையிலிருந்து மூளைக்கு அத்தகவல்களைத் தெரியப்படுத்தி மூளை நரம்புகளின் மூலமாக அப்பொருளை எப்பொருள் என்று அறிய முடிகிறது. இந்தக் கண்ணின் கருவிழியிலிருந்து மூளைக்குச் செல்லும் பாதையிலே எங்கு ஒரு குறுக்கீடு இருந்தாலும் கண் பார்வையை இழக்க நேரிடுகிறது.

கண் பார்வை இழப்பதின் காரணங்களை இருவிதமாக நாம் ஆராயலாம். மேற்குறிப்பிட்ட வகையில் கண்ணின் பல்வேறு உறுப்புக்களில் நோய்கள் உண்டாவதன் மூலமாக பார்வை இழப்போம் என்ற வகையிலும் நோய்கள் பல்வேறு கண் உறுப்புக்களை ஏன் தாக்குகின்றன? என்றும் நாம் ஆராயலாம்.

கண்ணின் உறுப்புகளாகிய கருவிழியிலோ லென்ஸ் என்று சொல்லப்படும் கண் கண்ணாடியிலோ, விட்டிரியஸ் என்று கூறப்படும் நீர் அங்கத்திலோ, ரெட்டினா என்று சொல்லப்படும் உள்விழித்திரையிலோ, மேக்குலா என்று சொல்லப்படும் உள் விழித்திரையின் முக்கிய நரம்பிலோ அல்லது கண்ணிலிருந்து செல்லும் மூளை நரம்புகளிலிருந்து செல்லும் நரம்புகளினாலோ பார்வை கெடும். கண் தனது வேலையைச் சரிவரச் செய்ய அது ஒரு குறிப்பிட்ட அழுத்தத்தில் இருக்க வேண்டும். இந்தக் கண் அழுத்தம் அதிகப்படும்போது கிளாக்கோமா என்று சொல்லப்படும் கண் அழுத்த நோயினால் கண் பார்வை கெடுவதற்கு வாய்ப்பு உண்டு.

இக்கட்டுரை ஆசிரியர் கோவை மோசஸ் ஞானாபரணம் கண் மருத்துவ மனையில் தலைமை மருத்துவராகப் பணியாற்றுகிறார்.

கண் பார்வை கெடுவதற்கான காரணங்களை மேற்கூறியவாறு கண் உறுப்புகளைக் கொண்டு ஆராய்வதைக் காட்டிலும் நாம் அன்றாடம் காணும் பல்வேறு நோய்களைக் குறித்து ஆராய்ந்தால் அந்நோய்களைத் தடுப்பதற்கோ அல்லது நீக்குவதற்கோ பயன் உண்டு என்ற முறையில் நாம் நோய்களைக் கொண்டு கண் கெடுவதை ஆராய்வோம்.

கண் கெடுவதின் முக்கிய காரணங்கள்

இக்காரணங்களை ஆராய்வதற்காக ஆறு கண் நோய் கொண்டவர்களை உங்கள் முன் வைக்கிறேன்.

1. பெரியசாமி

ஆலையிலே வேலை செய்யும் இவர், ஒரு நாள் வேலை செய்து கொண்டு இருக்கும் பொழுது ஒரு சிறிய கல் துகள் அவர் கண்ணில் பட்டது. அருகில் இருந்த சக ஊழியர்கள் அத்தூளை எடுக்க உதவினர். மூன்று நாட்கள் கழித்த பிறகு அவருக்குக் கண்ணில் மிகவும் வலி ஏற்பட்டதால் கண் மருத்துவ்ரை அணுகினார். அந்த ஓரிரு நாட்களுக்குள் கண்ணின் கருவிழியில் புண் ஏற்பட்டு அவர் பார்வையை இழக்க நேரிட்டது.

2. லதா

3 வயதுக் குழந்தையான லதா ஏழைக் குடும்பத்திலே ஐந்தாவது பெண் குழந்தையாகப் பிறந்தாள். பெற்றோர்கள், இவளுக்கு அளிக்கும் உணவு டீயும், பன்னும் தான். திடீரென இக்குழந்தை கண்களைத் திறக்க முடியவில்லை என்று அழுது கொண்டே இருந்தது. பெற்றோர்கள் இக்குழந்தையை மருத்துவமனைக்கு அழைத்து வர மூன்று நாட்கள் தாமதித்தனர். அதற்குள் கருவிழி கரைந்து விழியை இழக்க நேரிட்டது.

3. மாரியப்பன்

இவர் வயலிலே வேலை செய்யும் தொழிலாளி. கடந்த சில மாதங்களாகக் கண் பார்வை மங்கி இப்பொழுது இரண்டு கண்ணும் பார்வை தெரியாத நிலையில் இருக்கிறார். அறுவை சிகிச்சையின் மூலமாகப் பார்வை கிடைக்கும் என்று மருத்துவர்கள் நம்புகிறார்கள்.

4. பூவாத்தாள்

மாரியப்பனைப் போல பார்வை குறைந்து கொண்டே வந்து இப்பொழுது இரண்டு கண்களும் பார்வை தெரியாமல் இருக்கிறார். ஆனால் மாரியப்பனைப் போல இவளுக்கு அதிர்ஷ்டம் இல்லை. அறுவை சிகிச்சை செய்தாலும் பார்வை கிடைக்காது என்று மருத்துவர்கள் கூறிவிட்டனர்.

5. நரசிம்மன்

இவர் ஒரு பாங்க் அதிகாரி. திடீரென ஒரு நாள் இவர் பார்வை மங்கி பார்வையை இழந்தார். ஆனால் மருத்துவத்தின் மூலமாக இவருக்கு ஓரளவு பார்வை கொடுக்கப்பட்டது.

6. இராமன்

பல ஆண்டுகளாகக் கண்ணாடி அணிந்துள்ள இவர் திடீரென ஒரு நாள் பார்வையை இழந்தார். மருத்துவர்கள் இவருக்குச் சிறந்த முறையில் அறுவை சிகிச்சை செய்த போதிலும் இவரது பார்வை கிடைக்கவில்லை.

7. ராஜம்மாள்

ஆசைப்பட்டு அத்தை மகனை மணந்தவள் இவள். இவளுக்கு மூன்று குழந்தைகள் பிறந்தன. முதல் மகன் ஏறத்தாழ 10 வயதிற்குப் பிறகு இரவிலே கண் தெரியாமல் துன்பப்பட்டான். 2-ஆவது மகளுக்கு ஓரிரண்டு வயதிலேயே பார்வை மங்கி அறுவை சிகிச்சை செய்யும்படி நேரிட்டது. மூன்றாவது குழந்தையோ பிறக்கும் பொழுதே விழியிழந்து பிறந்தது.

மேற்கூறிய அன்பர்கள் கருத்தாழம் மிக்க கற்பனையில் உதித்தவர் அல்லர். பல்வேறு நாட்களிலே மருத்துவ மனையில் சிகிச்சை பெறுவதற்காக வந்தவர்கள்தான் இவர்கள். இவர்களின் மூலமாக பார்வை கெடுவதின் காரணங்களை நாம் ஆராய்வோம்.

இன்று இந்திய நாட்டிலே ஏறத்தாழ 90 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் விழியிழந்த நிலையிலே உள்ளனர். இவற்றில் ஏறத்தாழ 50 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் விழியிழப்பதற்கு அறியாமையும், ஆற்றல் இன்மையுமே காரணம். இவற்றில் 25 இலட்சத்திற்கும் மேற்பட்ட குழந்தைகள் வைட்டமின் ஏ—சத்து இல்லாத ஒரே காரணத்தினால் பார்வை இழக்கிறார்கள். நிவர்த்திக்க முடியாதபடி விழியிழந்தோர் என்று கூறப்படும் பட்டியலிலே ஏறத்தாழ 40 இலட்சம் மக்கள் இருப்பதையும் இவற்றுள் 80% மக்கள் சத்துணவின் மூலமாகவும், நல்ல பராமரிப்பின் மூலமாகவும், அறுவை சிகிச்சையின் மூலமாகவும் பார்வை பெற்றிருக்கலாம் என்பதையும் காணும் பொழுது நமது வருத்தம் அதிகரிக்கிறது.

மேற்கூறிய ஏழு எடுத்துக்காட்டுகளில் பெரியசாமியும், லதாவும் பார்வை இழப்பதற்குக் கருவிழியில் ஏற்பட்ட புண்களே காரணம். 30 பைசாகூட பெறாத வைட்டமின்—ஏ குறைவினால் லதாவின் கருவிழி கரைந்து அவள் பார்வையை இழந்தாள். இயற்கை வைட்டமின்—ஏ சத்தினை எல்லோரும் பயன்உறும் வகையில் அதிகமாக அளித்துள்ளது. இச்சக்தி நிறைந்து காணப்படுவது பச்சைக் காய்கறிகளும், கீரைகளிலும் உள்ளது. எளியவர்களுக்கும்எளிதில் கிட்டும் வகையில் அமைந்துள்ள கீரைகளை நாம் சரிவரப் பயன்படுத்தாததினால் விழிகளை இழக்கிறோம்.

பெரியசாமி கண்களில் பிசிறு விழுந்த உடனே மருத்துவரை அணுகி இருந்தால் சுகாதார முறையிலேயே அவருடைய பிசிறு அகற்றப்பட்டிருக்கும். ஆனால் சிறிய துகள்தானே என்று அலட்சியமாக இருந்ததினால் அவர் கருவிழியில் புண்பட்டு அவர் பார்வையை இழக்க நேரிட்டது. கருவிழியிலே ஏற்படும் இம்மாதிரியான புண் பெரியசாமி போன்ற ஆலைத் தொழிலாளர்களுக்கு மாத்திரம் அல்ல. வயலிலே வேலை செய்யும் தொழிலாளர்களுக்கும், தோட்டத்திலே வேலை செய்யும் தொழிலாளர்களுக்கும், மாடு பிடிக்கும், கிட்டிப்புள் போன்ற விளையாட்டுகளில் ஈடுபடும் அன்பர்களுக்கும் ஏற்படுவதைக் காண்கிறோம். இம்மாதிரி ஏற்படும் விழி இழப்பும் தடுக்கப்படக் கூடியதே.

கண் லென்சில் புரை நோய் ஏற்பட்டுக் கண்இழந்தோர் 50%க்கு

மேற்பட்டோர் எனக் கூறலாம். ஆனால் அதிர்ஷ்டவசமாக இப் புரையை அகற்றி கண் கண்ணாடி அணிவதன் மூலமாக இவர்கள் முழுப்பார்வை பெறுவதற்கு வாய்ப்பு உள்ளது. ஆனால், கண் சிறிது மங்கலாக இருந்தால் அது புரை நோய்தான் என்று தாங்களே எண்ணி கண் நோய் முற்றிய நிலையில் கண் பார்வை தெரியாத நிலையில் வருவது மிகவும் ஆபத்தான நிலையாகும். பூவாத்தாள் அவ்வாறுதான் எண்ணினாள். ஆனால், அவளுக்கு உள்ளதோ புரை நோய் அல்ல, கண்கிளாக்கோமா என்று சொல்லப்படும் கண் அழுத்த நோய். இக்கண் அழுத்த நோயை ஆரம்ப நிலையிலேயே கண்டிருந்தால் மருந்தின் மூலமாகவோ அல்லது அறுவை சிகிச்சை மூலமாகவோ பார்வை மறைவதைத் தடுத்து இருக்க முடியும். ஆனால் அந்தோ! பூவாத்தாள் இனி என்றுமே இயற்கையின் இன்ப விளையாட்டைக் காணவே முடியாது.

நரசிம்மன் போன்ற அன்பர்களுக்குத் திடீரெனப் பார்வை குறைவதற்கு முக்கிய காரணம் டையாபட்டீஸ் என்று சொல்லப்படும் சர்க்கரை நோயாகும். சர்க்கரை நோயினால் பார்வை இழப்போர் ஏறத்தாழ 10%க்கு அதிகமாக இருப்பதால் 40 வயதைக் கடந்தவர்கள் தங்கள் கண்ணை மருத்துவரிடம் பரிசோதிப்பது அவசியமாகிறது.

சிறுவயதிலிருந்தே கண்ணாடி அணிந்துள்ள ராமன் போன்ற அன்பர்கள் பார்வை இழப்பதற்கு முக்கிய காரணம் கண்ணின் உள் விழித்திரை (retinal detachment) கண்ணின் மற்ற பகுதியிலிருந்து பிரிந்து விடுவதாலே ஆகும். இதைத் தடுப்பது பெரிதல்ல. கண்களில் அதிக காலமாகக் கண்ணாடி அணிந்தவர்கள் கனமான பொருட்களைத் தூக்குவதிலும், கடினமான உழைப்பு மிகுந்த வேலைகளில் ஈடுபடாது இருப்பதும் நல்லது.

ராஜம்மாள் போன்ற பெண்மணிகளுக்கு ஏற்படும் இத்துன்பம் வராமல் தடுக்கக் கூடியது ஒன்றுதான். குடும்பத்திற்குள்ளேயே மணம் செய்து கொள்ளும் தம்பதிகளின் மக்களுக்குப் பிறப்பிலேயே வரும் கண் கோளாறுகள் மாத்திரம் அன்றி உடலில் பல்வேறு உறுப்புகளிலும் கோளாறு ஏற்படும் என்பது நன்கு தெரிந்ததே.

ஆகவே குடும்பத்திற்குள் மணம் செய்து கொள்வதைத் தடுத்தால் பிற்காலச் சந்ததியினர் நோய் இல்லாத சந்ததியினராய் இருப்பதற்கு உதவும்.

கண் கெடுவதற்கு முக்கிய காரணங்கள்

கேட்டராக்ட் என்னும் புரை நோய், கிளாக்கோமா என்னும் நீர் அழுத்த நோய், டையாபட்டீஸ் என்னும் சர்க்கரை நோய், கண்களில் புண் விழுந்து கருவிழியை இழத்தல், டிரக்கோமா என்று சொல்லப்படும் நோய், வைட்டமின்-ஏ சத்து குறைவு ஒரே குடும்ப மணத்தினால் உண்டாகும் பிறப்புக் கோளாறு. மேற்கூறிய காரணங்களை ஆயும் பொழுது நாம் கண்ணை இழப்பது விதியினால் அல்ல என்பது நன்கு புரிகிறது. மதியினால் கண்ணைக் காத்து வாழும் நாட்களிலே ஆண்டவன் உலகிற்கு அளித்துள்ள உன்னதப் படைப்புகளை நாம் கண்டு மகிழ்வோமாக. □

வினா??? ← → விடை!!!

திரு. கே. பரமேஸ்வரன், திரு. ஆர். செல்வன், ஈரோடு

வினா குவிலென்ஸ் வழியாக சூரிய ஒளி செல்லும்போது ஒளி குவியும் புள்ளியில் அதிக வெப்பம் உண்டாகிறது. அப்படி ஒரே புள்ளியில் பல அதிகப்படியான எண்ணிக்கையில் குவிலென்ஸ்களைக் கொண்டு ஒளியை குவிக்க முடியுமா? அப்படி குவிந்தால் அப்போது அப் புள்ளியில் அதிக வெப்பம் ஏற்படும் அல்லவா?

பேராசிரியர் எஸ். இலக்குமிகாந்தன்

விடை குவிலென்சுகளால் சூரிய ஒளியை குவிக்க முடியும். ஆனால் சூரியன் நகர்ந்துகொண்டே இருப்பதால், ஒவ்வொரு லென்சிலும் சூரிய ஒளி விழும் கோணம் மாறுபட்டுக்கொண்டே இருக்கும். சூரிய ஒளியில் பெருமளவு உள்ள வெப்பக் கதிர்களை, லென்சுகள் உட்கொள் கின்றன. எனவே ராக்சால்ட் (rock salt) படிக லென்சுகள் தேவைப் படுகின்றன.

திரு. கே. பரமேஸ்வரன், திரு. ஆர். செல்வன், ஈரோடு

வினா குவிலென்ஸ் அளவில் பெரியதானால் அதிக ஒளியை தாங்கி குவிக்க முடியுமா? வெப்பம் புள்ளியில் அதிகமாக கிடைக்குமா? குவிலென்ஸின் தடிமம் மாறுபட்டால் ஒளி குவிதல் மாறுபடுமா? எப்படி?

பேராசிரியர் எஸ். இலக்குமிகாந்தன்

விடை குவிலென்ஸ் அளவில் பெரிதானால், நடுப்புறம் வழியாகச் செல்லும் கதிர்கள் ஒரு குவியத்தையும், வெளிப்புறம் வழியாகச் செல்லும் கதிர்கள் மற்றொரு குவியத்தையும் கொள்கின்றன. குவியம் இரண்டாகப் பிரிந்தால் வெப்ப ஆற்றல் குறையும். குவிலென்ஸ் தடிமம் அதிகமானால் அதிக வெப்பத்தை உட்கொண்டுவிடும். தடிமம் அதிகமான கண்ணாடி லென்சுகள் வெப்பத்தால் விரிசல் அடைந்து உடைந்துவிடும். தடிமம் குறைவான லென்சுகளே விரியாமல் செயல்படும்.

திரு. கே. பரமேஸ்வரன் திரு. ஆர். செல்வன், ஈரோடு

வினா சூரிய ஒளியினின்று மின்சாரம் தயாரிக்கும் சிலிகான் முறை பற்றி விளக்கவும்.

பேராசிரியர் எஸ். இலக்குமிகாந்தன்

விடை சிலிகன் ஒரு பகுதிக் கடத்தி (semi conductor) சாதாரண வெப்ப நிலையில் சிலிகன் மின் கடத்தாப் பொருள். சூரிய ஒளி விழும் பொழுது, சிலிகன் படிகத்தில் எலெக்டிரான்கள் விடுவிக்கப்படு கின்றன. படிகம் மின்சாரத்தைக் கடத்துகின்றது. ஒரு அமிலத்தில் வேறுபட்ட இரண்டு உலோகத்தண்டுகளை நுழைத்தால், வெளிச் சுற்றில் மின்சாரம் வரும். இது வால்டா கலம் (volta cell) என்ற அமைப்பு. இதேபோன்று சிலிகன் படிகத்தின் மீது சூரிய ஒளி விழும்பொழுது வெளிச் சுற்றில் மின்சாரம் ஓடும். இதை ஒளி வால்டா கலம் (photo voltaic cell) என்று அழைப்பார்கள்.

இதுவே அன்றி வெப்பமின் விளைவாலும் (thermo electric effcct) மின்சார அழுத்தத்தை உண்டாக்கலாம்.

With the best compliments from

RAMESH IRON & STEEL COMPANY

Dealers: MS ROUNDS, TOR STEEL & ANGLES

11/112-D Thiruvenkataswamy Road
R S PURAM :: COIMBATORE 641 002
Phone 22903

With the best compliments from

Phone: 25895 **Grams: "IMANI"**

Orient Hardware & Tools Corporation

GENERAL HARDWARE, TOOLS & MACHINERY MERCHANTS, ENGINEERS
MILL, MINING, RAILWAY & FACTORY STORES SUPPLIERS

145, Dr. NANJAPPA ROAD (JAIL ROAD)
Post Box No. 1438
COIMBATORE-641 018

சில முத்துக்கள்

கலைக்கதிர் 1949 ஜனவரி
"செந்தமிழ் நாடு திருந்தக் கலைக்கதிர் நீ
வந்துநிதம் வாழ்க வளர்ந்து"

கவிமணி **தேசிக விநாயகம் பிள்ளை**—வாழ்த்து

"சென்னையில் உள்ள மூர்மார்க்கட்டை, மூரங்காடி என்று வழங்கும் நாள் எந்நாளோ"

டாக்டர். **ரா. பி. சேதுப்பிள்ளை**—நாட்டுத்தமிழ்

"கதைக்கும் பாட்டிற்கும் மூன்று வகையான தொடர்பு இருத்தல் கூடும். முதல் வகையில் பாடல்கள் தோன்றுதற்குரிய உணர்ச்சிக்கு இக் கதைகளின் வரலாறு நேரே காரணமாக அமைவது. "நாஞ்சில் நாட்டு மருமக்கள் வழி மான்மிய"த்தை இவ்வகைக் கதைக்கு உதாரணமாகக் கூறலாம். இரண்டாவது வகையில் ஏதேனும் ஒரு கருத்து அல்லது உணர்ச்சியை வெளியிடுவதற்குக் கவிஞன் வியாஜகமாக ஏதேனும் ஒன்றை எடுத்துக்கொள்வது. பாரதியின் 'ஒளியும் இருளும்' என்ற பாடல் இதற்கு ஒரு சிறந்த உதாரணமாகும். மூன்றாவது வகையில் கவிஞன் தனது கவிதைச் சித்திரத்தை வரைவதற்குரிய திரையாகக் கதை அமைவது."

பேராசிரியர் **எஸ். வையாபுரிப் பிள்ளை**—கதைப் பாட்டு

"விஞ்ஞானம் ஒரு செயலாகும். அச்செயலில் வெற்றி பெறுதற்கு உண்மை மிகவும் இன்றியமையாததாகும். மற்றெல்லாவற்றிற்கும் ஒரு குறிக்கோளை உடைய உண்மை ஒரு கருவியாக அமைகிறது. ஆனால். உண்மையே குறிக்கோள் அன்று. ஆனால் விஞ்ஞானத்திற்கு வாய்மையே குறிக்கோள்."

டாக்டர். **ஜி. ஆர். தாமோதரன்**—விஞ்ஞானமும் விஞ்ஞான மனப்பான்மையும்

"எனவே, தொல்காப்பியம் இன்றைக்கு 4200 ஆண்டுக்கு முன்னும் திருக்குறள் 3200 ஆண்டுக்கு முன்னும் எழுதப்பெற்றன என்பதே கொள்ளற்பாலது"

பேராசிரியர் **அ. இராமசாமிக் கவுண்டர்**—திருவள்ளுவர் காலம்

"தமிழ்க் கவிதையின் எதிர்காலமானது தமிழ் வசனத்தின் எதிர் காலம் போன்று அத்தனை தூக்குடையதாக இருக்காது. தோன்றுகிற வகைகள் சற்றுக் குறைவாகத் தோன்றும். அவற்றில் பாவனை மணம் தளர்ந்து, பகுத்தறிவு மணமே பாரித்து நிற்கும். மற்றும் உண்மையை உணர்ந்த உணர்வினின்றும் தோன்றாது உண்மையை உணர்த்தும் ஊக்கத்தினின்றே பலவும் தோன்றுதல் கூடும். பிரச்சார ரகங்கள் மலியும்".

பேராசிரியர் **அ. முத்துசிவம்**—தமிழ்க் கவிதையின் எதிர்காலம்

"உலகம் பலவகை என்று உணராத ஒருவன் தனக்கு விருப்பமான பகுதியில் கலந்தும், வெறுப்பான பகுதியில் ஒதுங்கியும் வாழ முற்படுவான்; அவன் உலகில் ஒரு மூலையில் வாழலாம்; ஆனால் உலகை ஆராய முடியாது. அவ்வாறே இலக்கிய ஆராய்ச்சியும் வெவ்வேறு வகையாக அமையக் கூடும் என்று உண்மை உணராத வரும், ஆராய்ச்சியில் தலைப்படுதற்கு முன்பே தவற நேரும். அவரும் இலக்கியத்தைக் கற்க முடியும்; ஆராய முடியாது"..

டாக்டர். **மு. வரதராசனார்** 'உள்ளம் பலவகை'

"இயற்கையில், நாம் அற்பமென்று கருதும் பல உயிரினங்கள் தேனீக்களைப் போன்று அரிய செயல்கள் நிகழ்த்துகின்றன. இச் செயல்கள் அனைத்தும் மக்களுக்குச் சிறந்த படிப்பினை நல்குவனவாகும்."

பேராசிரியர் **போ. ரா. கிருஷ்ணமூர்த்தி** நாயுடு "தேனீக்களின் மொழி"

"கலைகளின் முக்கிய நோக்கம் இன்பத்தை ஊட்டி, அத்துடன் உணர்ச்சிகளைத் தட்டி எழுப்பி, அறிவைத் துலக்கி, சிந்தனையைச் சுத்தப்படுத்தி, அன்பைப் பெருக்கி அமைதிக்கு வழிகாட்ட உதவ வேண்டும்."

கவிஞர் திரு. **நாமக்கல் வே. இராமலிங்கம் பிள்ளை**

"வேண்டாமை யன்ன விழுச் செல்வம் ஈண்டு இல்லை,
யாண்டும் அஃது ஒப்பது இல்" என்ற குறளால் தமிழன் கண்ட அப்பெருஞ் செல்வம், விழுமிய செல்வம், உலகின் துயர்போக்கும் செல்வம் மனித சமுதாயத்தின் துயர் துடைக்கும் செல்வம், ஒப்புவமை இல்லாத செல்வம் எது என அறிகிறோம்"

பேராசிரியர் **அ. ச. ஞானசம்பந்தம்** 'தமிழன் கண்ட செல்வம்'

பதிவு எண்.
TN / CB / 11

செய்திகள்

கலைக்கதிர்
ஜனவரி 1981

கனவு?

கனவில் பயங்கரக் காட்சிகள் தோன்றினால், "வெறும் கனவு தானே"? என்று அலட்சியமாக இருந்துவிடக் கூடாது. சில காலம் கழித்து வரக்கூடிய நோய்களுக்கான எச்சரிக்கை கனவுக் காட்சிகளில் அடங்கி இருக்கிறது என்று சோவியத்து விஞ்ஞானிகள் கண்டறிந்திருக்கிறார்கள்.

புகழ்பெற்ற மருத்துவர் கேலன், தன்னிடம் சிகிச்சைக்கு வந்த ஒரு நோயாளிக்கு ஏற்பட்ட விசித்திரமான அனுபவத்தைப் பற்றிக் கீழ்க்கண்டவாறு எழுதியுள்ளார்.

"அவர், தமது கால், கல்லாக மாறி விட்டதாகக் கனவு கண்டார். சில தினங்களுக்குப் பிறகு அவருடைய கால், முடக்கு வாதத்தால் செயலிழந்து போய்விட்டது".

'கனவு—நோய்' தொடர்பு குறித்துப் பெரிதும் ஆய்வு நடத்திய நரம்பியல் நிபுணர் வாஸிலி கஸட்கின் இன்னொரு அனுபவத்தை விவரித்துள்ளார்.

"சிவில் எஞ்சினியர் ஒருவர். ஒரு நாள் இரவு அவர் கண்ட கனவில், முற்றுப்பெறாத ஒரு கட்டடத்தின் தளம் 'தட தடவென' இடிந்து விழுந்தது. சிதறிய கற்கள் அவர் மார்பைத் தாக்கின. அலறித் துடித்து, தூக்கத்திலிருந்து விழித்தார். கனவுதானே என்று, பிறகு கவலைப்படாமல் இருந்தார். ஆனால் அவரை மருத்துவ சோதனை செய்து பார்த்ததில், அவருக்கு இருதய நோய் ஆரம்பமாகி இருக்கிறது எனத் தெரிய வந்தது".

இவ்வாறு இரவு நேரக் கனவுகளில் தோன்றும் காட்சிகளுக்கும், பின்னர் வரும் நோய்களுக்கும் தொடர்பு இருக்கிறது என நிபுணர்கள் கருதுகிறார்கள்.

இதற்கு அவர்கள் தரும் விளக்கம் என்ன?

நம்மைச் சுற்றித் தெரியும் காட்சிகள், ஏற்படும் சப்தங்கள் முதலியவற்றால் மட்டும் நம் மூளையில் சலனங்கள் தோன்றுகின்றன என்று நினைப்பது சரியல்ல.

நம் உடலுக்குள், நுண்ணிய உறுப்புக்களில்—அவற்றின் அசைவுகளில், மெல்லிய ஓசைகளில்—ஏற்படும் சிறு சிறு மாற்றங்கள்கூட, பெருமூளைப் பகுதியில் சலனத்தை உண்டாக்குகிறது. அந்தப் பகுதியில் மிகமிக நுட்பமானது கண்ணுடன் தொடர்பு கொண்ட நேத்திர மண்டலம்.

உடலுக்குள் தோன்றும் சிறுசிறு ஒலி மாற்றங்களுக்கு உருவம் தோன்றி நேத்திர மண்டலத்தில் போய்ப் பதிகிறது. அதன் விளைவுதான் கனவுக் காட்சிகள்.

இநத முறையல், ஓராண்டுக் கழித்து வரக்கூடிய நோய்க்கான முன் எச்சரிக்கைகூட இந்தக் கனவுக் காட்சிகளில் அடங்கி இருக்குமாம்.

உலகம் வாழ!

"நீ ஒருவருக்குக் கொடுத்தால் அது உனக்கே நீ கொடுத்துக்கொண்டதாகும். நீ ஒருவரைத் திட்டினால், ஏமாற்றினால் உன்னையே திட்டியதும் ஏமாற்றிக்கொண்டதும் ஆகும். நீ பிறருக்குத் தீங்கு செய்யும்போது உனக்கே தீங்கு செய்து கொள்கிறாய். ஏனென்றால் பிறர் வேறு நீ வேறு அல்ல".

பகவான் இரமணமகரிஷி



CUSTOM BUILT FUNCTIONAL RUBBER PARTS

AND ALSO REPLACEMENT RUBBER COMPONENTS FOR PLANT AND MACHINERY CAPABLE OF HANDLING ANY MECHANICAL FUNCTION AS WELL AS RESISTANCE TO HIGH TEMPERATURE FLUIDS AIR AND ADVERSE ATMOSPHERIC CONDITIONS

HYDRAULIC & PNEUMATIC SEALS, GASKETS, QUAD RINGS, STATORS, LIPSEALS, DOWTY SEALS, EXPANSION JOINTS, CHANNELS, CORDS, BLOCKS, GROMMETS, WIPER SEALS, ANTI-VIBRATION MACHINE MOUNTS & SHOCK PADS (IN NITRILE, NEOPRENE, SILICONE, VITON, POLYURETHANE, BUTYL, POLYACRYLIC & NATURAL RUBBER)



EXTRUDED PROFILES RUBBER SHEETS

trap **techno rubber & allied products**

148-A, Dr. NANJAPPA ROAD,
COIMBATORE-641018.

CALL: 35626 CABLE: TRAP

RUBBER SEALING RINGS
(OIL & HEAT RESISTANT)
TYRE COUPLINGS
&
COPPER GASKETS
(FOR DIESEL GENERATORS)
SKL, SKODA, DEUTZ, KIRLOSKAR, CUMMINS, RUSTON etc.,

CONTACT:

OILSEAL & GENERAL AGENCIES

148-A, Dr. NANJAPPA ROAD,
COIMBATORE-641018.
CALL: 35626 CABLE: FLUIDSEAL

Circlips & Spring Dowel Pin

WIDE VARIETY OF THE SHELF:



உரிய காலத்தில் வரியைக் கட்டிவிட்டால்

- வட்டி செலுத்துவதையும் தண்டனையையும் தவிர்க்கலாம்.
- பதற்றத்தையும் கவலையையும் தவிர்க்கலாம்.
- நல்லதொரு குடிமகனெனும் கருத்தை ஏற்படுத்தலாம்.
- நாட்டின் கட்டுமானத்திற்குத் தேவையான வளத்தை ஏற்படுத்துவதில் பங்குபெற்ற பெருமை பெறலாம்.

வரியைச் செலுத்த கடைசி தேதி உண்டு;

ஆனால்

கடைசித் தேதி வரையில் காத்திருப்பானேன்

தாமதம் பெரும்பாலும் தவற்றுக்கு வழி கோலுகிறது.

வரியைச் சரியாகக் கட்டி நாட்டின் வலுவைக் கூட்டுங்கள்

வெளியிட்டவர் :

டைரக்டர் ஆஃப் இன்ஸ்பெக்ஷன்
(ரிஸர்ச் ஸ்டாடிஸ்டிக்ஸ் & பப்ளிக்கேஷன்)
இன்கம் டாக்ஸ் டிபார்ட்மெண்ட்
நியூ டில்லி - 110 001

டிஏவிபி 80 / 260

Manufacturers of

ALL KINDS OF BAKELITE ARTICLES
and
ELECTRIC MOTOR TERMINAL BOARDS
1/4 H. P. to 25 H. P.

Phone: 35253

ANDAVAR ENGINEERING CORPORATION

SOBA NAGAR * K. R. PURAM * GANAPATHY

COIMBATORE-641 006

With best compliments from

Phone: 32346

M/s. TIRUMURUGAN MINERAL INDUSTRIES

117, SATHY ROAD * GANDHIPURAM

COIMBATORE - 641 012

Factories at RAJAHMUNDRY - 3 A. P. Phone: 3810
KOTHAGUDEM - 1 A. P. Phone: 198

Manufacturers & Dealers in:

GRAPHITE PLUMBAGO, BENTONITE, STEAM COAL, CORE BINDER & FIRECLAY POWDERS, CRUCIBLES, FIREBRICKS, FERROSILICON FERROMANGANESE, CUPOLA FLUXES ETC.

Wishing you the best compliments of the Season

and

A Happy and Prosperous

New Year

Rama & Co.,

258, METTUPALAYAM ROAD COIMBATORE

PHONES : 22503, 22530

A REPUTED HOUSE FOR QUALITY BUILDING MATERIALS

DEALERS

- ✱ Commonwealth Basel Tiles, Mission Floorings, Hourdis
- ✱ Asian, I. C. I, Addison, Ramson, Sigma Paints
- ✱ Veeraj, Bharat Amar Brushes
- ✱ Everest, Asbestos Cement Sheets
- ✱ M S Rounds, Tor Steel & Sheets
- ✱ Natraja Mortice Locks & Furniture Fittings
- ✱ Natraja Godrej Lakshmi Flush Door Locks
- ✱ Famous NADIA Furniture Fittings
- ✱ Janta Cornet, Imex Fittings
- ✱ Aluminium Sections & Fittings
- ✱ Plywoods & Hardboards
- ✱ Cement, Cement Products & White Cement
- ✱ Band saw Blades & Door Closers
- ✱ Formica & Fevicol
- ✱ All kinds of Fancy Door Handles

ராமா அன் கோ

P. B. No. 1022

மேட்டுப்பாளையம் ரோடு - கோயமுத்தூர்-641 002

கிராஞ்சு : ராமா & கோ :: மேட்டுப்பாளையம் **Phone: 559**

SRI KARTHIKEYA SPINNING & WEAVING MILLS LIMITED

COIMBATORE 641 015

Spinners of Best Quality Yarns

COTTON YARNS Counts Available Combed & Carded
100s 80s 60s 40s

S. F. YARNS 31s 2/40s

IN HANKS, CONES AND HOSIERY.

Grams: "GANGA" COIMBATORE Phones: 87-216
87-247